கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4278 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா
Eelamurasu Weekly
முரசு: 4 25 ஜூன் – 01 ஜூலை 1998 முழக்கம்: 180

Sakthy Video
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont:- 0181-6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se-13
Tel: 0181-2979432

## மூன்றுமுறிப்பை நோக்கி முன்னேற முயன்ற இராணுவம் விடுதலைப் புலிகளால் விரட்டியடிப்பு

(22.06.98)

மூன்று முறிப்பு பகுதியூடாக நேற்றுப் பகல் ஜெயசிக்குறுய் துருப்புக்கள் மேற்கொண்ட முன்னேறும் முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. முன்னேறிவந்த இராணுவத்தினர் மீது உக்கிரத் தாக்குதல்களை நடாத்தி அவர்களை அவர்களது பழையநிலைகளுக்கே புலிகள் விரட்டியடித்தனர்.

நேற்றுப் பகல் 10.15 மணியளவில் எம்.ஐ 24 ரக உலங்குவானூர்திகள், கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் என்பன பலத்த தாக்குதல்களை நடாத்த கடும் பீரங்கி, எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டவாறு மூன்றுமுறிப்பு பகுதி ஊடாகச் சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறும் முயற்சி ஒன்றை மேற்கொண்டனர்.

முன்னேறிவந்த படையினரை எதிர்கொண்ட விடுதலைப் புலிகள், அவர்கள் மீது ஒரு மணி நேரம் பதிலடித் தாக்குதல்களையே மேற்கொண்டு விரட்டியடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## – மாங்குளம் கிழக்குப் பகுதியில் –

# மூன்றாம் நாளாக கடும் சண்டை

# முதல் நாளில் 50 படையினர் பலி!

### மூன்றுமுறிப்பில் சிக்கிய படையினர்

(22.06.98)

மாங்குளம் நகரின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மூன்றுமுறிப்பு பகுதியின் காட்டுப் பிரதேசங்களூடாக நகர்வதற்கு படையின் உயரதிகாரிகள் திட்டமிட்டனர். இவர்களது திட்டத்தை முன்கூட்டியே உணர்ந்திருந்த விடுதலைப் புலிகள் காட்டுப்பகுதி ஒன்றில் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கு பொறி ஒன்றினை ஏற்படுத்தி காத்திருந்தனர்.

இன்றுகாலை 9.30 மணியளவில் முன்னேற முயன்ற இராணுவத்தின் ஒரு பகுதி புலிகளின் பொறியினுள் சிக்கிக் கொண்டது. பலத்த இழப்புக்களுடன் உயிர்தப்பிய இராணுவம், தப்பி ஓடிவிட்டது. இச் சண்டையில் இரண்டு விடுதலைப் புலிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. சில ஆயுத தளவாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

### மூன்று டாங்கிகள் அழிப்பு – ஒன்பது இராணுவத்தின் சடலங்கள் மீட்பு

(23.06.98)

மாங்குளம் கிழக்குப் பகுதியில் மூன்றாவது நாளாக சிறீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து சண்டை இடம்பெற்றுவருகிறது. சனிக்கிழமை இடம்பெற்ற உக்கிரச் சண்டையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கையிலான துருப்பினர் காயமடைந்தனர். அதேசமயம் ஒரு டாங்கி முற்றாக அழிக்கப்பட்டதுடன் இரண்டு டாங்கிகள் பலத்த சேதமடைந்துள்ளன. அத்துடன் ஒன்பது இராணுவத்தினரின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சனிக்கிழமை விமானப் படையின் உதவியுடன் மாங்குளத்தின் கிழக்குப்பகுதி ஊடாக, பெரும் எண்ணிக்கையிலான படை நகர்வு ஒன்றை சிறீலங்காப் படைகள் ஆரம்பித்தன. விமா

(☞ 2ம் பக்கம்)

### சிறீலங்கா விபச்சாரத்துக்கான நாடு $2.5 மில். சிறீலங்கா அரசு பிரச்சாரம்

சிறீலங்கா அரசினால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்வதற்கென 2.5 மில்லியன் டொலர்கள் செலவில் பணிக்கு அமர்த்தப்பட்ட எம்.எஸ்.எல் என்னும் சர்வதேச பொதுசன தொடர்பு நிறுவனம் சிறீலங்காவை பாலியல் நடவடிக்கைகளுக்கு ஏற்றநாடு என பிரச்சாரம் செய்துள்ளமை கொழும்பில் பலத்த சர்ச்சைகளை கிளப்பியுள்ளது. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சினாலும், உல்லாசப் பயணிகளுக்கான அமைச்சினாலும் தெரிவு செய்யப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்ட ஜேர்மனிய நிறுவனமான எம்.எஸ்.எல் ஆபாச படங்கள் அடங்கிய ஒலியிழை நாடாக்கள் ஊடாக சிறீலங்காவுக்கான உல்லாசப் பிரயாணத்தை அதிகரிக்க முற்பட்டனர். எனினும், இவ் ஒலியிழை நாடாவானது சிறீலங்காவை அசிங்கமான விபச்சாரத்தை ஊக்குவிக்கும் நாடாக வர்ணித்

(☞ 2ம் பக்கம்)

### வாகரையில் எட்டு மணி நேரச்சமர்

(22.06.98)

சிறீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மட்டக்களப்பின் வட பிரதேசங்களில் கடும் சமர் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இன்று அதிகாலை 6.30 மணியளவில் இச் சமர் ஆரம்பமாகி மாலைவரை இடம்பெற்றதாகவும் தெரியவருகின்றது.

கரையோர நகரமான வாகரையை தமது படைகள் கைப்பற்றிவிட்டதாகவும், புலிகளின் பிரதான முகாம் ஒன்றையும் பல சிறிய முகாங்களையும் தமது முப்படைகளும் பலத்த தாக்குதல்களின் பின்னர் அழித்துச் சேதப்படுத்தியுள்ளதாகவும் சிறீலங்கா இராணுவத் தரப்பு அதிகாரிகள் அறிவித்துள்ளனர். எனினும் இச் சமர் தொடர்பாக விடு

(☞ 2ம் பக்கம்)

### யாழ்நகர் கைலாசபிள்ளையார் கோயிலடி சுற்றிவளைப்பு

(21.06.98)

நல்லூர் பிரதேசம் இன்று காலை 8.30 மணிமுதல் சுற்றிவளைப்புக்கு ஆளானது. இப் பகுதிகளை சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடுவீடாக சோதனைகளை நடாத்தினர். தேடுதல்கள் இடம்பெற்ற வேளையில் சுற்றாடல் பிரதேசங்கள் உடனான தொடர்புகள் முழுமையாக துண்டிக்கப்பட்டது. வைமன்

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804


# யாழ் குடாவில் ஈ.பி.டி.பி. மோதல்

சிறீலங்கா அரசின் பாதுகாப்பிலுள்ள ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவின் இரு பிரிவினருக்கிடையே மோதல்களும் ஆட்கடத்தல்களும் இடம்பெற்றுவருகின்றன. கடந்த வெள்ளியன்று டக்ளஸ் தேவானந்தா குழுவைச் சேர்ந்தோர் ராமமூர்த்தி குழுவைச் சேர்ந்த இருவரை கடத்திச் சென்றுள்ளனர். நாவலர் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்தே இக்கடத்தல் இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து இக் கடத்தல் தொடர்பாக இராணுவத்தினரிடம் இரு குழுக்களும் முறைப்பாடு செய்தன. இக் கடத்தலைக் கண்டித்து ஈ.பி.ஆர்.எல்.எப். கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளதுடன் தமது குழு இவ்விரு குழுக்களினதும் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்க தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது.

## இரத்தினபுரி-வவுனியா தொடரும் மின்மாற்றிகள் மீதான குண்டு தாக்குதல்

இரத்தினபுரியில் அமைந்துள்ள மின்மாற்றி ஒன்று கடந்த சனி அதிகாலை 4.30 மணியளவில் குண்டுவைத்த தகர்க்கப்பட்டுள்ளது. சமார் 33.000 ஓர மின் சக்தி கொண்ட மின்மாற்றியே குறித்த நேரத்தில் வெடிக்கும் வெடிகுண்டின் மூலம் வெடிக்க வைக்கப்பட்டது. சேதமடைந்துள்ள மின்மாற்றியின் பெறுமதி பல லட்சங்கள் என கூறப்படுகின்றது. இக்குண்டு வெடிப்பால் நகரின் அரைவாசி பகுதி இருளில் மூழ்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வவுனியா பூந்தோட்ட கல்லூரிக்கு அருகில் உள்ள மின்மாற்றி ஒன்றும் கடந்த 14-ம் திகதி அதிகாலை 4 மணியளவில் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இதனாலும் பல இலட்சம் நஷ்டம் ஏற்பட்டள்ளதாக தெரியவருகிறது.

களுத்துறை தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தின் மீது கடந்த ஏப்ரல் 27-ல், தொடங்கிய முதல் தொலைபேசி மின்மாற்றிகள் மீதான தாக்குதலில் இருந்து இன்று வரை 16 இற்கும் மேற்பட்ட பெறுமதி வாய்ந்த பல மின்மாற்றிகளும், தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களும் தகர்க்கப்பட்டடுள்ளன. இதனால் சிறீலங்கா அரசிற்கு பல கோடிக் கணக்கான ரூபா நஷ்ட ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திட்டமிட்டு மிகவும் நுணுக்கமாக வெடிகுண்டுகளைப் பொருத்திவிட்டு செல்பவர்கள் யார் என்பது பற்றி, பொலிசாரினால் ஏதுவுமே கண்டுபிடிக்க முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவற்றுக்கான பாதுகாப்புக்களை அதிகரிக்குமாறு சிறீலங்கா மின்சாரசபையும், ரெலிகொம் நிறுவனமும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

## ரெலோ உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டு. நாவற்குடா பகுதியில் வைத்து ரெலோ குழுவின் உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கடந்த வியாழனன்று காலை பதினொரு மணியளவில் ஆரயம்பதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் மட்டு. நகர் நோக்கி வந்து கொண்டிருந்த சீனித்தம்பி ராஜன் (27) என்பவரையே நாவற்குடா பகுதியில் வைத்து இடைமறித்த இரு இளைஞர்கள் அவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவரது கொலையை தொடர்ந்து, அப்பகுதியை சுற்றிவளைத்த சிறீலங்கா பொலிசார் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர். இதன்போது யாரும் கைது செய்யப்பட்டதற்கான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கைலாயபிள்ளையார்...

வீதி, கைலாயபிள்ளையார் கோயிலடி என்பன பலத்த தேடுதல்களுக்கு உட்படுத்தப்பட்டது. இத் தேடுதல்களின் போது சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டுள்ள போது முழுமையான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்கா...

தமை சிங்களவர்களை கொதிப்படையவைத்துள்ளது.

தற்போது இந் நிறுவனம் சிறீலங்காவின் 50வது சுதந்திரதினத்திற்கு எதிராக புலிகள் நடாத்திய சர்வதேச பிரச்சாரத்திற்கு துணைபோனதாக சிங்களவர்களால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### வாகரையில்...

தலைப் புலிகளின் அறிவிப்புக்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை வாகரை மீது சிறீலங்கா விமானப்படை விமானங்களும், கடற்படை பீரங்கிப் படகுகளும் குண்டுவீச்சுக்களை நடத்தியுள்ளதாகவும் இதனால் அப்பகுதி மக்கள் நாசிவன்தீவுப் பகுதி ஊடாக வாகரைப் பகுதி நோக்கி இடம்பெயர்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.


## பிறந்தநாள் வாழ்த்து



# செல்வி ஆருதி

மட்டுவில் கைதடியைச் சேர்ந்த தேவன்-பரிமளா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆருதி தனது முதலாவது பிறந்த நாளை 22.06.98 அன்று லுற்சேர்ன் மாநகரில் உள்ள தனது இல்லத்தில் அண்ணா ஆர்த்தியுடன் மிக விமர்சையாகக் கொண்டாடினார். இப் பூந்தென்றலை அரவணைத்து அனைத்து அன்புறவுகளும் பாச உள்ளங்களும் மனதார அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

## Restaurant விற்பனைக்கு

நல்ல முறையில் நீண்டகாலமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற, 80 இருக்கைகள் கொண்ட ($150M^2$), இந்திய உணவகம் சார்சலில் உடன் விற்பனைக்கு உண்டு

**விலை 150,000FFrs மட்டுமே**

(விலை பேசித் தீர்மானிக்கலாம்)

**தொடர்புகளுக்கு:**

Pub. **Tel: 01 39938031** அல்லது **0612175286**


(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மூன்றாம் நாளாக...

னப்படையின் கிபீர் விமானங்களும், எம்.ஐ 24 ரக உலங்கு வானூர்திகளும் பலத்த தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கையில் மேற்கொள்ளப்பட்ட இந் நகர்வு முயற்சியை தடுத்து விடுதலைப் புலிகள் மிக வீராவேசத்துடன் போரிட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை பகலிலும் மிகக் கடுமையாக இருந்தது. நேற்றையதினமும் (திங்கள்) விமானப் படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் பலத்த தாக்குதல்களை நடாத்தின. டாங்கிகள் பலத்த பீரங்கித் தாக்குதல்களை நடாத்தின.

இவ் இராணுவ நகர்வு முயற்சிகள் மீது புலிகள் பலத்த எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர் எனினும் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இன்றைய தினமும் புலிகளின் நிலைகள் மீது சிறீலங்காப் படைகள் தாக்குதல்களை தொடுத்தன. புலிகளின் பதிலடித் தாக்குதல்கள் பலமாக இருந்த போதிலும் விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை இதுவரை இடம்பெற்ற மோதல்களில் முப்பத்தைந்து போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளதாக புலிகளின் உத்தியோக பூர்வ செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.


புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

**ERRANCES TRAVELS**

**Tel: 01 42 09 70 00**

Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc, 75010 Paris.

M°: La Chapelle *ou* Louis Blanc

(ADV)

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900Frs. |
| Delhi | - | 3,900Frs. |
| Bangkok | - | 3,400Frs. |
| Colombo | - | 3,800Frs. |
| Singapour | - | 3,670Frs. |
| Madras | - | 4,300Frs. |
| Londres | - | 790Frs. |
| New york | - | 2,300Frs. |
| Montreal | - | 2,800Frs. |
| Oslo | - | 2,010Frs. |
| Toronto | - | 2,800Frs. |
| Nepal | - | 4,820Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# யுத்தம் முடியும்வரை தேர்தல் வேண்டாம் மகாநாயக்க தேரோக்கள் கூட்டாக வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடியும் வரை மாகாண சபைக்கான தேர்தல்களை ஒத்திவைக்குமாறு நான்கு மாநாயக்க தேரோக்கள் சிறீலங்கா அரசாங்கத்துக்கு கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் நம்புத் கெலவிபாசி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கதேரர், பலிப்பான சிறீ சந்தானந்த தேரர், அமரபுர மகாநாயக்க தேரர், மடிகே பஞ்ஞாசீக தேரர், ராமன்னனாறிக்காயாவின் மகாநாயக்க தேரர் வெவல் தெனிய ,மெதாலங்கார ஆகிய நால்வரும் கையொப்பமிட்டே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அவர்களது வேண்டுகோளில் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட பொதுத்தேர்தல் மாகாண சபைத் தேர்தல் உள்ளூராட்சித் தேர்தல் என்பன நீதியான முறையிலும் சுதந்திரமாகவும் நடத்தப்படவில்லை என்பதை மக்கள் அறிவர்.

வாக்கு மோசடிகள், வன்செயல்கள், கொலைகள் என்பன இடம்பெற்றதாக செய்திகள் வெளிவந்துள்ளன. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு எதிர்வரும் மகாண சபைத் தேர்தலிலும் பாரிய அளவில் வன்செயல்கள் இடம் பெறலாம் என்பதை அனுமானிக்க முடியும். இதை தடுப்பதற்கு பாரிய அளவில் பொலிசாரும் இராணுவத்தினரும் தேவைப்படுகின்றனர்.

வடக்கு கிழக்கின் முக்கியமான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் படையினரை, தேர்தல் கடமைக்காக அங்கிருந்து திருப்பி அழைத்தால் இராணுவ நடவடிக்கைகள் தேக்கமடைய நேரிடும்.

ஆகவே இம் முக்கியமான காலகட்டத்தை கருத்தில் கொண்டு வடக்குக் கிழக்கில் யுத்த முனையில் உள்ள படையினரை திருப்பி அழைக்கக் கூடாது. யுத்தம் முடியும்வரை மாகாணசபைத் தேர்தல்களைப் பின்போடவேண்டும் என்பதே எமது கோரிக்கைகளாகும் என்று தெரிவித்துள்ளார்.

## உலக மகா புளுகு

சிறீலங்காவில் செய்தித் தணிக்கை, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு கடந்தவாரம் கொழும்பு கோட்டை மக்கள் வங்கிக் கட்டடத்தில் -சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க பத்திரிகையாளர் மகாநாட்டை கூட்டியிருந்தார். வழக்கம்போல அவர் தனது அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு எல்லாவற்றையும் அவிழ்த்து விட்டுக்கொண்டிருந்தபோது

ஒரு சிங்களப் பத்திரிகையாளர் 'மன்னாரில் விடுதலைப் புலிகளின் எறிகணை ஒன்றை படையினர் கைப்பற்றியுள்ளார்கள் என்று இராணுவத் தரப்பில் சொல்லப்படுகிறதே உண்மையா' என்று கேட்டார்.

அதற்கு முணசிங்க ஒரு இயந்திரமொன்று மீட்கப்பட்டிருக்கிறது. அது ஏவுகணையா என்று சொல்லத்தெரியவில்லை. அது புராதன கால ஆயுதமாகையால் அதைப் பற்றி அலட்டிக்கொள்ளாதீர்கள் என்றார்.

அடுத்து இன்னொரு பத்திரிகையாளர் - விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளதே உண்மையா என்று கேட்டபோது சரத் முனசிங்க 'அவர் அந்த நிலைக்கு தள்ளப்பட்டு விட்டார் என்பது உண்மை. ஆனால் எப்போது அதனைச் செய்யப் போகின்றார் என்பதுதான் தெரியவில்லை' என்றபோது இதுதான் இந்த வருடத்து உலக மகா புளுகு என்று அங்கிருந்த பத்திரிகையாளர்கள் தங்களுக்குள் சொல்லிச் சிரித்துக்கொண்டார்கள்.

# பயணிகளை சோதனையிடுவது புன்னாலைகட்டுவனுக்கு மாற்றம்?

யாழ்ப்பாணத்தில் இருந்து விமான மூலம் கொழும்பு செல்லும் பொதுமக்களை தீவிர சோதனைக்கு உட்படுத்த யாழ். புகையிரத நிலையத்தில் அமைந்திருந்த இடத்தை மாற்றி புன்னாலைக் கட்டுவன் பகுதிக்கு மாற்றம் செய்ய படைத்தரப்பு முடிவு செய்துள்ளது.

யாழ். புகையிரதப் பகுதியில் உள்ள இராணுவ காவலரண்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாவதனாலேயே இம் மாற்றம் மேற்கொள்ளப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புன்னாலை கட்டுவனில் சோதனை செய்யப்படும் கொழும்பு செல்லும் பயணிகளை, அங்கிருந்து இராணுவ பாதுகாப்புடன் பலாலி விமான நிலையம் வரை கொண்டு செல்ல இரு பேருந்துகளை வழங்குமாறு வடக்குக்கான சிறீலங்கா இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ரயனல் பலகல கேட்டுக் கொண்டுள்ளார்.

## தமிழ் கிராமசேவகர் சுட்டுக்கொலை

(ஜூன் 18)

மட்டக்களப்பிலிருந்து வடமேற்கில் 30 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பனிச்சேனை என்ற இடத்தைச் சேர்ந்த தமிழ் கிராமசேவகர் ஒருவர் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

முருகேசம்பிள்ளை என்ற இந்த கிராமசேவகர் அவருக்குச் சொந்தமான வயலில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இவர் இன்று அதிகாலை 2 மணியளவில் சுட்டுக்கொல்லப் பட்டதாக இவரது அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட முருகேசம்பிள்ளையின் 2 மகன்களும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக இருந்து சண்டையில் வீரமரணம் அடைந்தவர்கள் என்று முருகேசம்பிள்ளை விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்ததால்— அவரை அவரது கிராமத்துக்கு அருகில் மகா ஓயா ஆத்துக்கு மறுபக்கத்தில் உள்ள சிங்களக் கிராமத்தில் இருந்து வந்த சிங்கள ஊர்காவல் படையினர் கொன்றிருக்கலாம் என ஆரம்பிக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

(தமிழ்நெற்)

## களுத்துறை தமிழ் கைதிகள் 26-ல் இருந்து சாகும் வரை உண்ணாவிரதம்

களுத்துறை சிறையில் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளாமல் மிகவும் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை 'விசாரணை செய்யவேண்டும்' அல்லது 'விடுதலை செய்ய வேண்டும்' என்ற கோரிக்கையுடன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை 26-ம் திகதி தமது சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக தெரிவித்துள்ள இவர்கள், இது தொடர்பாக தமிழ், சிங்கள கட்சிகளுக்கும், பல்வேறு வெளிநாட்டு தூதரகங்களுக்கும் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த மார்ச் மாதம் 20-ம் திகதி ஆரம்பித்த இவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் பத்து நாட்களின் பின் சட்டமா அதிபரின் வாக்குறுதியை அடுத்து கைவிடப் பட்டது தெரிந்ததே. அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றாமையாலே இவர்கள் மீண்டும் இச் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தில் இறங்கப் போவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 26 ஈழத்தமிழ் அகதிகள் இந்தியா சென்றனர்

இந்தியா அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்தவர்களில் 26 பேர் தமிழ்நாடு வந்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிளாஸ்டிக் படகொன்றின் மூலம் 11 பெண்கள் உட்பட 26 பேர் தனுஷ்கோடி கடற்கரையை வந்தடைந்ததாகவும் இவர்களை காவற் துறையினர் மண்டபம் அகதி முகாமிற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையிலிருந்து தமிழகம் வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் மண்டபம் அகதி முகாமை விரிவுபடுத்த தமிழ்நாடு புனர்வாழ்வுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அத்துடன் 17.05.96-ல் இருந்து 15.05.98 வரை 4170 குடும்பங்களை சேர்ந்த 12495 பேர் மண்டபம் முகாமிற்கு வந்துள்ளதாக புனர்வாழ்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## வயோதிபப் பெண்ணை கொன்றுவிட்டு நகைகள் கொள்ளை

யாழ். குடா வீடொன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த வயோதிபப் பெண்ணை கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த அனைத்து நகைகளையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

கடந்த 14-ம் திகதி இரவு அராலியில் தனியாக வீட்டிலிருந்த சுப்பையா சிவக்கொழுந்து (80) என்பவரை கழுத்தை நெரித்து கொன்றுவிட்டு அவரிடமிருந்த நகைகளை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

## புளொட் உறுப்பினர் இளம் பெண் மீது துப்பாக்கிசூடு

யாழ். குடாவில் சிங்கள இராணுவத்துடன் இயங்கி வரும் புளொட் குழுவை சேர்ந்த ஒருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் அரியாலையில் இளம் பெண் படுகாயம் அடைந்துள்ளார்.

கடந்த மாதம் 21-ம் திகதி இரவு எட்டுமுப்பது மணியளவிலேயே இத் துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தப்பட்டுள்ளது. காயங்களுக்கு உள்ளான கேதீஸ்வரநாதன் கலைவாணி (26) உடனடியாக யாழ், போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இவர், தன்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரை தன்னால் அடையாளம் காட்டமுடியும் என்று கூறியுள்ளார். இதே வேளை இவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவருக்கு எதிராக புளொட் குழுவினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பதுங்கியிருந்த இரு படையினர் காயம்

பொலநறுவை மாவட்டத்தில், நாகத்தன்னை பகுதியில் சிறீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்ததாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை செயலகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீது தாக்குதலை நடாத்த என பதுங்கியிருந்த படையினர மீதே இக் கைக்குண்டு தாக்குதல் நிகழ்த்தப்பட்டதாக தெரியவருகிறது. இதன் பின்னர் இரு தரப்பினரும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஜேர்மனியில்

## தேசத்தின் புயல்கள்

இடம்: 'SCALA KINO' - Saarbrucken
காலம்: 29.06.98 (திங்கள்)
நேரம்: 14.30 மணி, 17.15 மணி (இரு காட்சிகள்)

* * *

இடம்: 'MOVIE' - BILEFELD
(பிரதான புகையிரத நிலையம் முன்பாக)
காலம்: 28.06.98 (ஞாயிறு)
நேரம்: 14.00 மணி

# கிருசாந்தி கொலை வழக்கு ஜூலை 3-ம் திகதி தீர்ப்பு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியான கிருசாந்தி குமாரசாமியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி படுகொலை செய்தது மற்றும் அவரது தாயார் சகோதரர் அயல்வீட்டுக்காரர் ஆகியோரைப் படுகொலை செய்தது தொடர்பான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் ஜூலை 3-ம் திகதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூரிகள் இல்லாமல் - ட்ரையல் அட்பார் முறையில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த வழக்கின் விசாரணைகள் முற்றுப்பெற்றுவிட்டன.

07.09.1996-ல் யாழ்ப்பாணம் செம்மணி இராணுவச் சோதனைச் சாவடியின் அருகில் வைத்து கிருசாந்தி மீது கூட்டாகப் பாலியல் வன்முறைக் குற்றமிழைத்து அவரை கொலை செய்தது, கிருசாந்தியின் தாயார் - இராசம்மா, தம்பி பிரணவன் அவர்களது அயல்வீட்டுக்காரர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரை படுகொலை செய்தது ஆகிய குற்றச் செயல்களுக்காக அரச படைகளைச் சேர்ந்த 11 பேர் கைதுசெய்யப்பட்டனர். அதில் 2 பேர் அரசதரப்பு சாட்சிகளாக மாறினர். பின்பு ஒரு பொலிஸ்காரர் உட்பட 9 படையினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது 5-ம் எதிரி இறந்துவிட்டார். 9-ம் எதிரி விடுதலையாகிவிட்டார். 1-ம் எதிரியும், 8-ம் எதிரியும் தப்பியோடிவிட்டனர். இதில் 1-ம் எதிரி மீண்டும் கைதுசெய்யப்பட்டுவிட்டார். 8-ம் எதிரி இன்னும் தலைமறைவாகவே உள்ளார். அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் மீது மொத்தம் 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

# அர்த்தமில்லாத ஆர்ப்பாட்டம்

கடந்தவாரம் கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இன்ரர்நஷனல் அலெர்ட் அமைப்பின் அலுவலகத்தின் முன்பாக ஒரு திடீர் ஆர்ப்பாட்டம் நடந்தது.

முப்பதுபேர் வரையில் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கள் மனித உரிமைகளை பாதுகாக்கும் முன்னணியைச் சேர்ந்தவர்கள் என்று தங்களை அடையாளப் படுத்திக்கொண்டார்கள்.

அவர்களது முக்கியமான கோரிக்கை 'இன்ரர்நஷனல் அலெர்ட்' அமைப்பை சிறீலங்காவிலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதாகும். நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சர்வதேச அளவில் செயற்படும் இந்த அமைப்பு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறது என்பது இந்த மனித உரிமை பாதுகாவலர்கள் கண்டுபிடித்த காரணமாகும்.

இன்ரர் நஷனல் அலெர்ட்டின் சிறீலங்கா பிரதிநிதியாக இருந்த பெட்ரிக்கா ஜோன்ஸ் என்பவர் நோர்வேயில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாடு பற்றி சிறீலங்காவில் உள்ள ஆங்கில நாளிதழ் ஒன்றிற்கு கட்டுரை எழுதியிருந்தார். விடுதலைப் புலிகளை கடுமையாக விமர்சித்து அவர் எழுதிய அந்தக் கட்டுரை – சிறீலங்கா அரசிற்குச் சார்பாகவும் உண்மைக்குப் புறம்பான விதத்திலும் எழுதப்பட்டிருந்தது.

பெட்ரிக்கா ஜோன்சின் இந்த நடவடிக்கை இன்ரர்நஷனல் அலெர்ட்டின் பக்க சார்பற்ற தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தியதால் அந்த அமைப்பின் தலைமைப்பீடம் அவரைப் பதவி நீக்கம் செய்ததுடன், அவரது இடத்தில் சிறீலங்காவில் இருந்து செயற்படுவதற்கென புதியவர் ஒருவரையும் நியமித்திருந்தது. இன்ரர் நஷனல் அலெர்ட் அமைப்பு பெட்ரிக்கா ஜோன்சை பதவி விலக்கியது, விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக மேற்கொண்ட ஒரு நடவடிக்கை என்று மனித உரிமைகளைப் பாதுகாக்கும் இந்த முன்னணி கூறுகிறது.

வரவர எதற்கு ஆர்ப்பாட்டம் செய்வது, யார் யார் எந்த அமைப்பின் பெயரின்கீழ் இருந்து ஆர்ப்பாட்டம் செய்வதென்று கணக்கே இல்லாமல் போய்விட்டது.

– நாடோடி

# மீனவர்கள் காயம்

யாழ்ப்பாணம் குடாக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் சிறீலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்துள்ளனர்.

கடந்த 15.06.98 திங்கட்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் போல்ராஜ் செல்டன் (15 ), மரியதாஸ் ரொபேட் கிளெம் (23) ஆகிய இருவருமே துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளானார்கள் என அடையாளம் காணப்பட்டது. இவர்கள் இருவரும் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ராஜினி கொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில்

(கொழும்பு, ஜூன் 20)

சிறீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ராஜினி வேலாயுதம்பிள்ளையின் வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு கையளிக்கப்பட்டது.

கடந்த 30.09.1996 அன்று காலை 7 மணியளவில் கோண்டாவிலில் இருந்த தனது வீட்டிலிருந்து ஆனைக்கோட்டையில் உள்ள தனது மாமியாரைப் பார்க்கச் சென்ற வேளையில் - கோண்டாவில் டிப்போ சோதனைச் சாவடியில் அவரைத் தடுத்து நிறுத்திய சிறீலங்கா இராணுவத்தினர் கூட்டாக அவர்மீது பாலியல் பலாத்காரம் புரிந்த பின் - அவரைக் கொலை செய்திருந்தனர்.

இவரது கொலை தொடர்பாக சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல் காமினி சமன் உயனகே மற்றும் எஸ் அருணசாந்த, எச் சரத் சந்திர டி. சிற்சிறி ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடைபெற்றுவந்தது.

இந்த வழக்கு விசாரணையில் 22 பேர் சாட்சியமளித்திருந்தனர். வழக்கிற்கான தடையப் பொருட்களாக ராஜினியின் நகைகள் உட்பட 22 பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

நேற்று இந்த வழக்கின் ஆரம்பக்கட்ட விசாரணைகளை முடித்த கொழும்பு நீதிமன்ற நீதிபதி ஏ.டி. சில்வா - அடுத்தகட்ட விசாரணைகளைத் தொடர்வதற்கு இவ் வழக்கை மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துவதாக அறிவித்ததுடன், அதுவரை எதிரிகளை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

# வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தின் விலை திடீர் அதிகரிப்பிற்குள்ளாகி உள்ளது.

இதுவரை காலமும் ஒரு அந்தர் 1200 ரூபாவாக விற்கப்பட்டு வந்த வெங்காயம், தற்போது 2500 ரூபாவாக விற்கப்படுவதாக அங்கிருந்த கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# யாழ்ப்பாணத்தில் கைதானவர்கள் களுத்துறைக்கு அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறீலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 பேர் அவசர அவசரமாக களுத்துறை சிறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த சிறீஸ்கந்தராஜா சிறீரஞ்சன், வரணி நாவற்காட்டையைச் சேர்ந்த மனுவேல் பாலச்சந்திரன், நெல்லியடியைச் சேர்ந்த கந்தையா சச்சிதானந்த சிவம், மீசாலையைச் சேர்ந்த குலசேகரம்பிள்ளை சிவராசா, சாவகச்சேரியைச் சேர்ந்த மார்க்கண்டு சிவகுலேந்திரன், ஆறுமுகம் சிறீபால கிருஷ்ணன், மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் மார்க்கண்டு, கொடிகாமம் தவசி குளத்தைச்சேர்ந்த குணபாலசிங்கம் சிவகுமார், நுணாவிலைச் சேர்ந்த சின்னராசா ஜெகன், எழுதுமட்டுவாளைச் சேர்ந்த நிக்லஸ்பிள்ளை ஜெயநேசன், மிருசுவில் வடக்கைச் சேர்ந்த கந்தையா சுதர்சன், அம்பன் குடத்தனையைச் சேர்ந்த வன்னியசிங்கம் கார்த்திகேசு, கொடிகாமம் தவசி குளத்தைச் சேர்ந்த செல்லக்கண்டு ஜெமிலதாஸ் ஆகியோரே களுத்துறைச் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் இவ் வருட முற்பகுதியில் கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## ஐரோப்பா தழுவிய குறும்படப் போட்டி - 1998

**கலைஞர்களே !**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள், எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:** *தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)*



தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம் மாவீரர் நினைவாக நடாத்தும்

## மாவீரர் நாள் மெய்வல்லுனர் போட்டி 1998

தெரிவுப் போட்டி
19.07.1998 ஞாயிறு

இறுதிப் போட்டி
02.08.1998 ஞாயிறு

Porte de Pantin மைதானம்

விண்ணப்ப முடிவு நாள்:
07.07.1998

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு காரியாலயத்திலும், வர்த்தக நிறுவனங்களிலும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
01 43 58 11 42



# 'சண்டே லீடர்' ஆசிரியர் வீட்டிற்கு துப்பாக்கி சூடு 'அரச தரப்பே காரணம்' - ஆசிரியர்

கொழும்பிலிருந்து வெளி வரும் 'சண்டே லீடர்' வாரப் பத்திரிகையின் ஆசிரியர் வசந்த விக்கிரமதுங்கவின் வீட்டின் மீது இனம் தெரியாதவர்களால் துப்பாக்கி பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த புதன் இரவு 10.45 மணியளவில் வெள்ளை நிற வான் ஒன்றில் வந்த சிலரே இவரது வீட்டை நோக்கி சில நிமிடங்கள் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் இவரது வீட்டின் ஜன்னல்களின் கண்ணாடிகள் உடைந்து சிதறியதாகவும், வாசலில் நிறுத்தி வைத்திருந்த இவரது கார்கள் இரண்டும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதல்கள் நடாத்தப் பட்டவேளை ஆசிரியர் தமது குடும்பத்துடன் வீட்டில் தங்கியிருந்த போதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதல் பற்றி கருத்து தெரிவித்த 'சண்டே லீடர்' ஆசிரியர் 'நாம் எமது பத்திரிகையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சாடியே அதிகமாக எழுதிவருகின்றோம். அதனால் இது அவர்களது தரப்பின் வேலையாகத் தான் இருக்கும்' என கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் மீது லஞ்ச ஊழல்கள், அமைச்சர்களின் விவகாரம் போன்ற சில விவகாரங்கள் குறித்து தாம் எழுதியதால் ஏற்கனவே அரசிடம் இருந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன என அவர் தெரிவித்தார்.

இவரது வீட்டின் மீதான தாக்குதல் குறித்து சிறீலங்காவின் எதிர்கட்சி உட்பட அமைச்சர்கள் பலர் கண்டனங்கள் வெளியிட்டுள்ளனர். இத் தாக்குதல் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் அரசை கேட்டுக்கொண்டுள்ளனர். இதேவேளை அண்மையில் 'சண்டே ரைம்ஸ்' இராணுவ ஆய்வாளர் அத்தாஸின் வீட்டிற்கும் இவ்வாறான ஒரு தாக்குதல் நடாத்தப்பட்டது தெரிந்ததே.

## கல்முனையில் இரு சடலங்கள்

(ஜூன் 17)

மட்டக்களப்பிலிருந்து 38 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கல்முனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலைக்கு அருகில், நேற்று இரண்டு இளைஞர்களுடைய சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப் பட்டன.

இதில் ஒன்று 'கராஜ்' ஒன்றில் வேலை செய்யும் 22 வயதுடைய இளங்கோ என்ற இளைஞர் என அடையாளம் காணப் பட்டுள்ளது. மற்றய சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இந்த இரண்டு இளைஞர்களும் திங்கட்கிழமை இரவு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கடைசியாகக் கிடைத்த தகவல்கள், அடையாளம் காணப் படாமல் இருந்த மற்ற சடலம் விற்பனை உதவியாளரான சாந்தன் என்பவரது என்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த இருவரையும் அரசு படைகளுடன் சேர்ந்து இயங்கும் தமிழ் குழு ஒன்றே கடத்திச் சென்று கொலை செய்ததாகவும் தெரிவிக்கப் படுகின்றன. (தமிழ் நெர்)

## யாழ். குடா தேர்தலில் பங்குபற்றியவர்கள் தமது பதவியை இழந்தனர்

யாழ். குடாநாட்டில் சிறீலங்கா படைகளினால் நடாத்தி முடிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களில் பங்கு கொண்டவர்களில் 104 பேர் தமது பதவியை இழந்துள்ளனர் என யாழ். தேர்தல் உத்தியோகத்தர் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 29-ல், நடந்த இத் தேர்தலில் பங்கு கொண்டவர்களில் 104 பேர் தமது பதவிகளை குறிப்பிட்ட ஒரு மாத கால எல்லைக்குள் ஏற்கவில்லை என்பதால், அவர்களது பதவிகள் ரத்துச் செய்யப்படுகின்றன என்றும், அவர்களது இடத்திற்கு புதிதாக வேறு உறுப்பினர்களை அவர்களினது கட்சியை தெரிவு செய்யும்படி அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பதவியேற்றவர்களில் பலர் தமது பதவிகளை இராஜினாமா செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## செய்தி தணிக்கை

– பி.பி.ஸி செய்திகளுக்கு இல்லை –

சிறீலங்கா அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள செய்தி தணிக்கையினால் சிறீலங்கா ஒலிபரப்பு கூட்டுத்தாபன தேசிய சேவைகளின் ஊடாக ஒலிபரப்பப்பட்டு வந்த பி.பி.சி. தமிழோசை, சிங்கள செய்திகள் போன்றவற்றில் எவ்விதமான மாற்றங்களையும் செய்ய முடியாது என ஒலிபரப்பு கூட்டுத் தாபன தலைவர் கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா ஒலிபரப்பு கூட்டுத் தாபனம் பி.பி.சியுடன் செய்த கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி ஒலிபரப்பாகும் அந்த சேவையை இடைநிறுத்தவோ இல்லை தணிக்கை செய்யவோ தமக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய கட்டுப்பாடு

திருமலைக் கடற் பரப்பில் மீன் பிடிக்க சிறீலங்கா படையினர் புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் என திருகோணமலை செய்திகள் தெரிவிக்கின்றன. இதன்படி இரவு வேளைகளில் கடலில் மீன்பிடிக்க செல்பவர்கள் மாலை ஆறுமணிக்கு முன் கடலுக்குள் செல்ல வேண்டும் எனவும் மறுநாள் காலை ஆறு மணியின் பின்னரே கரைக்கு திரும்பவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் இக் கட்டுப் பாட்டுக்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதும், விடுதலைப் புலிகளின் நடமாட்டம் திருமலை கடற்பரப்பில் அதிகரித்துள்ளமையினால் இரவு வேளைகளில் கரைக்கு வந்து செல்லும் புலிகளை அடையாளம் காணவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர்.

## உருத்திராட்சப் பூனைகள்

பூனைக்குத் தொழில் எலி பிடிப்பது. நான் எலியே பிடிக்கமாட்டேன். நான் சைவப்பூனை என்று எவராவது சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? அதுபோல்தான் ஆள் கடத்தல் சித்திரவதை கொலைகளுக்கு புகழ்பெற்ற PLOT இயக்கத்தினர் சிறீலங்காவில் விசாரணையின்றி தடுத்து வைத்திருக்கும் தமிழ் கைதிகளின் விடுதலைக்காகவும், யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக சிறீலங்கா அரசாங்கம் நடவடிக்கை எதையும் எடுக்காததை கண்டித்தும் வருகின்ற 26.06.96 அன்று யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போகின்றார்களாம்.

சுழிபுரம், செம்மணி, ஒரத்தநாடு, K.K. நகர் கதைகள் பழைய கதை என்றாலும் வவுனியா, செட்டிகுளம் பகுதிகளில் நடைபெறுகின்ற ஆட் கடத்தல்கள் சித்திரவதைகள் கொலைகள், காட்டிக்கொடுப்புகளுக்கு காரணமானவர்களில் முக்கியமானவர்கள் POLT இயக்கத்தினர்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

அது போல் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களும் சரி வருடக் கணக்காக விசாரணையின்றி சிறைகளில் வாடிக்கொண்டிருப்பவர்களும் சரி, அவ்வாறான ஒரு அவல நிலையை சந்திப்பதற்கு POLT குழுவினர் (முன்பு) அரசாங்கத்திற்கு முட்டுக்கொடுக்கும் விதத்தில்-அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது முக்கிய மான விடயங்களில் ஒன்று. எவரையும் முன்னறிவித்தலின்றி கைது செய்யவும் விசாரணையின்றி தொடர்ந்து சிறைவைத்திருக்கவும் வழி செய்யும் சட்டங்களுக்கு அடிப்படையாக இருப்பது அவசரகாலச்சட்டமே.

இப்போது தாங்கள் நல்ல பிள்ளைகள் எலியே பிடிக்காத சைவப் பூனைகள் என்கின்ற கணக்கில் உண்ணாவிரதமிருக்கப் போவதாக சொல்லிக்கொள்வதும் ஒரு அரசியல் நாடகந்தான்.

சிறீலங்கா அரசாங்கம் தமிழ்மக்களை ஒருபோதும் கொல்வதில்லை. அதுவிடுதலைப் புலிகளைத்தான் கொல்கிறது. ஜனநாயகப் போராட்டமெல்லாம் எந்த வித இடையூறுமின்றி அமைதியாக நடக்கிறது. இந்த உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு படையினர் பாதுகாப்பும் ஒத்துழைப்பும் வழங்குகின்றார்கள். அங்கே உண்மையான ஜனநாயகம் நிலவுகின்றது. என்று அரசாங்கம் 'யாழ்ப்பாணத்தை காட்சிப்பொருளாக்குவதற்கு உதவவேண்டுமல்லவா! அதுதான் இந்த நாடகம்

'இந்த நாடகம் அந்த மேடையில்' இன்னும் எத்தனை நாளம்மா?

## 'இன்ரர் நஷனல் அலேட்டை' வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

'சிறீலங்கா மனித உரிமைகள் பாதுகாப்பு முன்னணி' என்ற அமைப்பினால் நோர்வே அரசின் உதவியுடன் சர்வதேச நாடுகள் தளுவிய மட்டத்தில் இயங்கிவரும் 'இன்டர்நாஷனல் அலேட்' என்ற அமைப்பை சிறீலங்காவில் இருந்து வெளியேற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.


கடந்த வெள்ளியன்று இவ் அமைப்பின் அலுவலகத்தின் முன்னால் கூடிய சுமார் முப்பது ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாங்ககளை தாங்கிய வண்ணம் கோஷங்களை எழுப்பினர். மேற்படி நோர்வே அமைப்பு ஆங்கில வார இதழ் ஒன்றில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக கட்டுரை எழுதியவரை பதவி நீக்கியதாலேயே இவ் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் நோர்வே அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு சார்பாக இயக்குவதாகவும். இதை நாட்டை விட்டு அகற்றும்வரை தமது போராட்டம் தொடரும் எனவும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின்
இல்லங்களுக்கிடையேயான வருடாந்த
விளையாட்டுப்போட்டி - 1998
தெரிவுப்போட்டி
21.06.98 காலை 9 மணி
இறுதிப்போட்டி
28.06.98 காலை பி.ப. 1 மணி
STADE LUMIERE
30, Rue Louis Lumiere,75020 Paris.
M°: Porte de Bagnolet / Porte de Montreuil
என்ற முகவரியிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.
இறுதிப்போட்டியன்று வழமை போல பார்வையாளர்களுக்கு இடையேயான போட்டிகளும், கழகங்களுக்கிடையேயான போட்டிகளும் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

புதிய பிரெஞ்சு வகுப்பு
04.07.98 சனி பி.ப. 4 மணி
ஆசிரியர்: சுரேஸ்

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்றோறன்ட்



# ஜூன் 18 : ஒரு முக்கிய அறைகூவலின் நினைவு நாள்



ஜெனரல் டி கோல் 09.11.70 இல் மறைந்தார். 28 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. ஆனால், சரித்திர நாயகர்கள் மக்கள் மனதிலிருந்து மறைவதில்லை. அவர்கள் நிரந்தரமாக வாழ்கின்றனர்.

18.06.40 இல், ஜெனரல் டி கோல் விடுத்த அறைகூவலின் நினைவுநாளை, பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் ஜக் சிராக் தலைமையில் பிரான்ஸ் நாடு இந்த ஆண்டு கொண்டாடியது.

முதலில் டி கோல் 1940 இல், எந்தச் சூழ்நிலையில் அந்தப் புகழ்மிக்க அழைப்பை விடுத்தார் என்பதைப் பார்ப்போம்.

1918க்கும் - 1939க்கும் இடையே பிரான்ஸ் புதிய போருக்கான தயார்நிலையில் இல்லை. 1939 செப்டெம்பரில் வேறுவழியின்றி ஜேர்மனி மீது போர் தொடுத்தது. மே 40 இல், ஜேர்மனியின் படைகள் பாதி பிரான்சைப் பிடித்துக்கொண்டன.

அன்று பிரான்சின் பிரதமராய் இருந்தவர் திரு.Paul Reynaud. அவரது அமைச்சரவையில் துணைப் பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் டி கோலும், துணைப் பிரதமராக மார்டில் பெத்தொய்னும் (Pétain) பதவி வகித்தனர்.

பிரதமரும், ஜெனரல் டி கோலும், பிரான்சில் தோல்விகண்டு விட்டாலும் உலகெங்கும் அன்று பிரான்ஸ் பெற்றிருந்த காலனி நாடுகளின் துணையுடன் போரைத் தொடர வேண்டும் என்றனர்.

மார்ஷல் பெத்தாம், அவரது ஆதரவாளர்களும், நாஜி ஜேர்மனியை வெல்ல முடியாது, ஜேர்மனியிடம் சரணாகதி அடைய வேண்டும் என்று கூறிவந்தனர்.

ஜெனரல் டி கோல் போரைத் தொடர்வதற்காக பிரான்சைவிட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். இங்கிலாந்தில் லண்டனில், பக்கிங்காம் மாளிகையில் இருந்து ஏறத்தாழ 1 கி.மீற்றர் தூரத்தில் Carlton Gardens பகுதியில் தங்கியிருந்து போரிடும் பிரான்சுக்குத் தலைமை தாங்கினார்.

பிரான்சில் போல் றெய்னோ அரசு கவிழ்ந்தது. மார்ஷல் பெத்தான் புதிய பிரதமர் ஆனார். முன்பு திட்டமிட்டபடியே அவர் கிட்லரிடம் சரணாகதி அடைந்தார்.

ஜெனரல் டி கோல் தன்னந்தனியாக இங்கிலாந்து நாட்டின் ஆதரவுடன் 18.06.40 இல், பி.பி.சி. வானொலியில் பின்வரும் அறைகூவலை, பிரஞ்சு மொழியில் விடுத்தார்.

அவரது உரையின் தமிழாக்கம்.

*அனைத்து பிரஞ்சுக்காரர்களுக்கும்....*

*பிரான்சு ஒருசண்டையில் தோற்றுவிட்டது!*

*ஆனால், பிரான்சு போரில் தோல்வி அடையவில்லை!*

*பாதை தவறிய ஆட்சியாளர்கள் பரவசப்பட்டு, மானத்தை மறந்து நாட்டை அடிமையாக்கி, எதிரியிடம் சரணாகதி அடைந்துள்ளனர். ஆனால் எதுவும் நிரந்தரமாக இழக்கப்படவில்லை!*

*எதுவும் நிரந்தரமாக இழக்கப்படவில்லை, ஏனெனில் இந்தப்போர் உலகப்போர். சுதந்திரமான உலகின் வளமான நாடுகள் இன்னும் தங்கள் பலத்தைக் காட்டவில்லை. ஒரு நாள் இந்த நாடுகள் எதிரியை நசுக்கும். அந்நாளில், பிரான்ஸ் வெற்றிபெறும் நாடுகளின் வரிசையில் இருக்க வேண்டும். அப்போது, பிரான்ஸ் தனது சுதந்திரத்தையும் தனது மகோன்னதத்தையும் மீண்டும் பெறும். இதுதான் எனது ஒரே நோக்கம்!*


*இதனால்தான், உலகெங்கும் வாழும் எல்லா பிரஞ்சுக்காரர்களையும், என்னுடன் இணைந்து, செயலில், தியாகத்தில், நம்பிக்கையில் தொடர்ந்து போராட வருமாறு அறைகூவல் விடுகிறேன்.*

*நமது தாயகம் மரண ஆபத்தில் உள்ளது.*

*அதனைக் காப்பாற்ற ஒருங்கிணைந்து போராட வாரீர்!*

**பிரான்ஸ் வாழ்க**

*ஜெனரல் டி கோல்.*



A TOUS LES FRANÇAIS

*La France a perdu une bataille!*
*Mais la France n'a pas perdu la guerre!*

Des gouvernants de rencontre ont pu capituler, cédant à la panique, oubliant l'honneur, livrant le pays à la servitude. Cependant, rien n'est perdu!

Rien n'est perdu, parce que cette guerre est une guerre mondiale. Dans l'univers libre, des forces immenses n'ont pas encore donné. Un jour, ces forces écraseront l'ennemi. Il faut que la France, ce jour-là, soit présente à la victoire. Alors, elle retrouvera sa liberté et sa grandeur. Tel est mon but, mon seul but!

Voilà pourquoi je convie tous les Français, où qu'ils se trouvent, à s'unir à moi dans l'action, dans le sacrifice et dans l'espérance.

Notre patrie est en péril de mort.
Luttons tous pour la sauver!

VIVE LA FRANCE !

C. de Gaulle

GÉNÉRAL DE GAULLE

18.06.40 இல், ஜெனரல் டி கோலை இங்கிலாந்திலும் சரி, உலகத்திலும் சரி, யாருக்குமே தெரியாது.

சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக போரிட்டு வரும் தமிழ் ஈழத் தேசியத் தலைவர் உலகம் முழுதுக்கும் ஒரு காலத்தில் தெரியாமல் இருந்தவர்தான்.

ஜெனரல் டி கோலும் சரி, வேலுப்பிள்ளை பிரபாகரனும் சரி சரித்திர நாயகர்கள். சரித்திரத்தின் முன்பு அவர்களுக்குள்ள கடமை அவர்களுக்குத் தெரியும். அவர்களது இலக்கை அடைவதில் சந்திக்கக்கூடிய இடையூறுகள் அவர்களுக்குத் தெரியும். இடையூறுகளைக் கண்டு இலக்கை மாற்றிக் கொள்ள மாட்டார்கள் இந்தக் கொள்கைத் தங்கங்கள்.

பிரெஞ்சு சரித்திரத்தை நன்றாகவும், உலக சரித்திரத்தை ஓரளவுக்குத் தெரிந்தவன் என்ற முறையில் ஜெனரல் டி கோலுக்கும் - வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையே சில ஒற்றுமைகள் உள்ளதை உணர்கிறேன்.

இருவருமே அதிகம் பேசமாட்டார்கள், செயல் வீரர்கள் இருவரது பேச்சுக்களும் அளக்கப்பட்டவை, வீண் கதைகள் இராது. பிரான்சுக்கு ஒரு டி கோல் என்றால், இழந்த இறைமையைத் திருப்பிப்பெற, குடிமக்களைப் பாதுகாத்திட எல்லா இன்பங்களையும் உதறித்தள்ளி தியாகத்தீயில் நாளும் மூழ்கி எழுந்து எதிரியின் அனைத்துச் சதிகளையும் எதிர்த்து முறியடித்து, துரோகிகளின் சூதுகளையும் அம்பலப்படுத்தி, எடுத்துக்கொண்ட சபதத்தை நாளும் நிறைவேற்றும் வழிமுறைகளையே பின்பற்றும் கொள்கை வீரர் எல்லாம் நமது கண்ணுக்கு ஒரு புதிய டி கோல் தான்! அந்த வகையிலும் தமிழ் ஈழத் தேசியத் தலைவர் ஒரு டி கோல்.

சாள்ஸ் டி கோல் அவரது நோக்கத்தை அடைந்தார்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரது புதிய பயணத்தை வெற்றியுடன் முடிப்பார். உலக நாடுகளின் வரிசையில் சுதந்திரத் தமிழீழம் மலரும்!

நாம் நமது வாழ்நாளிலேயே இந்த இன்பக் காட்சியைக் கண்டு களிப்போம்!

*– டாக்டர் சுகிர்தராஜ்*


ஆரம்பமாகிவிட்டது

ஜேர்மனியில்

GNANAM

Telecom Centers




| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறீலங்கா | - | 1.36 | பிரான்ஸ் | - | 0.03p |
| பாகிஸ்தான் | - | 1.50 | லண்டன் | - | 0.03p |
| இந்தியா | - | 1.50 | அவுஸ்திரேலியா | - | 0.60p |
| கனடா | - | 0.03p | ஜேர்மனி | - | |
| அமெரிக்கா | - | 0.03p | ஜேர்மனி Mobile | - | |
| தாய்லாந்து | - | | துருக்கி | - | |
| சிங்கப்பூர் | - | | சீனா | - | |

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது ஜேர்மனியில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(மேலதிக விபரங்களுக்கு 8-ம் பக்கம்)

GNANAM Telecom Centers

Taunusstrasse 52-60,
60329 Frankfurt, Germany.
Mobil: 0171 - 6506679 / 0172 - 2078068

Pub

# மீளமுடியாத நெருக்கடிக்குள் சிறீலங்கா

**ஜெயசிக்குறுய் படை நகர்வின் புதிய தோல்விகள், தென்னிலங்கை தொடர் குண்டு வெடிப்புகள், பாதுகாப்பற்ற நிலை, யுத்த செய்தித் தணிக்கை போன்றவற்றால் சிறீலங்கா அரசு பல அரசியல் நெருக்கடிகளை இன்று சந்தித்துள்ளது. சிறீலங்காவின் இன்றைய அரசியல் — இராணுவ செயற்பாடுகள், விளைவுகள் பற்றி கொழும்பின் மூன்று முக்கிய ஆய்வாளர்கள் இப்படிக் கூறுகிறார்கள்:**

சிறீலங்காவின் மூத்த இராணுவத் தளபதி ஒருவரிடம் ஓர் பத்திரிகை நிருபர் சிறீலங்காவின் இன்றைய பாதுகாப்பு நிலை பற்றி கேட்டபோது அவர் இன்றைய மக்கள் முன்னணி அரசை கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார். இந்த அரசு பதவிக்கு வந்தபோது கடந்த அரசின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சித்தது. இன்றைய ஜனாதிபதி 'யுத்தத்திற்காக பெருந் தொகை பணத்தை முந்திய அரசு விரயமாக்கியது ஆனால், நாம் அப்படிச் செய்ய முடியாது. எப்படியாவது இத் தீவில் அமைதியை ஏற்படுத்துவோம். இங்குள்ள பிரச்சினையை அரசியல் ரீதியாகத்தான் தீர்ப்போம். வீணாக விரையமாகும் பணத்தை அபிவிருத்திக்குச் செலவிடுவோம்' என்றார்.

இந்த அரசு பதவிக்கு வந்தபோது சிறீலங்காவின் கிழக்குப் பகுதி அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அதைப் பாதுகாத்தவர்கள் இன்று தப்பியோடுகிறார்கள் என்று கூறப்படும் எமது இராணுவத்தினர்கள் தான். இன்று கிழக்கிலங்கை எம்வசமில்லை. சிறீலங்காவின் ஒருசிறு பகுதியான யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விடுதலைப் புலிகளை ஒடுக்கப் போகிறோம் எனக் கூறிக்கொண்டு கிழக்கிலிருந்த இராணுவத்தினரை வடக்கிற்கு கொண்டுபோனது. இதன் மூலம் யாழ்குடாவை எமது இராணுவம் கைப்பற்றிக் கொண்டது உண்மைதான். ஆனால், விடுதலைப் புலிகளுக்கு கிழக்கிலங்கையின் கதவுகளை அகலத் திறந்துவிட்டது இவ்வரசு.




இன்று யாழ்குடாவிலும் பல பகுதிகள் எம்வசமில்லை. அங்கும் விடுதலைப் புலிகள் சாதாரணமாக நடமாடுகிறார்கள். மகாஓயா முதற்கொண்டு மலையகப்பகுதி வரை விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. தென்னிலங்கையை எடுத்துக் கொள்வோம் இங்கும் பாதுகாப்பிருக்கின்றதா என்றால் அதுவும் இல்லை. மின்மாற்றிகள், தொலைத்தொடர்பு நிலையங்கள் தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் தகர்க்கப்பட்டுள்ளன. கொழும்பிற்குள் விடுதலைப் புலிகளைத் தேடுகிறோம் எனக்கூறுகிறார்கள் ஆனால் கொழும்பிற்கு வெளியே குண்டு வெடிப்புக்கள் தாராளமாக நடக்கின்றன. மொத்தத்தில் இன்றைய நாட்டின் நிலமைக்கு அரசின் பொறுப்பற்ற தன்மையும் தன்னிச்சையான முடிவுகளும்தான் காரணம் என்றார்.

## செய்தித் தணிக்கை பற்றி கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர்

மீண்டும் யுத்தச் செய்தித் தணிக்கையை அரசு கொண்டு வந்துள்ளது. தணிக்கைகள் என்பது எவ்விதத்திலாயிருந்தாலும் ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு செயற்பாடாகவே கருதமுடியும். அதிலும் யுத்தச் செய்திகளை தணிக்கை செய்வதென்பது ஜனநாயகத்தின் எல்லைவரை சென்று உரிமைகளைப் பறித்தெடுக்கும் ஓர் பயங்கரமான ஓர் நடவடிக்கையாகும். இதன் அடிப்படை நோக்கம் நாட்டின் உண்மை நிகழ்வுகள் இந் நாட்டின் பிரஜைகளுக்கு சென்றடையாமல் மறைப்பதேயாகும்.

அரசாங்கம் யுத்தத்தில் நெருக்கடிகளைச் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செய்தித் தணிக்கையினை அமுல்செய்துள்ளது. அதற்கு 'எதிரிகளுக்கு யுத்த இரகசியங்கள் போய்ச்சேரக்கூடாது' என்பதற்காகவே நாம் செய்திகளை தணிக்கைசெய்கிறோம் என்று காரணமும் சொல்கிறார்கள். இந்த தர்க்கமானது இந்நாட்டின் மக்களை மந்தைகளாக்கும் அரசியல்வாதிகளின் பிதற்றல்களேயன்றி இதில் எந்தவித யதார்த்த உண்மைகளும் இல்லை.

இன்று, அரசு தனது யுத்த உபாயங்களுக்காக தேர்தெடுத்தது வவுனியா – கிளிநொச்சி பாதை திறப்பிற்கான யுத்தம் என்பதையே. இந்த அரசின் யுத்த உபாயமானது மர உச்சியில் ஏறியுள்ள ஒரு பூனையின் நிலையே என யுத்த ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பூனையானது மர உச்சியில் ஏறும் போது திரும்பிவரும் வழியைப்பற்றி யோசிக்காது ஏறிக்கொள்கிறது. அதற்கு இறங்கும் வழியும் தெரிவதில்லை. இன்றைய இராணுவ நடவடிக்கையின் நிலையும் இதுவேதான். சாத்தியப்பட முடியாத ஓர் இராணுவ நடவடிக்கை இது என இராணுவ ஆய்வாளர்கள் அன்றே கூறியிருந்தனர்.

தனது நடவடிக்கையின் பலாபலன்கள், விளைவுகள் பற்றி நன்றாக அறிந்திருந்தும் அதற்குள் தலையை நீட்டிய இன்றைய அரசு நாட்டின் முழு அப்பாவி மக்களையும் ஏமாற்ற முனைகிறது. ஆனால், அரசியல் வாதிகளோ மக்களுக்கு எதையுமே கூற மறுக்கின்றனர். அதைக் கூறமுயலும் பத்திரிகைகளின் வாய்களையும் அடைத்துவிட்டுள்ளனர். இவ்வரசு பதவிக்கு வந்ததன் பின் மூன்றுமுறை யுத்தச் செய்தித் தணிக்கைகளை அமுல்படுத்தியுள்ளது. ஆனால் இம்முறை உள்ள விசேட தன்மை என்னவென்றால் யுத்தம் பற்றிய உண்மைநிலையைக் கூட அறியாத, பத்திரிகைச் செய்திகளின் உண்மைநிலையைக்கூட அறியாத ஓர் இராணுவ அதிகாரி தணிக்கையாளராக நியமிக்கப்பட்டிருப்பதுதான்.

இது உண்மையில் இராணுவ ஆட்சியின் ஓர் அங்கமே தவிர ஜனநாயக ஆட்சியில் இப்படி நடப்பதில்லை. யுத்த களத்தில் அரச படைகள் சந்திக்கும் தோல்விகள், பின்னடைவுகள், தளவாட – உயிர் இழப்புக்கள் போன்றவைகளை இத் தணிக்கையின் மூலம் வெளியே தெரியாமல் செய்துவிட முடியாது என்பது அரசுக்கு நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும் இச் செய்தித் தணிக்கைக்கு இராணுவத் தளபதிகளைவிட சில அரசியல்வாதிகளே அக்கறையுடன் செயற்படுகின்றனர். இதற்கு அரசியல்வாதிகள் இந்த யுத்தத்தைவைத்து தாமோர் அரசியல் யுத்தத்தையும் மறுபுறத்தில் தமது கறுப்புச்சந்தை வியாபாரத்தையும் நடத்திவிட முயல்கின்றனர் என்பதுதான் உண்மை.

## முன்னாள் விமானப் படை தளபதியின் நோக்கு

ஜெயசிக்குறுய் நடவடிக்கை கடந்தவருடம் ஆரம்பமாகி 14வது மாதமாக தொடர்கிறது. இது சிறீலங்காவின் சரித்திரத்தில் இடம்பிடிக்கும் ஒரு நீண்ட இராணுவ நடவடிக்கையாகும். இவ் இராணுவ நடவடிக்கை இவ்வளவுதூரம் இழுபடுமென அரசியல், இராணுவத் தலைமை நினைத்திருக்கவில்லை.

கடந்த வருட பருவமழைக்கு முன்பாகவே தாம் இந் நடவடிக்கையை முடித்துவிடுவதாக அவர்கள் கூறியிருந்தனர். பின் பருவமழைவந்தபோது பல நூறு இராணுவத்தினர் தொற்று நோய்களுக்கு ஆளாகினர். தொடர்ந்த விடுதலைப் புலிகளின் எதிர்ப்பும் அவர்களது நகர்வை தடைசெய்திருந்தன. இந்நிலையில் இராணுவத்தின் மனோநிலையில் பாதிப்பு அதிகரித்திருந்தது. ஏராளமானோர் போர்க்களத்திலிருந்து அகற்றப்பட்டு புதியவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள் ஆயினும் முன்னோக்கிச் செல்வதற்கான ஆட்பலமும், மனோபலமும் அவர்களிடம் இல்லாமல் இருந்தது. இந் நடவடிக்கையை விமர்சையாக ஆரம்பித்த அரசு, மிக இலகுவாக ஓமந்தையை அடைந்தது. பின்னர், புளியங்குளத்தின் புறப்பகுதியை அடைவதற்கு அவர்களுக்கு மூன்று மாதங்கள் எடுத்தது. அதன் பின்பே ஜெயசிக்குறுய் இராணுவத்திற்கு தலையிடி தொடங்கியது.

புளியங்குளத்தின் புறநகர்ப் பகுதியிலேயே நகரமுடியாத நிலையில் இரண்டு மாதங்களை இராணுவம் அங்கு செலவிட்டது. பின்னர் நகரின் உட்பகுதிக்கு செல்லும் நடவடிக்கையைக் கைவிட்டு வேறு உபமார்க்கமாக மேல்நோக்கி நகரத் தொடங்கியது. மாங்குளத்தை கைப்பற்றுவதை நோக்கமாக நகர்ந்த இராணுவம் அது கைகூடாத நிலையில் தொடர்ந்தும் அப் பகுதியிலேயே முடக்கப்பட்டிருக்கிறது. முதலில் கடந்த பெப்ரவரி மாதம் இராணுவ நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவருவதாக ரத்வத்தை அறிவித்திருந்தார். அதன் பின் மேலும் பல திகதிகள் அறிவிக்கப்பட்டன.

> அடுத்துவரும் மாகாணசபை தேர்தல்களுக்கு முன்னதாக பாதை திறக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அரசிற்கு இன்று தேவைப்படுவதெல்லாம் மாகாணசபை தேர்தலின் முன் பத்திரிகைகளில் மாங்குளத்தைக் கைப்பற்றிய செய்தி பிரதான செய்தியாக வரவேண்டும் என்பதே.

களத் தளபதிகளின் முடிவுகளின்றி அரசியல்வாதிகளின் முடிவுகளின்படி இன்று இந்த யுத்தம் தொடரப்படுகிறது. இன்று புதிதாக முடிவு திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் மாகாணசபை தேர்தல்களுக்கு முன்னதாக பாதை திறக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அரசிற்கு இன்று தேவைப்படுவதெல்லாம் மாகாணசபை தேர்தலின் முன் பத்திரிகைகளில் மாங்குளத்தைக் கைப்பற்றிய செய்தி பிரதான செய்தியாக வரவேண்டும் என்பதே. ஆனால், அரசிற்கு அது சாத்தியமாகாது என்றே தெரிகிறது. மாங்குளத்தின் விளைவுகளை அன்றைய அரசும் அனுபவித்திருந்தது. அதைக் கைப்பற்றத்துடிக்கும் இன்றைய அரசும் அங்கு பெரும் இழப்புக்களையே சந்திக்கப் போகிறது. சிறீலங்கா இராணுவம் இதுவரை கைப்பற்றிய பகுதிகளில் மூன்று படைப்பிரிவுகளை வைத்துள்ளது. இங்கு 25000 படையினர் சேவையில் உள்ளனர். வடக்கு — கிழக்கு உட்பட்ட பகுதிகளை கணக்கிட்டால் அப் பகுதிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர சிறீலங்கா அரசிற்கு 57 படைப்பிரிவுகள் அவசியமாகும். இல்லாவிட்டால் விடுதலைப் புலிகளை அழிக்கமுடியாது. முப்படைத் தளபதியின் கூற்றின்படி. விடுதலைப் புலிகள் வடபகுதியில் பத்தாயிரமும், கிழக்கில் ஏழாயிரம் பேரும் உள்ளனர். ஆனாலும் அவர்களது யுத்த தந்திரம் வேறுவிதம். ஒரு கெரில்லா யுத்தத்தை எண்ணிக்கையைவைத்துக் கணக்கிடமுடியாது. வியட்நாமில் அமெரிக்காவிற்கும், ஆப்கானிஸ்தானிலும், செச்னியாவிலும் ரஷ்யாவிற்கும் ஏற்பட்ட தோல்விகளை நாம் மறக்கக்கூடாது.

விடுதலைப் புலிகள் கடற்படைப் பிரிவுகள், தற்கொடைப் பிரிவுகள், விமான எதிர்ப்புப் பிரிவு என பல படைப்பிரிவுகளைக் கொண்டு போர் செய்யும் உலகின் முதல்தர அமைப்பு எனக் கருதப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை இந்த யுத்தத்தில் சிறீலங்கா வெல்லமுடியாது. இதற்கு இறுதியான முடிவு அரசியல் வழியிலான தீர்வுதான்.

## மாணவர் எழுச்சி நாள்

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு
பிரான்ஸ் தமிழ் மாணவர் அமைப்பு நடாத்தும்
மாணவர் எழுச்சி நாள்!
பிரான்ஸ் வாழ் தமிழ் மாணவர்களே! உங்கள்
சக்தியை வெளிக்காட்ட அணியாய் திரண்டு
வாருங்கள்.

**காலம்: 27.06.1998 சனி பிற்பகல் 3 மணி**
**இடம்: 26, Rue Département, 75018 Paris.**
**Métro: La Chapelle**
**மேலதிகத் தொடர்புகளுக்கு: 01 43 58 11 42**

# ஆலயங்களைப் போற்றுவோம் நற்பணிகள் ஆற்றுவோம்!

## – தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி

கடந்த வெள்ளிக்கிழமை திருவேற்காடு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் 75 மணமக்களுக்கு இலவச திருமணத்தை நடாத்தி வைத்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஆலயங்களுக்கு எதிரானது அல்ல திமுக ஆட்சி. ஆனால் அத்தகைய தவறான பிரச்சாரத்தை சிலர் செய்கிறார்கள்.




ஆலயங்களின் காரியங்கள் அந்த ஆலயங்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற பக்தர்களின் மனம் மகிழ்கின்ற அளவுக்கு நடைபெற வேண்டும் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்துக்கிடையாது.

ஆலயங்கள் இதுபோன்ற திருமணங்களை நடத்தி வைக்கின்றன என்பதைக் காணும்போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆலயங்களின் வருமானம் மக்கள் நல்வாழ்வுக்கு செலவிடப்பட வேண்டும் என்பதை ஆன்மீகப் பெரியவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதனால்தான் இளைஞர் விளையாட்டு, கல்வி, நல்ல நிகழ்வுகள் எல்லாம் அந்தக் காலம் தொட்டு கோயில் சார்ந்த இடங்களில் நடைபெற்று வந்திருக்கின்றன. இடைக்காலத்தில் கோயிலை வசப்படுத்திக்கொண்டவர்கள் பலர், ஆண்டவன் பெயரால் ஆண்டவனையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதை மறைக்கத் தேவையில்லை. அதனால்தான் ஆண்டவனுக்குரிய சொத்துக்கள் கோயில்களுக்குரிய உடமைகள் எல்லாம் பலரால் கவரப்பட்டன. கடந்த இரண்டு ஆண்டுகளில் அமைச்சர் தமிழ்க்குடிமகன் முயற்சியால் ரூ. 125 கோடி மதிப்பிலான கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டன என்றார் அவர்.

# ஈழத் தமிழர் அகதிகள் வருகை அதிகரிப்பு! விரிவுபடுத்தப்படும் அகதி முகாம்கள்!

தமிழ்நாட்டின் தென்கடலோரப் குதிகளான இராமேசுவரம், தனுஷ்கோடி கரைகளுக்கு வாரம் இருமுறை அல்லது மூன்று முறை அகதியாகும் மக்கள் வந்த வண்ணம் உள்ளதாய் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் இருந்து படகுகளில் வரும் ஈழத் தமிழரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பல்வேறு மாவட்டங்களில் உள்ள முகாம்களை விரிவுபடுத்த தமிழ்நாடு அரசின் மறுவாழ்வுத் துறை பரிசீலித்து வருகின்றது.

17.05.96 முதல் 15.05.98 வரை 4170 குடும்பங்களைச் சேர்ந்த 12,945 உறுப்பினர்கள் அகதிகளாக தமிழகம் வந்து சேர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் வந்து தஞ்சம்புகும் அகதிகள் மண்டபத்திலேயே தங்கவைக்கப்படுகின்றனர். இவர்களின் வருகை மாதந்தோறும் அதிகரித்துக் கொண்டிருப்பதால் மண்டபம் முகாமிலுள்ள பழைய குடியிருப்புகள் பழுது பார்க்கப்படுகின்றன.




# வைகோவுக்கு நிபந்தனை அதிமுக கூட்டணியில் பிளவு!

இந்திய அரசியலில் குழப்பங்கள் ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. மத்திய அரசில் பங்கேற்கும் முக்கிய கூட்டணியான அ.தி.மு.க. வில் கருத்து முரண்பாடுகள் பகிரங்கமாகி உள்ளன. கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசினை கலைக்க வேண்டும் என அ.தி.மு.க. கூட்டணி கோரிக்கையை முன்வைத்தாலும், அதில் அங்கம் வகிக்கும் வைகோவின் மதிமுக, டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன அதிகம் அக்கறை கொள்ளவில்லை. இந்நிலையில் வைகோ தமிழ்நாடு அரசினை கலைப்பதற்கு 356-ம் சட்டப்பிரிவை பயன் படுத்துவதை தனது கட்சி எதிர்க்கும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார். இவ்வறிவிப்பு அ.தி.மு.க. கூட்டணித் தலைவியான செல்வி ஜெயலலிதாவிற்கு மிகுந்த ஆத்திரத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் தி.மு.க. அரசை கலைப்பதே அவரது தலையாய நோக்கமாகும்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர்களைச் சந்தித்த செல்வி ஜெயலலிதா, வைகோவை விமர்சித்ததுடன், அவர் மீது பகிரங்க நிபந்தனையையும் விதித்தார். ஜெயலலிதா தெரிவித்ததாவது: ஆரம்பத்தில் திமுக ஆட்சி கலைய வேண்டும் என்றார் வைகோ. இப்போது 356-வது சட்டப்பிரிவை பயன்படுத்தக் கூடாது என்கிறார். திமுக ஆட்சியை நீக்க வேண்டும் என்று முன்பு தீவிரமாக இருந்தவர் இப்போது முரண்பாடாக உள்ளார்.

இவரது பேச்சை மக்களாலும் அவரது கட்சித் தொண்டர்களாலும் புரிந்துகொள்ள முடியவில்லை. 365-வது சட்டப்பிரிவைப் பயன்படுத்தி திமுக ஆட்சியை கலைத்து தேர்தல் வந்தால் மதிமுக அத்தேர்தலில் நிற்கக்கூடாது என்றார் ஜெயலலிதா.


ஆரம்பமாகிவிட்டது

பிரித்தானியாவில்

GNANAM

Telecom Centers




| | | | |
|---|---|---|---|
| சிறீலங்கா | – 0.39p | லண்டன் | – 0.04p |
| இந்தியா | – 0.32p | லண்டன் Mobile | – 0.15p |
| கனடா | – 0.5p | அவுஸ்திரேலியா | – 8p |
| அமெரிக்கா | – 5p | சிங்கப்பூர் | – 0.20p |
| ஜேர்மனி | – 6p | சுவிற்சர்லாந்து | – 0.08p |
| பிரான்ஸ் | – 6p | | |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

GNANAM Telecom Centers
180 High Street North
East Ham, London E6, U.K.
Mobil: 0171 - 6506679
0172 - 2078068


(மேலதிக விபரங்களுக்கு 26-ம் பக்கம்)


# ‘வல்லரசுகள் அணுவாயுதங்களை குறைக்க ஒப்புக்கொள்ள வேண்டும்’

## - இந்தியப் பிரதமர் வாஜ்பாய்!

திருவாஜ்பாய் அவர்கள் இந்தியப் பிரதமராக பதவியேற்ற பின் முதல்தடவையாக அமெரிக்க நாளிதழ் ஒன்றுக்கு பேட்டியளித்தார். அமெரிக்காவின் முன்னணி நாளிதழான ‘வாஷிங்டன் போஸ்ட்’ இந்தியப் பிரதமரைப் பேட்டிகண்டு வெளியிட்டது. அதில் இந்தியப் பிரதமர் தெரிவித்திருப்பதாவது:

சில நாடுகள் தாம் அறிவித்துள்ளபடி இந்தியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை செயல்படுத்தினால், அவற்றால் இந்தியப் பொருளாதாரம் பாதிக்கப்படாமல் தடுக்க இந்தியாவும் பதில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இந்தியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடை நியாயமற்றது. தடை நடவடிக்கைகளால் இரு நாடுகளுமே (இந்தியா—அமெரிக்கா) இழப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இப்போது இந்தியாவும் அணு ஆயுத நாடு. எனினும் மற்ற அணு ஆயுத வல்லரசுகள் தயாரித்து வைத்திருப்பதுபோல், இந்தியா பெருமளவு அணு ஆயுதங்களைத் தயாரித்து குவிக்கப் போவதில்லை. அணு ஆயுதப் போட்டியில் இறங்கும் எண்ணமும் இந்தியாவுக்கு இல்லை. அணு ஆயுதப்போர் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இதர வல்லரசுகள் அணுக் குண்



டுகளை குவித்து வைத்துள்ளன. இந்தியாவைப் பொறுத்தவரை வலுவான அணுவாயுதம் எமக்குத் தேவை. ஏனெனில் மற்றவர்கள் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்துவதை தடுத்து நிறுத்துவதே அதன் நோக்கம். அமெரிக்கா, ரஷியா,சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் அயுதங்களை குறைக்க ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்தியா அணுகுண்டுச் சோதனைகளை நடத்தியது என்றார் இந்தியப் பிரதமர்.

# 13-ம் நூற்றாண்டு பாண்டியர் காலக் காசுகள்!

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இராமநாதபுரம் மாவட்டத்தில் கி.பி. 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் காலக் காசுகளை கண்டுபிடித்துள்ளது. செம்பு உலோகத்தால் செய்யப்பட்ட இக்காசுகள் இரண்டு கிராம் எடை கொண்டதாய் ஒழுங்கற்ற வட்டவடிவத்தில் உள்ளன. காசின் ஒரு பக்கத்தில் மீன் உருவமும் செண்டும் பொறிக்கப்பட்டு அதற்குமேல் ‘சுந்தர பாண்டியன்’ என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. பாண்டிய—கன்னட மன்னர்களின் கால இக்காசுகளின் இரு பக்கங்களிலும் இரு நாட்டு மன்னர்களுக்குரிய சின்னங்களுக்கு சமமதிப்பளிக்கப்பட்டுள்ளது. கன்னட மன்னர் வீரசோமேஸ்வரனும், பாண்டியமன்னன் இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனும் நல்லுறவு கொண்டிருந்ததாக ஏற்கனவே கல்வெட்டு மூலம் கிடைத்த தகவல் இதன் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

# அ.தி.மு.கவை உடைக்க பா.ஜ.க. சதி! அங்கம் வகிக்கும் அரசை குறை கூறும் ஜெயலலிதா!

கடந்த தேர்தலில் கூட்டணி அமைத்து மத்தியில் ஆட்சி அமைத்துக் கொண்டவர்கள் பாரதிய ஜனதாக்கட்சியும், அ.தி.மு.க.வும் அவர்களிடையேயான கூட்டு உடைந்து ஆட்சி கவிழும் என்பதனை ஒவ்வொரு நிமிடமும் இந்தியமக்கள் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். அண்மையில் இவர்களிடையேயான மோதல் தமிழகத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஜெயலலிதாவை, பாரதிய ஜனதா தமிழகத் தலைவர் இல. கணேசன் விமர்சிக்க, அதற்கு சூடான பதிலடியை அதிமுக வழங்க பரபரப்பான அரசியல் சூழ்நிலை உருவாகியது. இந்த நிலையில் 19-ம் திகதி காலை பத்திரிகையாளர்களைச் சந்திப்பதாக ஜெயலலிதா அறிவித்தார். ஏதேனும் முக்கிய முடிவை அறிவிக்கப்போகின்றார் என்ற பரபரப்பு பத்திரிகைகளுக்கு ஏற்பட்டன. ஜெயலலிதாவின் பேட்டியும் பதில்களும் ஆங்கிலத்திலேயே இருந்தன.

அப்போது அவர் தெரிவித்ததாவது: திமுகவுடன் பா.ஜ.க. இரகசிய தொடர்பு வைத்துள்ளது. அதிமுகவை பிளக்க பாஜக. சதி செய்கிறது. எங்கள் கூட்டணிக்குள்ளும் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. இது நடக்காது. பிளப்பதற்கான முயற்சி பற்றிய ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே நன்னடத்தை என்பது இரு வழிப் பாதையாகவே இருக்க முடியும். ஆனால் பா.ஜ.க. அப்படி நடந்து கொள்ளவில்லை. பத்திரிகைகள் வாயிலாக என்னைப் பற்றியும், அதிமுக குறித்தும் கடுமையான விமர்சனங்கள் வருவதற்கு பா.ஜ.க. வினர் ஏற்பாடு செய்கின்றனர். இது பா.ஜ.க.வுக்கு நல்லதல்ல. நல்ல நம்பிக்கை அடிப்படையில் பா.ஜ.க. செயல்பட வேண்டும். பிரச்சினை பா.ஜ.க. கையில். நான் கடுமையாகச் சொல்லவில்லை. நட்பு அடிப்படையில் எச்சரிக்கிறேன். இது இறுதி எச்சரிக்கையல்ல என்றார் அவர்.

# தமிழகத்தில் அணுமின் நிலையம் ரஷ்யா அமைத்துக் கொடுக்கும்!

தமிழகத்தில் கூடங்குளத்தில் தலா ஆயிரம் மெகாவாட்திறன் கொண்ட இரு அணுமின் நிலையங்களை அமைக்கும் பழைய ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப் படவுள்ளது. இந்தியாவுக்கும் அப்போதைய சோவியத் நாட்டுக்கும் 1988-ம் ஆண்டில் இவ்வொப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் சோவியத் நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் இவ்வொப்பந்தத்தை கிடப்பில் போடச் செய்துவிட்டன. இந்தியா அணுகுண்டு வெடித்ததனால் உலகெங்கும் ஏற்பட்ட கொந்தளிப்பு நிலையிலும் ரஷ்யா இவ்வொப்பந்தத்தை புதுப்பிக்க முன்வந்துள்ளது. இந்தியாவுக்கு அணுசக்தி தொடர்பான எந்த ஒத்துழைப்பும் வழங்கக்கூடாது என்று அமெரிக்கா மிரட்டிவரும் வேளையில், ரஷியா இம்முடிவுக்கு வந்தது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இந்த வார இறுதியில் இந்தியத் தலைநகரான டெல்லிக்குவரும் ரஷ்ய அணுசக்தித் துறை அமைச்சர் இப் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளார்.


## ஸ்ரீவன் வாகன சேவை



உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

தொலைபேசி இலக்கம்:
06 11 36 94 44 / 01 64 97 98 53

Pub


# ☺ வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும் ☹

☺ ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தமிழர்கள் அனைவரும் குற்ற உணர்வு உள்ளவர்கள் என்பது போல் சித்தரிக்கப்பட்டது. ராஜீவ் காந்தி என்ற நபரை நாம் தேசியத்தலைவராக பார்க்கவில்லை. அவரையும் நம்நாட்டு பிரஜையாகவே கருதுகிறோம். நீதிமன்றமும் இதைத்தான் கடைப்பிடித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாததால் மிகப்பெரிய ஜனநாயகப் படுகொலை நடந்திருக்கின்றது.

*- புதுச்சேரியில் இடம்பெற்ற மரண தண்டனை ஒழிப்பிற்கான முதல் சிறப்பு மாநாட்டுத் தலைமையுரையில் சுகுமாரன் குறிப்பிட்டதாக ஜூன் 9 நக்கீரன் இதழில்*

❀ ❀ ❀

☺ கடந்த 10 ஆண்டுகளில் 98 நாடுகளில் மரண தண்டனை கைவிடப்பட்டுள்ளது. ஆனால் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் ஒரே நேரத்தில் 26 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதும் தமிழகத்தில் மரண தண்டனைக்கான புதிய சட்டம்கொண்டு வந்திருப்பதும் மனித உரிமையின் குரல் வளையை நெரித்துக் கொல்லும் செயலாகும்.

*- நக்கீரன் ஜூன் 9 இதழில் ‘மரண தண்டனை தேவையா?’ எனும் செய்திக் கட்டுரையில்*

❀ ❀ ❀

☺ தமிழ்நாட்டு கவர்மெண்ட் பலமுறை கலைச்சிருக்கிறாங்களே....அப்பெல்லாம் என்ன நடந்துபோச்சு? சட்டம் - ஒழுங்கு சரியில்லைன்னா, அரசு ஒழுங்கா செயற்படலேன்னா, தி.மு.க. அரசை கலைக்கிறதிலே தப்பேயில்லை. கருணாநிதியே எம்.ஜி.ஆர். ஆட்சியை கலைக்க துணைபோயிருக்காரு. அப்பெல்லாம் ஆகாததா? இவர் ஆட்சியைக் கலைச்சா ஆயிடப்போகுது.

*- அ.தி.மு.க வைச்சேர்ந்த மத்திய அமைச்சர் தம்பித்துரை கூறியதாக 14.06.98 ஜூனியர் விகடனில்*

❀ ❀ ❀

☺ முன்பு 1957-ல் பிரிட்டனில் லேபர் கட்சியின் வெளியுறவு நிபுணர் நைபெவன் ஒருதலைப்பட்சமாக அணுஆயுதம் குறைப்பதை எதிர்த்தார். அப்புறம் ‘நான் மாநாட்டு அறைக்குள் நிர்வாணமாகத்தான் நுழையவேண்டியிருக்கும்’ என்றார். மறுநாள் பிரபல கேலிச் சித்திரக்காரர் விக்கியின் கார்ட்டூனில் மகாத்மகாந்தியின் ஆவி பெவனின் காதில் கிசுகிசுக்கின்றது. ‘நான் மாநாட்டு அறைக்கு நிர்வாணமாகத்தான் போனேன். ஜெயித்தது நான்தான்’ அது இந்தியனாக இருப்பது பெருமைக்குரிய காலம்.

*- மணி சங்கர் ஐயர்-இந்தியா டுடே 17.06.98 இதழில்*

❀ ❀ ❀

☺ இந்தியா அணுகுண்டு வெடித்து சோதனை நடத்தியதில் பெரும் பங்காற்றிய அப்துல்கலாம் புத்தகம் ஒன்று எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தின் பெயர் ‘இந்தியா 2020’ விண்வெளி விஞ்ஞானி ஒய். எஸ்.ராஜனுடன் இணைந்து அவர் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். பென்குயின் தயாரித்துக்கொண்டிருக்கும் இந்தப் புத்தகம் அடுத்த மாதம் (ஜூலை) வெளிவர இருக்கின்றது. இந்தக் புத்தகத்தில் 2020-ம் ஆண்டு இந்தியா எப்படியிருக்கும், எந்த விடயங்களில் இந்தியா முன்னணி நாடுகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு தன்னிறைவு பெற்று சாதிக்கும் என்று கணித்து எழுதியுள்ளாராம். எனவே இந்தப் புத்தகம் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

*- ராணி 14.06.98 இதழில்*

❀ ❀ ❀


☺ பல்கலைக்கழக மாநிலக்குழு 18 போலிப் பல்கலைக் கழகங்களின் பெயர் பட்டியலை புதன்கிழமை வெளியிட்டது. இதில் திருச்சியில் உள்ள டி.டி.பி. சமஸ்கிருத பல்கலைக் கழகத்தின் பெயர் இடம் பெற்றுள்ளது. போலிப் பல்கலைக் கழகங்கள் குறித்து மாணவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு பல்கலைக்கழக மானியக்குழு அறிவுறுத்தியுள்ளது.

*- தினமணி 18.06.98 நாளிதழில்*

❀ ❀ ❀


☺ தமிழக அரசுக்கு எதிராக அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவை பயன்படுத்த வேண்டும் என்று ஒருபோதும் கேட்கமாட்டோம். இது ம.தி.மு.க. வின் கொள்கை. அச்சட்டப் பரிவைபயன்படுத்த வேண்டாம் என்பதால் தி.மு.க. அரசு சாதனை செய்திருக்கிறது என்று நாங்கள் ஒப்புக் கொள்வதாக அர்த்தமல்ல. மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டும். இந்த ஆட்சியை அகற்றவேண்டும்.

*- ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியதாக தினமணி 18.06.98 நாளிதழில்*



“சொன்னாக் கேளுங்க...
இப்படியெல்லாம் நிற்கக்கூடாது!”

*நன்றி: ஆனந்த விகடன்*




ஐரோப்பா


# செக் தேர்தலில் சோசலிச கட்சி வெற்றி

மத்திய ஐரோப்பிய நாடான செக் குடியரசில் கடந்த வாரம் நடந்து முடிந்த தேர்தலில் சோசலிசக் கட்சியினர் முதன் முதலாக வெற்றி பெற்றுள்ளனர். 1989-ம் ஆண்டு கம்யூனிச ஆட்சி அகற்றப்பட்டது முதல் இன்று வரையான எட்டு வருட காலமும் செக்குடியரசு வலதுசாரி கட்சிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 200 ஆசனங்களைக் கொண்ட அதன் பாராளுமன்றத்தின் கீழ்ச் சபையில் 75 ஆசனங்களை இடது சாரிக் கட்சி வென்றது. ஆனாலும் அரசமைக்கக் கூடிய பெரும்பான்மை பலத்தை அது பெறத் தவறியுள்ளது. இந்நிலையில் செக் குடியரசின் பிரதான கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி வக்லாவ் ஹவலைச் சந்தித்துள்ளனர். இடதுசாரி சோசலிசக் கட்சியினர் மற்றைய சோசலிச சார்பு கட்சி ஒன்றுடன் இணைந்து அரசமைக்க உத்தேசித்துள்ளனராயினும், 'அமையும் எந்த வொரு அரசும் ஸ்திரமற்ற தன்மையையே கொண்டிருக்கும்' என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.



# கோல் அரசிற்கெதிராக பல்லாயிரம் மக்கள் ஊர்வலம்

ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் பதவியேற்று 16 வருடங்களாயும் இதுவரை அவரால் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியவில்லை. அத்துடன் தீவிர வலதுசாரிகளின் செல்வாக்கினை அதிகப்படுத்தவும் அவரது நடவடிக்கைகளே காரணம். ஆகையினால் ஹெல்மட் கோல் பதவி விலக வேண்டும் எனக் கோரி பேர்லின் நகர மத்தியில் கடந்த சனியன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று இடம்பெற்றது. வர்த்தக கூட்டமைப்புகளினாலும் இடதுசாரி அமைப்புக்களினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இப் பேரணியில் பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்டனர்.



இவ் ஊர்வலத்தின்போது கோல் எதிர்ப்புக் கோஷங்கள் பல எழுப்பப்பட்டன. இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்ட தொழிலாளர் அமைப்பின் பேச்சாளர் ஜேர்மனிக்கு புதிய முகங்கள் மட்டுமல்ல, புதிய கொள்கைகளும் தேவைப்படுகின்றன என்றார். இவ் ஊர்வலம் நடந்து கொண்டிருந்த அதேவேளை பேர்லின் நகரின் வேறொரு பகுதியின் வலதுசாரி N.D.P. கட்சியினர் வேறொரு ஊர்வலத்தை நடத்தினர்.

இதில் 300 முதல் 400 வரையானவர்களே கலந்துகொண்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை பொலிசார் கலைக்க முற்பட்டபோது மறுத்த பத்திற்கும் மேற்பட்ட வலதுசாரியினர் கைதுசெய்யப்பட்டனர்.

# ஜேர்மனிய மார்க்குக்கு வயது ஐம்பது !

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு தனது நாணயமான மார்க் அறிமுகம் செய்யப்பட்ட ஐம்பது வருட பூர்த்தியைக் கொண்டாடியது. இரண்டாம் உலக யுத்தத்தின்பின் மீள அமைக்கப்பட்ட ஓர் தேவாலயத்தில் இவ் விழா நடைபெற்றது. ஜேர்மன் நாட்டு அதிபர், ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் விம் டுயிசன்பேர்க், மற்றும் ஜேர்மன் ஜனாதிபதி ரோமன் ஹெர்சோக் போன்றோர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் ஜேர்மன் அதிபர் ஹோல் பேசுகையில், 'எமது எதிர்காலத்தை ஸ்திரமாக்க எமது நாணயம் உறுதியாக இருக்கும் என பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அதேவேளை எம்மை தனித்து அடையாளம் காட்ட இந் நாணயமே அன்று உதவியது. இன்றும் உலக அளவில் எமது நாணயத்தின் மதிப்பு உயர்ந்தே உள்ளது' என்றார்.

1948-ம் ஆண்டு உலகப் போர் முடிவில் அமெரிக்க மற்றும் அன்றைய ஜேர்மன் ஆய்வாளர்கள் சிலரும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பலனாக ஜேர்மனியின் அமெரிக்க, பிரித்தானிய, பிரெஞ்சு பகுதிகளில் 48 ஜூன் 20-ம் திகதி மார்க் அறிமுகம் செய்யப்பட்டது. குடும்பத் தலைவர்கள் உட்பட பல்லாயிரம் மக்களுக்கு பொது இடங்களில் வைத்து அன்றைய டொச் மார்க் அறுபதிற்குப் பதிலாக புதிய நாற்பது மார்க்குகள் விநியோகிக்கப்பட்டன. இன்று உலகளவில் அமெரிக்க டொலருக்கு அடுத்ததாக ஜேர்மன் மார்க் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

ஆபிரிக்கா

# எதியோப்பியா - எரித்திரியா முழுமையான ஒரு யுத்தத்திற்கு ஆயத்தம்

சர்வதேச மத்தியஸ்தங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் அதேவேளை, மறுபுறம் எதியோப்பியாவும்-எரித்திரியாவும் முற்றுமுழுதான ஒரு யுத்தத்திற்கு தம்மைத் தயார் செய்து வருகின்றனர்.

ஆபிரிக்க தலைவர்களைக் கொண்ட குழுவொன்று இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அதேபோல் அமெரிக்க - ருவாண்டா போன்ற நாடுகளும், ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பும் இவ் அமைதி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. கடந்தவெள்ளியன்று இரு நாடுகளிற்கும் இடையேயான தற்காலிக போர் நிறுத்தம் முடிவுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து மறுநாள் மீண்டும் மோதல்கள் ஆரம்பமாகியது.

இரு நாடுகளிற்கும் இடையேயான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நாடுகள் முன்வைத்த கோரிக்கைகளை எரித்திரியா நிராகரித்தது. இக் கோரிக்கைகளின்படி எரித்திரியா எல்லைப் பகுதியில் தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து நிபந்தனைகள் எதுவுமின்றி வெளியேற



வேண்டும் என்றும், இரு நாடுகளும் நேருக்குநேரான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்றும் கோரப்பட்டது. ஆனால் எரித்திரியாவோ தமது பேச்சுக்களில் சர்வதேச கண்காணிப்பாளர் ஒருவர் முதலாம் இடத்தில் இருக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

பல நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தும், பலத்த பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியுள்ள இந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என கடந்த வெள்ளியன்று ஐ.நா. வின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார். இவ் யுத்தத்தை இட்டு தான் மிகவும் வருத்தம் அடைவதாயும், இரு நாடுகளும் நேருக்குநேராக பேசிக்கொள்வதுடன், ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பின் அமைதி முயற்சிக்கும் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

எல்லைகள்தான் பிரச்சினைக்கான காரணம் எனக் கூறப்படும் இவ்வேளையில் ஆபிரிக்க ஒருமைப்பாட்டு அமைப்பு தூதுவர்களைக்கொண்ட ஓர் குழு ஒன்றை அமைத்து சரித்திர ஆய்வுகளையும் மற்றும் காலனித்துவ எல்லைகளையும் கணித்துவருகிறது. இதன்படி இக்குழு பிரச்சினைக்குள்ளான எல்லைப் பகுதியை சரியான முறையில் பிரிவு படுத்தும் என அவ் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

இது இவ்விதம் இருக்க எரித்திரிய மக்கள் தமது 30 வருடகால எதியோப்பியாவிற்கு எதிரான சுதந்திரப்போரில் வீர மரணமடைந்த தியாகிகளை நினைவு கூர்ந்தனர். அதன்போது தொடர்ந்தும் வெளியாரின் ஆக்கிரமிப்புக்கெதிராக தாம் போராடுவோம் என சூழுரைத்தனர்.

கடந்த சனியன்று நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற இந்நினைவு வைபவங்களின்போது விடுதலை கீதங்கள் பாடப்பட்டன, தியாகிகளின் சமாதிகளின்முன் மலர்வளையங்கள் வைக்கப்பட்டன. அன்றைய தினம் நாட்டின் விடுதலை நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# கினேபிசோ எல்லைப் பகுதியை நோக்கி செனகல் தாக்குதல்

செனகல் நாட்டின் இராணுவ மற்றும் விமானப் படை அண்டைநாடான கினேபிசோவின் எல்லைப் பகுதியின் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. கடந்த சனியன்று கினேபிசோவின் வடமேற்கு எல்லைப் பகுதியில் செனகல் நடத்திய இத் தாக்குதலால் நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும், ஏராளமானோர் காயமடைந்தும் உள்ளனர் என போர்த்துக்கேய வானொலி அறிவித்துள்ளது. இவ் எல்லைப்பகுதி நகரமான இன்கோர் பகுதியில், கினோபிசோ அரசுக்கெதிரான கிளர்ச்சி இராணுவத்தினரின் முகாம் அமைந்துள்ளதாயும், அப் பகுதியை நோக்கியே செனகல் குண்டுவீசி தாக்கியுள்ளது எனவும் செனகல் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக வானொலிச் செய்தி மேலும் தெரிவித்தது. ஏற்கனவே பினேபிசோவின் தலைநகரான பிசோவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் செனகலின் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக அங்கு நடந்து வரும் அரச எதிர்ப்பு கிளர்ச்சி நடவடிக்கைகள் உக்கிரம் அடைந்துள்ள நிலையில், வெளிநாட்டவர்கள் தொடர்ந்தும் வெளியேறியவண்ணம் இருக்கின்றார்கள்.

இதேவேளை பிசோ விமான நிலையத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சி இராணுவத்தின் பேச்சாளர், தாம் ஏழு பிரெஞ்சுப் பிரஜைகளைக் கைது செய்திருப்பதாய் தெரிவித்தார். ஆனால் அங்குள்ள பிரெஞ்சுத் தூதரகம் அதனை மறுத்துள்ளதாயினும் சில பிரெஞ்சுப் பிரஜைகள் காணாமல் போயுள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளது.

அமெரிக்கா

# மரணதண்டனையை எதிர்நோக்கும் போதைப்பொருள் மன்னன்

அமெரிக்காவிற்குள் ஆறு வருட காலத்திற்குள் 30 தொன் போதை மருந்தினை கடத்தினார் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அமெரிக்க நீதிமன்றம் ஒன்றினால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

1980 முதல் 90 வரையான காலப் பகுதியில் இயங்கிய கொலம்பிய போதைவஸ்து மன்னர்களில் இவரே இறுதியானவர் எனச் சொல்லப்படுகிறது. 'Big Boss' என அழைக்கப்பட்ட இவரது உண்மைப் பெயர் பஸ்டர் பெரபின் 51 வயதான இவர் 1996-ம் ஆண்டு வெனிசுவேலாவில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

அமெரிக்க நீதிமன்றம் இவரது குற்றத்தினை ஏற்றுக்கொண்டுள்ள பட்சத்தில் இவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கலாம் என சொல்லப்படுகிறது.

## மத்திய கிழக்கு

# 'ஜெருசலேம் விரிவாக்கம்' ஜோர்தான் அரசு கடும் கண்டனம்

இஸ்ரேலிய அரசு கடந்த வாரம் ஜெருசலேம் நகரப்பகுதியை விரிவாக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது. அதன் திட்டப்படி ஜெருசலேம் நகர சபைப் பிரிவுடன் யூத குடியேற்றங்களும் மேற்குக் கரைப் பகுதியில் உள்ள பாலஸ்தீன குடியேற்றங்களும் இணைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் இஸ்ரேல் தான் இதுவரை ஆரம்பித்து முடியாமலிருக்கும் யூத குடியேற்றங்களை எதிர்ப்புக்களின்றி நிறைவேற்றிக்கொள்ளவும் மேலும் பாலஸ்தீனிய மக்களை நிலங்களற்றவர்களாக்கி விடவும் முனைந்து வருவதாக ஜோர்தான் அரசு குற்றம் சுமத்தியுள்ளது.

இஸ்ரேல் அரசின் ஜெருசலேம் விரிவாக்கத்தால் பாலஸ்தீனியர்களே பெரும்பாதிப்பிற்குள்ளாவார்கள் என்றும் ஏற்கனவே இருமுறை பாலஸ்தீனியர்களின் பாரிய இடம் பெயர்வுகளை சந்தித்துள்ள ஜோர்தான் மேலும் நெருக்கடிகளுக்குள்ளாகும் என்றும் அதைவிட, இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகுவின் தற்போதைய அறிவிப்பானது 1994-ம் ஆண்டு ஒஸ்லோவில் மேற்கொள்ளப்பட்ட அமைதி உடன்பாட்டிற்கும் பாலஸ்தீனியப் பிரச்சினையில் அமெரிக்கா தற்போது மேற்கொண்டுவரும் தீர்வு முயற்சிகளுக்கும் எதிரான ஓர் நடவடிக்கை. மற்றும் பிராந்திய அமைதியின்மைக்கு மேலும் வலுச் சேர்க்கும் என்றும், ஜோர்தானிய வெளிநாட்டமைச்சர் இஸ்ரேலைக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜோர்தான் இவ்விதம் குற்றம் சுமத்தியுள்ள அதேவேளை,



அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மெடலின் ஓல்பிறைட்டும் இஸ்ரேலின் செயலை 'தூண்டுதல் நடவடிக்கை' என வன்மையாக கண்டித்ததுடன், உடனடியாக அத் திட்டம் கைவிடப்பட வேண்டும் என்றும் நேரடியாக இஸ்ரேலியப் பிரதமருடன் தொலைபேசியில் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டு 6 நாள் யுத்தத்தின் மூலம் கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்டது. பின்னர் இஸ்ரேலுடன் அப்பிரதேசம் இணைக்கப்பட்டதை சர்வதேச உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்காவின் கண்டனத்தை மறுத்த இஸ்ரேலியப் பிரதமர், தனது புதிய விரிவாக்கல் திட்டமானது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர அரசியல் நோக்கம் கொண்டதல்ல என்றும் கூறினார்.

அதேவேளை இத் திட்டம் அரசியல் ரீதியான நோக்கங்களைக் கொண்டதே எனவும் சியோனிசவாதிகள் அரபு மக்களை பிரித்து இப்பிராந்தியத்தில் சிறுபான்மையினராக்க முயற்சி செய்கிறார்கள் என்று ஹமாஸ் அமைப்பினர் கூறியுள்ளனர். பாலஸ்தீனியர்களைப் பொறுத்த வரை கிழக்கு ஜெருசலேம் எதிர்கால பாலஸ்தீனத்தின் தலைநகராக வேண்டும் என்பதே குறிக்கோளாக உள்ளது.

# சிரிய அதிபர் லெபனான் விஜயம்


சிரிய அதிபர் ஹபிஸ் அல் அஷாட் லெபனானுக்கு விஜயம் செய்யவேண்டும் என அந்நாட்டின் ஜனாதிபதி எலியஸ் ஹராவி விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். கடந்த 23 வருடங்களில் சிரியாவில் இருந்து விஜயம் மேற்கொள்ளும் முதலாவது அதிபர் இவரென அரச தொலைக்காட்சி கடந்த வெள்ளியன்று அறிவித்தது. லெபனானின் பிரதம மந்திரி ரபிக் அல் ஹரீரி வாஷிங்டனுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு புறப்பட்டவேளை சிரிய அதிபரின் வருகை குறித்து தெரிவித்தார். லெபனானில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற இருக்கும் வேளையில் அதற்கு முன்னதாக ஒக்டோபர் மாதம், அசாத்தின் விஜயம் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினார்.

1975 முதல் 90 வரையான காலத்தில் உள்நாட்டுக் கலவரம், யுத்தம் போன்றவற்றினால் நலிவடைந்திருந்த லெபனானுக்கு ஸ்திரமான ஒரு நிலையை ஏற்படுத்த சிரியாவே உதவியது. அந்நேரம் சிரியா தனது 35,000 படையினரையும் அங்கு அனுப்பியிருந்தது குறிப்பிடத் தக்கது.

# பொருளாதாரத் தடையை தொடர்ந்து தாங்க ஈராக் தயாரில்லை

1990-ம் ஆண்டு ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்புச் சபை ஈராக்கின் மேல் பொருளாதாரத் தடையை விதித்தது. பின்னர் அது சிறிது தளர்த்தப்பட்டு உணவிற்காக எண்ணெய் விற்பனை என்று குறிப்பிட்ட தொகை எண்ணெயை குறிப்பிட்ட காலத்திற்குள் விற்கலாம் என நிபந்தனை விதித்திருந்தது.

இதுவரை காலமும் 2.25 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெய்யை ஆறு மாத காலத்திற்குள் விற்கலாம் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெய் விற்கலாம் என புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டது. கடந்த வெள்ளியன்று ஐ.நா. பாதுகாப்புச் சபை 300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எண்ணெய் வள உபகரணங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் தெரிவித்தது. இதனை ஈராக் ஏற்றுக்கொண்டுள்ளபோதும் உணவிற்காக எண்ணெய் என்கின்ற இப் பொருளாதார நடவடிக்கையை தொடர்ந்தும் தனது நாடு ஏற்றுக்கொள்ளாது என அதன் வெளிநாட்டமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.



## ஆசியா

# சுகர்னோவின் மறைவுநாள் இந்தோனேசியாவில் கொண்டாடப்பட்டது

இந்தோனேசியாவின் முதலாவது ஜனாதிபதியான சுகர்னோ காலமாகி 28-வது வருட ஞாபகார்த்தத்தை இம்முறை இந்தோனேசிய மக்கள் நினைவு கூர்ந்தனர். இதுவரை காலமும் சுகார்ட்டோவின் அரசினால் இச் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டிருந்தன.

கடந்த சனியன்று முன்னாள் தலைவர் சுகர்னோவின் சமாதி அமைந்திருந்த இடத்தில் 30,000 இற்கும் அதிகமான மக்கள் திரண்டனர். அதேவேளை அவரது குடும்ப இல்லப் பகுதியில் 5,000 இற்கும் அதிகமான மக்கள் கூடி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

டச்சு ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தோனேசியா போராடியபோது சுதந்திரப்போராட்டத்தை வழிநடத்தியவர் சுகர்னோ ஆவர். பின்னர் 1945-ம் ஆண்டு அது விடுதலையடைந்தபோது அதன் முதலாவது ஜனாதிபதியாக அவர் தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் 60-ம் ஆண்டுகளில் அவர் மேற்கொண்ட தேசிய மயப்படுத்தல் நடவடிக்கைகளால் வெளிநாட்டு நிறுவனங்கள் தேசியமயப்படுத்தப்பட்டன. பல நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை மையமாகக் கொண்டு இராணுவ சதி முயற்சி ஒன்று சுகார்ட்டோவின் தலைமையில் நடந்தேறியது. இதன்போது சுகர்னோ தூக்கி எறியப்பட்டார். அன்றுமுதல் இறக்கும்வரை அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அண்மையில் சுகாட்டோ அரசு தூக்கியெறியப்பட்டு புதிய அரசு பதவியேற்றதன்பின் இந்தோனேசியாவில் குறிப்பிடத் தக்க மாறுதல்கள் ஏற்பட்டுட்டு வருகின்றன. இந்நிலையில் முன்னைய தலைவரின் ஞாபகார்த்தம் நினைவு கூரப்பட்டதானது



அங்கு ஏற்படப்போகும் ஒரு அரசியல் மாற்றத்திற்கான ஓர் அறிகுறி என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# பாகிஸ்தான் கலவரங்களில் 9 பேர் மரணம்

பாக்கிஸ்தானின் துறைமுக நகரான கராச்சியில் கடந்த சனியன்று இடம்பெற்ற கலவரங்களின்போது 9 பேர் வரை இறந்து 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதேபோன்று கடந்தவெள்ளியன்று மற்றுமோர் பகுதியில் நடந்த கலவரமொன்றின் போது 10 பேர் கொல்லப்பட்டனர். இக் கலவரங்களிற்கு இஸ்லாமிய மதத்தின் இரு பிரிவினரைச் சேர்ந்தவர்களே காரணம் எனச் சொல்லப்படுகிறது. Back எனும் ஓர் அமைப்பும் MQM எனச் சொல்லப்படும் ஓர் அமைப்பும் தமது அங்கத்தவர்கள் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கைகளின் தொடர்ச் செயற்பாடுகளாகவே இக் கலவரங்களை பொலிசார் கணிப்பிடுகின்றனர்.

கடந்த வெள்ளியன்று கண்டு பிடிக்கப்பட்ட சடலங்களில் பெரும்பாலானவை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்டன. மேலும் இரண்டு இளைஞர்களது சடலங்கள் சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் சுடப்பட்ட நிலையில் ஒரு வாகனத்திற்குள் இருந்து கண்டு பிடிக்கப்பட்டன. இவர்கள் எல்லோரும் MQM அமைப்பின் அங்கத்தவர்கள் என்றும் இக் கொலைகளுக்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே மற்றைய கொலைகள் நடத்தப்பட்டன என்றும் சொல்லப்படுகின்றது.

# பதவி நீக்கப்பட்ட உள்துறை அமைச்சர் உதவி ஜனாதிபதியாக நியமனம் – ஈரான்

ஈரானின் கடும்போக்குக் கொண்ட பாராளுமன்றத்தினால், தாராள முற்போக்குத் தன்மை வாய்ந்த வெளிநாட்டமைச்சர் அப்துல்லா நூறி பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டார். ஈரானியப் பாராளுமன்றத்தின் அங்கத்தவர்கள் உள்துறை அமைச்சர் நூறி பொறுப்பற்ற தன்மையாக நடந்து கொள்கிறார் என்றும், அனுபவம் அற்றவர்களை பொறுப்பான பதவிகளில் அமர்த்தி நாட்டில் ஸ்திரத் தன்மையை கெடுக்கிறார் என்றும், பல மாகாணங்களில் அவரது வித்தியாசமான பேச்சுக்கள் பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது என குற்றம் சுமத்தியுள்ளனர். இக் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுத்த உள்துறை அமைச்சர், தனக்கு எதிராக நடத்தப்பட்ட இச்சதியானது தன்னை மட்டும் பாதிக்கவில்லை. இந்நாட்டின் புதிய இளம் தலைமுறையினரையும் அவர்களது எதிர்காலத்தையும் பாதித்துள்ளது. இச் சதியாளர்கள் புரட்சியாளர்களை வேறுபடுத்தி காணமுற்படுகிறார்கள் என்றார்.

ஈரானின் புதிய ஜனாதிபதியும் சீர்திருத்தவாதியுமான முகமட் கட்டாமி உடனடியாக அவரை உதவிஜனாதிபதியாக நியமித்தார். 1997-ம் ஆண்டு ஈரானிய ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஜனாதிபதியான கட்டாமிக்கு ஈரானின் பழமைவாத இஸ்லாமிய அங்கத்தவர்களின் நெருக்குதல் தொடர்ந்து இருந்தே வந்துள்ளது. இந்நிலையில் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்ட உள்துறை அமைச்சரை உதவி ஜனாதிபதியாக அவர் நியமித்த செயலானது மேலும் இரு தரப்பினரிடையேயான நெருக்கடியை அதிகப்படுத்தும் என கூறப்படுகிறது.

# வெகுவிரைவில்

## கப்டன் 'கஜன்' அரங்கில்



### ஈழமுரசு வழங்கும் மாபெரும் நாடகவிழா

# 'நாடகப் போட்டி 1998'

*12.07.1998 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணி*

இடம்: **JUGENDZENTRUM - Pape Str-1, 45147 Essen.**

## *நிகழ்ச்சி நிரல்*

- ★ **அமைதி வணக்கம்**
- ★ **மங்கல விளக்கேற்றல்**
- ★ **தலைமையுரை**
- ★ **கருத்துரை**
- ★ **எழுச்சி நடனங்கள்** [கலைபண்பாட்டுக் கழகம் – ஜேர்மனி]
- ★ **அறிவிப்பாளர் அரங்கம்**

**போட்டியில் கலந்து கொள்ளும் நாடகங்கள்**

1. லூட்ஸ் வெக்ஸ் பேர்க்க' முல்லை ஜெயா குழுவினர் வழங்கும் **'சலனம்'** – இயக்கம்: செ. ஜெயராஜா
2. பிறேமன் தமிழ் கலை மன்றம் வழங்கும் **'சுமைகள்'** – இயக்கம்: நாச்சிமார்கோவிலடி இராஜன்
3. டோட்முண்ட் ஓயாத அலைகள் நாடக மன்றம் வழங்கும் **'விடிவை நோக்கி'** – இயக்கம்: குரும்பையூர் S.S கதிர்
4. ஓபகௌஸன் கலைப்பெருமன்றம் வழங்கும் **'வேர்'** – இயக்கம்: க. முருகதாசன்
5. எசன் தமிழர் கலாச்சார நற்பணிமன்றம் வழங்கும் **'வெண்பனிக்கோலங்கள்'** – இயக்கம். R. பாலசுந்தரம்
6. கிறீபீல்ட் தமிழ் கலை மன்றம் வழங்கும் **'ஊமைக் காயங்கள்'** – இயக்கம் திரு. செல்லக்கிளி

- ★ **தொகுப்புரை**
- ★ **நன்றியுரை**

**கலைஞர்கள், ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறது 'ஈழமுரசு'**

Pub. Gra.








# எங்கும் கிடைக்கிறது

*Marketed & Distributed by*

***Ayngaran Limited***
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*





போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

Pub.



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

## ஆர்ப்பாட்டங்களின் பின்னணி

இப்போது சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவது தினசரி நிகழ்ச்சிகளில் ஒன்றாகி விட்டது.

ஒரு ஜனநாயக நாட்டில் பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை, தங்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கும் உரிமை – இவையெல்லாம் மக்களுடைய அடிப்படை உரிமைகள். இந்த அடிப்படையில் ஓரளவுக்கேனும் உண்மையான ஜனநாயக அமைப்பு நடைமுறையில் உள்ள நாடுகளில் மக்கள் தங்கள் நாளாந்தப் பிரச்சினைகளுக்காக போராடுவதற்கும், குறிப்பாக, ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடத்துவதற்கும் கூட்டங்கள் கூடி தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கும் அந்த நாட்டு அரசாங்கங்கள் அனுமதி வழங்கி வருகின்றன.

ஆனால் அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் முதலான பாசிசச் சட்டங்களின் கீழ் ஆட்சி நடத்தும் சிறீலங்கா அரசாங்கம் – சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் – ஆர்ப்பாட்டங்கள் நடாத்துவதற்கும் ஊர்வலங்கள் நடாத்துவதற்கும் வழங்கிவரும் அனுமதி இவற்றிலிருந்து வேறுபட்டது.

ஆர்ப்பாட்டம் செய்பவர்களும், ஊர்வலம் நடத்துபவர்களும், சிங்களவர்களே இருக்கவேண்டும். தமிழர்களது உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவாக எவரும் ஆர்ப்பாட்டம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்வதானால் அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் தலைமையில் அரசாங்கத்தை கடுமையாகக் கண்டிக்காத வகையில் அரசாங்கம் சொல்கின்றபடி பாசாங்கு ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் நடத்த வேண்டும். இத்தகைய நிபந்தனையை ஏற்றுக் கொள்பவர்களுக்கு மட்டுமே ஆர்ப்பாட்டம் செய்வதற்கும், ஊர்வலம் நடத்துவதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

தமிழ் மக்களின் விடிவுக்காக போராடிவரும் விடுதலைப் புலிகளை ஆதரித்து எவரும் கொழும்பில் ஊர்வலம் நடத்தமுடியாது. அதுபோல சிறீலங்கா படைகள் தமிழர் தாயகத்தில் நடாத்திவரும் இனப்படுகொலைக் கண்டித்தும் எவரும் ஊர்வலம் நடாத்தமுடியாது.

சுருக்கமாகச் சொல்வதானால், தமிழர் தாயகத்தில் சிறீலங்கா அரசாங்கம் செய்துவரும் இனப்படுகொலையை நியாயப்படுத்தும் விதத்தில் மட்டுமே ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டமும் நடாத்த முடியும். சமீபத்தில் பிரித்தானிய தூதுவராலயத்தின் முன்னால் நடந்த ஆர்ப்பாட்டம், 'இன்ரர்நஷனல் அலேர்ட்' அலுவலகத்தின் முன் நடந்த ஆர்ப்பாட்டம் என்பவற்றை இவற்றிற்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம். இதிலே வேடிக்கை என்னவென்றால் இத்தகைய ஊர்வலங்களை நடத்துபவர்கள் தாங்கள் மனித உரிமைகளின் பாதுகாவலர் என்று சொல்லிக்கொள்வதாகும்.

சிறீலங்காவை பொறுத்தவரையிலும் சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும், சிங்களவர்கள் மட்டும்தான் மனிதர்கள்– மற்றவர்கள் எல்லாம் விலங்குகள். மனிதர்கள் விலங்குகளைக் கொல்வது மனித உரிமை மீறல் ஆகாது. இதை நியாயப்படுத்துவதற்கே சிறீலங்கா அரசாங்கத்தால் இப்போது தினசரி கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் திட்டமிட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

# யாழ் குடாவை விடுவிக்கத் தயாராகும் புலிகள்

ஒரு பார்வை

நீதி மன்றங்கள் மூடப்படுகின்றன; உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் பதவி விலகுகின்றனர்; புலிகளினால் ஏராளமான புதிய உறுப்பினர்கள் பயிற்சிக்காக முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர் என்ற சிறீலங்கா உளவுதுறை அறிக்கைகள் போன்ற யாழ் குடாநாட்டுச் செய்திகள் சிறீலங்காவினை அச்சுறுத்துகின்றன.

சுமார் 30,000 துருப்புக்களும் அவர்களது ஆயுத தளவாட சாதனங்களும் புலிகளின் மறைமுகமான முற்றுகைக்குள் சிக்கிக்கிடக்கையில் அதிகரித்து செல்லும் புலிகளின் நடவடிக்கைகள் எதிரிப்படைகளை அச்சுறுத்துவது எதிர்பார்க்கக்கூடியதே. இன்றைய குடாநாட்டின் இராணுவ - அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பலப்பரீட்சையில் புலிகளின் கைமேலோங்கி வருகிறது என்பதற்கு குடாநாட்டின் அண்மைய நிகழ்வுகள் ஆதாரங்கள் ஆகும்.

குடாநாட்டை மீள விடுவிப்பது என்பது புலிகளின் முழுமையான போர்த்திட்டத்தில் எத்தகைய பங்கு வகிக்கின்றது என்பதை சரியாக ஊகிக்கமுடியாது. ஏனெனில் தலைவர் பிரபாகரனின் வழி நடத்தல் மரபுரீதியான இராணுவ - அரசியல் சிந்தனைகளிலிருந்து மாறுபட்டு நவீன மயப்படுத்தப்பட்ட போர் ஆற்றல் மிக்க படை நகர்வுகளின்பாற்பட்டதாகும்.

யாழ்குடா மீதான ஆக்கிரமிப்பை சந்திரிகா அரசு கடல், ஆகாய மார்க்கமான விநியோகங்கள் மூலம் தொடரினும் அதனது இறுக்கமான பிடி குடாவிலிருந்து விலக்கப்பட்டு வருகிறது. தீவுப் பகுதியில் இருந்து தரைப்படை மீளப் பெறப்பட்டு கடற்படையினரே அப்பகுதிகளில் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளனர். வடமராட்சிப் பகுதியில் துருப்புக்கள் பாரிய சவால்களை புலிகளால் எதிர்கொள்கின்றனர். தென்மராட்சி பிராந்தியம் புலிகளின் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசமாக உள்ளது.

சிறீலங்கா படைகளை பொறுத்தவரை தமது ஆக்கிரமிப்பை தொடர்வதற்கு இரு பிரதான காரணிகளை பெருமளவு நம்பி உள்ளனர். தரைப்பாதை திறக்கப்பட்டு கடல்- ஆகாய மார்க்கமாகவே விநியோகங்கள் இடம்பெற வேண்டிய ஆபத்தான சூழ்நிலையை அகற்ற விரும்புகின்றனர், மறுபுறம் போதிய அளவான துருப்புக்கள் குவிக்கப்பட்டு தொடர்ச்சியாக நிலைகொள்ள வேண்டும் என நம்புகின்றனர். தற்போது யாழ். குடா நாட்டின் உள்ளே பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் புலிகள் ஆனையிறவு நுழைவாயிலை தாக்கும் தூரத்தில், கிளிநொச்சி பகுதியில் தமது சிறப்பு படைகளை நிலை நிறுத்தி உள்ளனர். இன்று புலிகளின் பீரங்கி சுடுகலன்களின் பலம் ஆனையிறவு இராணுவ வலயத்திற்கு நிரந்தர அச்சுறுத்தலை தரும் விடயமாகும். இதேவேளை கடல் வழிகளை இடைமறித்து புலிகளின் கடல் போரணிகள் குடாநாட்டு படைகளை அச்சுறுத்தி வருகின்றனர்.

**புலிகளை பொறுத்தவரை யாழ்.குடாவில் இராணுவத்தை முற்றுகையிட்டு அழிக்கும் ஒரு போர் சாத்தியத்தை தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றனர். 'ஜெயசிக்குறுய்' படைகளின் தரைப் பாதை திறப்பை தடுத்துநிறுத்தி சமர் புரிவதன் ஊடாகவும் கடற்புலிகளின் பலத்தை கணிசமான அளவு அதிகரிப்பதன் வாயிலாகவும் இச் சாத்தியம் பாதுகாக்கப்படுகிறது.**

புலிகளில் இன்றைய படையணிகள் முன்னர் யாழ்குடாநாட்டை புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலகட்டத்திலும் பலமானது. **இன்று புலிகளிடம் உள்ள நெடுந்தூர பீரங்கி - எறிகணை சுடுகலன்கள் அவர்களது போர் நடவடிக்கைகளில் பிரதான இடம் வகிக்கிறது. இது குடாநாட்டு போர்முனைக்கு நகர்த்தப்படுமாயின் ஆனையிறவு முகாம் போன்ற பாரிய இராணுவ வலயங்களை புலிகள் தாக்கி அழிப்பதற்கு உதவியாக அமையும்.**

இதேவேளை குடாநாட்டில் அதிகரித்துவரும் புலிகளின் அரசியல் ஆளுமை மிக முக்கிய அவதானிப்பிற்குரியதாகும்.

சந்திரிகா அரசு திட்டமிட்ட முறையில் கொழும்பு தமிழ் குழுக்களை யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பியது. இவர்களை ஜனநாயக முகமூடிகளினால் போர்த்தி, புலிகள் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பின் அதனை புலிகளுக்கு எதிரான அரசியல் இராஜதந்திர ஆயுதமாக பாவிக்க முற்பட்டது அரசு. ஆனால் புலிகள் தமது தந்திரோபாய ரீதியான மேலாதிக்கத்தை வெளிக்காட்டி நிலைமையை எதிர்கொண்டனர். **பரபரப்பில்லாத முறையில் புலிகளின் எதிர்ப்புச் சமிக்ஞை வெளியிடப்பட்டது. மெதுவாக காய்களை நகர்த்திய புலிகள் சில உறுதியான ஆனால் திட்டமிட்ட நடவடிக்கைமூலம் சிங்கள அரசு குடாநாட்டில் ஆடிய ஜனநாயக நாடகத்தை முடிவுக்குக் கொண்டுவருகின்றனர்.** இன்று சுமார் 130 உள்ளூராட்சி உறுப்பினர்கள் தாமாக பதவிவிலகி உள்ளனர். இவ் விலகல் நடவடிக்கைக்கு புலிகளை காரணம் காட்டமுடியாத நிலையில் அரசு வைக்கப்பட்டது.

இன்று குடாநாடு அடுத்த சமருக்கு தன்னை தயார்படுத்தி வருவதை இவை பிரதிபலிக்கின்றன. ஆனாலும் **புலிகளில் போர்த் திட்டம் என்ன என்பதை பொறுத்தே குடாநாட்டின் விடுதலைக்கான கால எல்லை தங்கியுள்ளது.** தென் தமிழீழத்திலும் சம அளவிலான பலத்தை வளர்த்துவரும் புலிகள் தமது முழுமையான போர்த்திட்டத்தின் வரைபடங்களை இன்னமும் வெளியிடவில்லை.

— ராஜா

## எதிரொலிகள்

### உழைப்பில் விளைந்த இசை

பிரான்ஸ் - தமிழ் கலாச்சார மன்றத்தின் (G.I.F.T) சார்பில் திரு.க. தேவமனோகரன், திரு.ந. அருணகிரிநாதன் ஆகியோரினால் தயாரித்து மேடையேற்றப்பட்ட 'யூலியஸ் சீசர்' நாடகத்திற்கான விமர்சனத்தினை 11-17 ஜூன் 98 வார இதழில் பிரசுரித்திருந்தீர்கள் மகிழ்ச்சி. இதுபோன்ற ஆரோக்கியமான விமர்சனங்கள் நாடக நடிகர்களை, இயக்குநர்களை நெறிப்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கும் புதிய முயற்சிகளுக்கும் ஊக்கம் தரும். தங்களுக்கும் விமர்சகருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

6.30 மணிக்கு ஆரம்பிப்பதாக குறிப்பிட்ட எமது நிகழ்ச்சி அரைமணி நேரம் தாமதித்து ஆரம்பித்தமை நம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய தவறேயாயினும் நாடக நிகழ்வுக்கான எமது சிரமங்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் யாராலும் புரிந்துகொள்ளக்கூடியதே. இருப்பினும் தங்களின் கூற்றை அறிவுரையாக ஏற்று எமது அடுத்த நிகழ்வுகளில் இத்தவறினைத் தவிர்க்க முயல்வோம். சேக்ஸ்பியரின் இந்த நாடகத்தை தமிழில் தந்தவரை அரங்கத்தில் அறிவிக்காதது எமது தவறேயாகும்.

'யூலியஸ் சீசர்' நாடகத்தை மட்டுமல்லாமல் சேக்ஸ்பியரின் அனைத்து நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர் பொற்கிழிக் கவிஞர், அரு. சோமசுந்தரன் M.A.B.L அவர்களை, ஈழமுரசு இதழினூடாக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறோம். வேற்றுமொழி நாடகங்களை தமிழில் அறிமுகம் செய்து வைத்த பெருமை இவருக்குண்டு. இதன் மூலம் காத்திரமான பெருமை மிகு நாடகப் பிரதிகள் தமிழிலும் தோன்றுவதற்கான ஊக்குவிப்பைத் தரும்.

சேக்ஸ்பியரின் நாடகங்கள் பற்றிய சிறப்புக்களைத் தாங்களும் குறிப்பிட்டதுபோல, இந்த நாடகமும் அதன் கருப்பொருளும் காலம் கடந்து என்றைக்குமான 'வாழும்' தன்மைகளைக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. இவ்விரு காரணங்களுமே இந்த நாடகத்தினை தேர்வு செய்தமைக்கு எம்மைத்தூண்டியது எனலாம். மேலும் இந்த நாடகத்தின்போது நடிகர்கள் பார்வையாளர்கள் மத்தியில் உலாவியமை ஓர் நாடகமுறைமை போன்று காட்டப்பட்டது என்றும் பார்வையாளர்களையும் ரோமானியர்களாக்க முயற்சித்தமை நடைமுறை சார்ந்த நாடகங்களில் பயன்படுத்தப்படும் உத்திமுறை என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். எதற்குமே வரையறுக்கப்பட்ட ஓர் இலக்கண முறைமையை கட்டுப்படியாக வைத்திருத்தல் இயல்பான வரலாற்று வளர்ச்சியில் சாத்தியமாகுமா? ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் எல்லாக் கலை இலக்கியங்களிலும் பரிசோதனை முயற்சிகள் நடந்து கொண்டுதானிருக்கும்.

எனினும் தங்கள் கருத்தினையும் கவனத்திற்கெடுத்து இது பற்றி மறு பரிசீலனை செய்ய உள்ளோம்.

ஒவ்வொரு தேசங்களின் கலாச்சார பாரம்பரியங்களுக்கேற்ப நாடக முறைமைகள், வடிவங்கள் போன்றவற்றில் தனித்துவம் பேணப்பட்டாலும் விஞ்ஞான சமூக வளர்ச்சிக்கேற்ப ஒன்றோடு ஒன்று இணைந்த புதிய வகை வடிவங்கள் எல்லாக்கலையிலும் பரிணமித்துக் கொண்டே இருக்கும். நடைமுறை சாராத யதார்த்தத்துக்குப் புறம்பான எந்தவொரு விடயத்தையும் எந்தப் படைப்பாளிகளாலும் எடுத்தாள முடியாது. இத்தனை காலம் கடந்தும் இந்த நாடகம் சமூக விடயங்களில் இன்றைய நிலைமைகளைப் பிரதிபலிக்கும், நடைமுறைப் பிரச்சினைகளைக் கையாளுகின்ற தன்மையினைக் கொண்டிருப்பதனால் அதைக் கையாளுகின்ற நாடகங்கள் எடுத்துக்கொள்கின்ற வடிவத்தை, இது இயல்பாகவே எடுத்துக் கொள்வதை தவிர்க்க முடியாது என்பதனை நெறியாளன் என்ற வகையில் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். ஆயினும் ஆக்க பூர்வமான தங்களின் விமர்சனம் பல வகைகளிலும் எம்மைச் சிந்திக்கவைத்தது. எமது அடுத்தடுத்த முயற்சிகளுக்கு ஒரு மேம்பாடாண வைத்துள்ளதில் மீண்டும் எம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

வாழ்த்துக்களைவிட ஊக்குவிப்புக்களே கலைஞர்களுக்கு உகந்த ஊட்டச்சத்தாகும்.

நன்றியுடன்
எம். அரியநாயகம்

# பதிப்பாளனும் குரு சிஷ்ய பரம்பரையும்

ஆர்.பத்மநாப ஐயர் தொகுத்து வெளிவந்திருக்கும் 'இன்னுமொரு காலடி' சர்வதேசியத் தமிழ் கலை கலாச்சாரத்தொகுப்பு அதன் பதிப்புரைக்காக மட்டுமே பாராட்டிப் பேசப்படுகிறது. தேர்வுக் குழுவில் நானும் ஒருவன் என்பதால் அதன் உள்ளடக்கம் பற்றியப் பேசுவதென்பது இயல்பாகவே எனது நோக்கம் அல்லாமல் போகின்றது.

இக் கட்டுரை இன்னுமொரு காலடி பற்றியதோ ஐயர் என்கிற ஆளுமை பற்றியதோ இல்லை.

நமது சமூகத்தில் குருசிஷ்ய பரம்பரை மனோபாவத்துக்கும் பதிப்பாளன் பணி என்கிற தொழில் முறை ரீதியான கடமைக்கும் உள்ள உறவு பற்றியது இக்கட்டுரை. நமது தமிழ்ச் சூழலில் தொகுப்பாளன் (Compiter) பதிப்பாளன் (Publisher) ஆசிரியர் குழுவினன் (Editor) என அனைவருமே ஒரே நபராகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பத்மநாப ஐயர் மிகச் சரியாகவே சில விஷயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்:

ஒரு பதிப்பாசிரியரோ அல்லது பதிப்பாசிரியர் குழுவோ நூலாசிரியரோடு இணைந்து நூலினைச் செழுமைப்படுத்தும் பணி இங்கு (மேற்கில்) நூல் வெளியீட்டுத்துறையில் முக்கிய பணியாகப் பரிணமித்துள்ளது. தமிழில் வெளியீட்டுத்துறையில் பதிப்பின் முக்கியத்துவம் அவ்வளவாக உணரப்படவில்லை.

ஏன் இவ்வாறான நிலைமை தமிழில் நிலவுகிறது? ஆங்கிலத்தில் இப்பணி தொழில் ரீதியிலும் பண்பாட்டுத் தளத்திலும் (in a Civilised Manner) வளர்ச்சியடைந்திருப்பதற்கும் காரணம் என்ன? மேற்கில் நூலாசிரியருக்கும் பதிப்பாசிரியன் அல்லது பதிப்பாசிரியர் குழுவுக்குமான பரஸ்பர உறவு சாத்தியம் ஆகிற மாதிரி ஏன் தமிழ்ச் சூழலில் சாத்தியமாக முடியாமல் இருக்கிறது?

பதிப்புத்துறை சார்ந்த சில பிரச்சினைகளையும் விவாதங்களையும் கூர்ந்து அவதானித்து வருபவன் எனும் அளவில் சில நடைமுறை அனுபவங்களை இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மேற்கத்தேய சூழலுக்கும் தமிழ்ச் சூழலுக்குமான மிகப் பெரிய வித்தியாசமாக நான் காண்பது, மேற்கில் ஆசிரியன் பதிப்பாசிரியன் இடையிலான பரஸ்பர மரியாதையிலும்; துறை சார்ந்த அறிவின் அடிப்படையிலும் அமைந்தது. இங்கு சம்பந்தப்பட்ட இருவருமே சமதளத்தில் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவர்.

தமிழ்ச் சூழலில் பதிப்பாளன்/ ஆசிரியன் தன்னைக் குழுவின் ஸ்தானத்தில் ஏற்றி வைத்துக் கொள்கிறான். அவன் இங்கு சட்டாம்பிள்ளை வாத்தியார் கௌரவ ஆலோசகன் என்றே புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறான். தனது மேலாதிக்கத்தையும், அரசியல் நோக்கங்களையும், அறிவு மேலாதிக்கத்தையும் நூலாசிரியன் மீது திணிக்கும் பணியையே மேற்கொள்கிறான். இன்னும் பதிப்பாசிரியனுக்கு அரசியல் நோக்கங்கள் இருக்குமானால் அவனது நோக்குக்கு ஏற்பவே தவிர்ப்புக்கள் ஒரு தலைப்பட்சமாக நடந்தேறும்.

பொருளாதாரம் போதிக்கும் பேராசிரியன் இங்கு நுண்கலைகள் பற்றி விரிவுரை நிகழ்த்துவான், தகுதிகள் இல்லாமல் தமிழ் ஹொல் பிண்டர் தமிழ் அகஸ்டோபோல என்று விருதுகள் தரவும் இவன் வெட்கப்படுவதில்லை. அறிவுத் தளத்தில் நின்று பேசுகிற தனிநபர்களை (குழு, இயக்கம், கழகம் என ஏதும் இல்லாதவர்கள்) இவன் தனது தனிநபர் நோக்கங்களுக்காக சில வேளை மிரட்டிப் பார்க்கவும் செய்வான். முடியாத போது அனாமதேயக் கடிதம் எழுதச் செய்வான். அதுவும்முடியாது போனால் சிஷ்யப் பிள்ளைகளை விட்டு இலக்கியப் பயங்கரவாதம் அரங்கேறச் செய்வான். இவன் எப்போதுமே திரைமறைவில் செயல்படுவான். ஸ்டாலினியத்தின் நேரடி பரிசாகத்தான் இவன் அறிவுத் தளத்தில் பரிமாணம் பெற்றிருக்கிறான்.




மேலும் மேற்கில் துறை சார்ந்த தொடர் படிப்பென்பது ஒரு பதிப்பாசிரியனுக்கு மிக மிக முக்கியம். சிலவேளை சில முக்கியமான வரிசை நூற்களுக்கு (உதாரணமாக Great Masters Series: மார்க்ஸ், நீட்ஷே தெரிதா என) பதிப்பாசிரியர் குழு ஆலோசனை தரும். தனி ஆசிரியன் நூற்களை எழுதுவான் (உதாரணம்: மார்க்ஸீயத்தில் பரந்த ஞானம் பெற்ற பெரிசுகில்டன்; கார்ல் மார்க்ஸ் பற்றிய நூல்) இங்கு எப்போதுமே பதிப்பாசிரியன் குருவின் வேலையையோ திரை மறைவு அனாமதேயத்தின் வேலையையோ செய்வதில்லை.

இன்னும் மிகமிக வேடிக்கையான விஷயங்களெல்லாம் தமிழ்ச் சூழலில் நடக்கும். பதிப்பாசிரியன் தன்னிடம்தான் அறிவு கொட்டிக்கிடக்கிறது என அடம் பிடிப்பான். பரஸ்பரம் அறிதலும்/ புரிதலும்/எடுத்தலும்/ கொடுத்தலும் இங்கு நிறைவேறுவதில்லை. சிலர் புத்தகங்களைத் தொகுக்கும் அடிப்படைகள் இன்னும் வேடிக்கையாகி இருக்கும். இன்னும் சிலர் தமக்குத்தாமே அரியாசனம் போட்டுக்கொள்வார்கள். சிலவேளை பிரம்புகளும் வைத்திருப்பார்கள். ஒன்று மார்க்ஸீயம் அல்லது கலாநிதிப் பட்டம் எளிதில் தவிர்க்கக் கூடிய எழுத்துப் பிழைகளை மட்டும் எடுத்துக்கொண்டு நூலாசிரியனை உண்டு அல்லது இல்லை என ஆக்கி ஒழித்துக் கட்டி விடுவார்கள்.

பத்மநாப ஐயர் தனது பதிப்புரையில் எழுத்தைச் செப்பனிடுவது பற்றியும் எழுத்தைப் பொறுப்போடு கையாளும் அக்கறை பற்றியும் மிகத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார்.

எழுத்தைச் செப்பனிடுவது பற்றிய பிரச்சினை எழுத்தாளன்; பதிப்பாளன்; தட்டச்சு செய்பவன் அல்லது மின்னியல் அச்சு செய்பவன் எல்லோருடையதும் பரஸ்பரம் ஒத்துழைப்பில் உருவாகி நிறைவேற்றப்படும் காரியம். அவசர கோலத்தில் செயல்படும் பதிப்பாளரும், ஆசிரியர் சங்கடம் கொள்ள நேரிடும். எழுத்தாளனின் எழுத்து பிரிபடாமல் தட்டச்சு செய்வோர் துன்புறுவதும் உண்டு. காலம் தூரம் என்பதும், உழைப்புச் சக்தியும் ஈடுபடும் மனிதர்களும் தட்டுப்பாடாக ஆகும்போது நிறைய அச்சுப்பிழைகள், எழுத்துப் பிழைகளுடனும் வந்துவிட நேர்ந்து விடுகிறது.

புரிந்துணர்வு உள்ளவர்களாலும், நடைமுறை அனுபவங்கள் மூலம் இதைக் கடந்து போக நினைப்பவர்களும் இந்தப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துவிட முடியும். சிறுபத்திரிகை நடத்துபவர்கள் இந்தப் பிரச்சினைகளை தினம்தினம் எதிர்கொள்கிறார்கள். மிகுந்த சிரமத்தினிடையில் பத்திரிக்கை நடத்தும் இந்த உத்வேகம் மிக்க தனி நபர்களைப் பொறுப்புடன் புரிந்துகொள்ள வேண்டும். சில சட்டாம் பிள்ளைகள், மிக நிச்சயமான மறைக்கப்பட்ட அரசியல் நோக்கங்களுடன், ஏன் பத்திரிக்கை நடத்துகிறார் என அதட்டுகிறார்கள். சிலர் எழுத்தாளனை ஒழித்துக் கட்டிவிட 'தரம்' பற்றிய பூச்சாண்டியை எழுப்பிவிடுகிறார்கள். மேற்கில் ஒருதுறை சார்ந்த விரிந்த அறிவு இல்லாமல் பதிப்பாசிரியர் பணியை ஏற்க மாட்டார்கள். ஆகவேதான் தொகுப்பாளர் என்கிற பணியும் அவருக்கு உதவுவன துறை சார்ந்த அறிவுள்ளவர்கள் கொண்ட ஆசிரியர் குழுவினர் பணியும் பரஸ்பர புரிந்துணர்வு கொண்டதாக அமைந்து நூலைப் பதிப்பிக்கிறது. ஆனால் இங்கு துறைசார்ந்த விரிந்த எந்தவிதமான படிப்பும் அறிவும் இல்லாமலேயே குழுவின் ஆலோசனைகளை வைத்துக் கொண்டு சிஷ்யப் பிள்ளைகள் தொகுப்பு வேலைகளை மேற்கொள்ள முடியும். அரசியல் தனிநபர் காரணங்களுக்காக முதுகு சொறிபவர்களைக் கொண்ட தமிழ்ச் சூழலில் மட்டுமே இது சாத்தியம்.

இனி எழுத்தைப் பொறுப்போடு கையாளுவது பற்றிய பிரச்சினை. முரட்டுத்தனமான சொற்களுடன் பேசுவதும், அநாகரிகமாக ஜாதீக அடையாளத்தை எந்தவிதமான படைப்பு அடித்தளமுமின்றி இலக்கியப் பிரச்சினையாக்குவதும், அறிவு சார்ந்த பிரச்சினைகளை Fuckoff சொல்லிவிடுவேனாக்கும்' என்று மிரட்டுவதும்தான் இங்கு அறிவுத் துறை நாகரிகம் என்று சொல்லப்படுகிறது. மிகவேடிக்கையான பிரச்சினை என்னவென்றால், நேரில் இவர்களை எதிர்கொள்வோமானால், தாங்கள் அப்படிச்சொல்லவில்லை மன்னியுங்கள் என்பார்கள். சில வேளை முகம் குனிந்து கொண்டு விஷமத்தனமான வணக்கம் சொல்வார்கள்.

வாய்ப்பேச்சில் சொல்ல முடியுமானால் அதை எழுத்தில் முன்வைக்கவேண்டும். எழுத்தில் முன் வைக்க முடியுமானால் அறிவு நேர்மையுடன் அதை நேரில் விவாதங்களுடன் எதிர் கொள்ள வேண்டும். எழுதுவதற்கும் பேசுவதற்கும் பொறுப்பேற்க முடியாதவன் எதற்காகக் கொட்டி முழக்கவேண்டும்?

இதுதான் தமிழ்ச் சூழலில் நிலவுகிறது. பதிப்பாசிரியன் பணி, தரம்பற்றிய பிரச்சினைகள், தலித்தியம், பின் நவீனத்துவம் எல்லாவற்றையுமே இங்கு தனிநபர் முதுகு சொறிவதற்கோ அல்லது அடுத்தவனை இலக்கியக் களத்திலிருந்து ஒழித்துக் கட்டுவதற்கோ சாதுரியமாகப் பயன்படுத்த முடியும். தட்டுப்படுகிறவர்களிடமெல்லாம் ஒரு மரியாதைக்குரிய. மனிதனைப் பற்றி அவதூறுகள் செய்து விட்டு நட்பின் பெயரிலும் உறவுகளின் பெயரிலும் அதே மனிதனிடம் அரசியல் இலாபங்களையும், நோக்கங்களையும் மறைத்துக் கொள்ள முடியும்.


எல்லாவற்றுக்குமான காரணங்கள் கோட்பாட்டுப் படிப்பின் வறுமைதான். நேரடியாக விஷயங்களை எதிர்கொள்ளும் திராணியின்மைதான். ஒற்றை வரியில் அபிப்பிராயங்களைப் போட்டுவிட்டு அது பற்றிய விஷமத்தனமாக COMMENT அடிப்பதும் அப்படிப்பட்ட அறிவு நேர்மையற்றதும் கோட்பாட்டு வறுமை கொண்டதுமான காரியங்கள்தான். துரதிர்ஷ்டம் தமிழ்ச்சூழலில் இதுவெல்லாம் அறிவுத்துறை சார்ந்த விஷயமாக விவாதிக்கப்பட வேண்டியிருப்பதுதான்.

'இன்னுமொரு காலடி' பதிப்புரை, சரியான தருணத்தில் வெளிவந்த மிகமுக்கியமான பதிப்புரை. பதிப்பாளனுக்கும் ஆசிரியனுக்கும் இருக்க வேண்டிய உறவின் தன்மையை தமிழ்ச சூழலில் நிலவும் குருசிஷ்யன் உறவுக்கு அப்பால் அறிவுச் சூழல் நோக்கி நகர்த்திச் செல்லும் பணி நம் எல்லோருக்கும் உரியது. அத்தகையதோர் ஆரோக்கியமான அணுகுமுறையை இன்னுமொரு காலடி தொகுப்புப் பணியின்போது மட்டுமே சில அதற்கு முன்னான இரு தொகுப்பு நூல்களின்போதும் பத்மநாப ஐயர் பின்பற்றி வந்தார் என்பது தமிழ் சூழலில் ஒரு நல்லசெய்தி.

> வாய்ப்பேச்சில் சொல்ல முடியுமானால் அதை எழுத்தில் முன்வைக்கவேண்டும். எழுத்தில் முன் வைக்க முடியுமானால் அறிவு நேர்மையுடன் அதை நேரில் விவாதங்களுடன் எதிர்கொள்ள வேண்டும். எழுதுவதற்கும் பேசுவதற்கும் பொறுப்பேற்க முடியாதவன் எதற்காகக்கொட்டி முழக்கவேண்டும்? இதுதான் தமிழ்ச் சூழலில் நிலவுகிறது.

யமுனா ராஜேந்திரன்

இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு
ரராஜூ பட்னி அவ்சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2359, 0181-902 0577
FAX: 0181-903 4887







நகரத்தைவிட்டுக் கடல் பிரித்து வைத்திருக்கும் அந்தச் சிறிய அழகிய வட்டத் தீவான மாட்டுப் பிட்டியை நகரத்தோடு இணைக்கும் பாலம் மாட்டுப்பிட்டிப் பாலம்.

நம்மிடத்திலும் கண்ணாச் செடிகளும், வீச்சுளாத்தி, சடக்கு, வீளி மரங்களும் நிறைந்த ஓர் அழகிய மாடோடிப்பிட்டி இருக்கிறது. மண்டைதீவுச் சந்தியில் இருந்து வடகிழக்காய் சிறுத்தீவுக்குத் தென்திசையில் அது அமைந்திருக்கிறது. 91-ம் ஆண்டு அந்தத் தீவின் கரையில்தான் என் அப்பனின் உழைப்புறுதியில் புடைத்த கால்களிலொன்று மிதிவெடியில் காணாமல் போனது. (இது என் அப்பனின் தொலைந்துபோன காலைப்பற்றிய கதையல்ல, எனவே அதை விட்டு விடுவோம்) அந்த மண்டைதீவு மாடோடிப் பிட்டியைப்போல் இந்த மாட்டுப்பிட்டியும் அழகுக்குப் பஞ்சமில்லாத ஓர் தீவு.

மாட்டுப்பிட்டிப் பாலம் நகரத்தை நோக்கி வந்து தொடுவது சின்னப்பூங்கா வீதியை. சின்னப் பூங்காவீதி இரு கூறுகளாகப்பி பிரிந்து ஒன்று நகர மைதானத்தைச் சென்றடைகிறது. ஒன்று ஆடியாடிச் சென்று பேடர்சன் தெருவோடு கைகுலுக்கிக் கொள்கிறது, பேடர்சன் தெருவின் 105-ம் இலக்க வீடு, கிழவி லின்டா குலாகசனின் வீடு. கிழவியின் வீட்டுக்கு எதிர்த்திசையில், வீதியின் மறுகரையில் 106 ஆம் இலக்கத்தில் 'மாறித் துரொண்ணிங்' குடியிருக்கிறாள். மாறித்தின் வீட்டுக்கு எதிராகவும், கிழவியின் வீட்டுக்கு வலது அருகாகவும் 107ஆம் இலக்கத்தில் நிலவறைக் குடித்தனமாய் நாங்கள்.

ஆந்திரேக்கு சுகந்தியில் சரியான நேசம். சுகந்தியும் அப்படித்தான். ஆந்த்ரேயில் நல்ல விருப்பம். ஆனால் இவர்கள் இருவரும் நேசம் பகிர்ந்து கொள்வது டேவிட் குலாக்சனுக்கு அறவே பிடிக்காது. கிழவி லின்டா குலாக்சனுக்கு அப்படியல்ல. சுகந்தியும், ஆந்த்ரேயும் சந்தித்து ஒருவரையொருவர் கொஞ்சி, உரசிக்கொள்வதைக் கண்டு தன்னை மறந்து ரசித்துக் களிப்பாள்.

தாங்கள் ஒருவரையொருவர் சந்திப்பதையும், கொஞ்சிக் கொள்வதையும் டேவிட் குலாக்சன் விரும்பவில்லை என்பதை சுகந்தியும், ஆந்த்ரேயும் அறிந்தே வைத்திருந்தனர். அதனால் டேவிட் குலாக்சன் வீட்டிலில்லாத சந்தர்ப்பம் புரிந்து சந்தித்துக் கொள்வதை வழக்கமாக்கிக்கொண்டனர். இவர்களிருவரின் புத்திசாலித்தனத்தைக் கவனித்த கிழவி லின்டா, தனக்குள் வியந்து கொண்டதோடு, விரும்பி ரசிக்கவும் செய்தாள். 'இவர்களிருவரின் பாசப் பகிர்வை வெறுப்பது முறையல்ல' என தன் கணவன் டேவிட் குலாக்சனுடன் பல தடவைகள் சச்சரவுப் பட்டிருக்கிறாள். ஆயினும் கிழவன் தன் வெறுப்பைக்காட்டவே செய்தான்.

சுகந்திக்கு இன்று ஐந்தாவது பிறந்ததினம். சிறுவர் பூங்காவில் தனது சகாக்களுடன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடிவிட்டு நின்றவளை வீட்டுக்கு அழைத்துவரப் போனேன். என்னைக் கண்டதும் 'சுகந்தி, ஐந்து வயது' என பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட றோசாநிறக் கிரீடம் அவளது தலைமேல் அலங்கரித்து நிற்க, என்னைத்தேடி நிறைந்த புன்னகையோடு ஓடி வந்தாள். அவளை அள்ளியெடுத்து முத்தமிட்டுக் கொண்டேன்.

'இண்டைக்கு என்ட பிறந்தநாளுக்கு ஆந்திரேயும் வருந்தானேயப்பா? ஆவலோடும், அதேகணம் ஆதங்கக் கீறல் விழவும் கேட்டாள்.

'இல்லக் குஞ்சு. இண்டைக்கில்லை. நாளண்டைக்குத்தான் வீட்ட உங்கட பிறந்தநாள்.' என்றேன்.

'இல்லையப்பா. நீங்க பிழை. இண்டைக்குத் தானேயப்பா என்ட பிறந்தநாள்'. என்றாள் எனது தவறைத் திருத்தும் தொனியில்.

'ஓம் குஞ்சு. இண்டைக்குத்தான் செல்லத்துக்குப் பிறந்தநாள். ஆனா இண்டைக்கு வியாழக் கிழமையெல்லோ..."

'ம்...' என்றாள்.

'நாளண்டைக்குத் தானே சனிக்கிழமை...? கேட்டேன். 'ம்... அவனை அவனை' என்றாள்.

'அப்ப குஞ்சுக்கு நாளண்டைக்குத்தான் வீட்ட கேக் வெட்டுறது' என்றேன். சிறிது யோசித்தாள்

'இல்லையப்பா... நீங்க பிழையாச் சொல்லுறீங்க..' தவறைச் சுட்டும் சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

'நீங்க மறந்திட்டீங்களப்பா, இஞ்சப் பாருங்க... பார்னஹாகனிலயெல்லாம் இண்டைக்கு எனக்கு முடியெல்லாஞ் செய்து, கேக் வெட்டினனாங்கள். 'இண்டைக்குத்தான்'

'ஓம் செல்லம். இண்டைக்குத்தான். ஆனா, வீட்ட நாளண்டைக்குத் தான் கேக் வெட்டுறம்' என்றேன்.

'ஏனப்பிடி..? கேட்டாள் திரும்ப என்னை. குளிருடைக்குள் அவளைத் திணித்தவாறே..,

'இண்டைக்கு வியாழக்கிழமை நாளைக்கு வெள்ளிக்கிழமை நாளண்டைக்குத்தானே சனிக்கிழமை...? என்று கேட்டேன் அவளை.

'ஓம்' என்றாள்.

'நளாண்டைக்குத்தான் அம்மாவுக்கு, அப்பாவுக்கு, கனேஸ் மாமாவுக்கு, கோமளா அன்ரிக்கு எல்லாருக்கும் லீவு. சனிக்கிழமை கேக் வெட்டித்தானே எல்லாரும் வருவினம்? எனது விளக்கமும், கேள்வியும் அவளைக் குழப்பியிருக்க வேண்டும். சிறிது யோசித்தாள்.

'அப்படியெண்டால்... சனிக்கிழமை தமிழ்ப்பள்ளி இல்லையோ...? சப்பாத்துக்களுக்குள் தனது கால்களைப் புதைத்தவாறே கேட்டாள்.

'தமிழ்ப்பள்ளி முடியத்தானே கார்த்திகாக்கா, கமலனண்ணா, சுரேசண்ணா, மாலதியக்கா, ஹம்சன் எல்லாரும் வருவினம். தமிழ்ப்பள்ளி முடிஞ்சபிறகுதான் நீங்க வீட்ட வந்து கேக் வெட்டுகிறது.' சிறுவர் பூங்கா கட்டிடத்தை விட்டு வெளியே வந்தபடி கூறினேன். தனது முதுகுப் பையின் செவிகளிரண்டுக்குள்ளும் தனது கைகளிரண்டையும் பக்குவமாய்ச் சொருகி முதுகுப்புறம் தொங்கவிட்டபடி தனது, எனது சின்ன விரலை இறுகப் பற்றிக்கொண்டு அவளும் என்னோடு வந்தாள். எனது பதில் எதுவும் அவளுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை.

'அப்படியெண்ணால், சிவதாஸ் மாமாவுக்குச் சனிக்கிழமைதானே வேலை...? அவர் வரமாட்டாரோ...? தொடராய் அவளது கேள்விகள் வந்து கொண்டிருந்தன.

'வருவார் குஞ்சு. சிவதாஸ்மாமா வேலையைக் கெதியா முடிச்சுப்போட்டுச் செல்லத்தின்ர பிறந்தநாளுக்கு ஓடி வந்திடுவார் என்ன' எனது பதில்கள் அவளுக்கு திருப்தியைக் கொடுக்கவேண்டும் என்பது எனது அவா. 'ம்...அப்ப சரி. பார்னஹாகனில இண்டைக்கு நான் கேக் வெட்டி, எல்லாருஞ் சாப்பிட்டநாங்கள். ஆந்திரேக்குங் கொண்டாறன்...' என்றபடி தனது முதுகுப்பையைத் தொட்டுக் காட்டினாள்.

'ஓம், நீங்க கொண்டுபோய் ஆந்திரேக்கும், ஆந்திரேயாச்சிக்குங் குடுத்திட்டு வாங்க. பிறகு சனிக்கிழமை அவயள் எங்கட வீட்ட வருவினம் என்ன?!'

'ம்...'பெரிதாய்ச் சிரித்தபடி தலையசைத்தாள். கடந்த நான்கு வருடங்களாய்ச் சுகந்திக்கு பிறந்ததினம் கொண்டாடவேயில்லை. கொண்டாடவில்லை என்றால்...?! ஆட்களை அழைத்து, அழைக்கப் பட்டவர்கள் பரிசுப் பொட்டலச் சுமைகளுடன், வெளிக்காட்ட முடியாத ஒரு சினத்தையும் சுமந்து புடைசூழநிற்க, ஒரு கப்பல், அல்லது ஒருவிமானம், அல்லது ஒரு முயற்குட்டி, அல்லது ஒரு பூனைக்குட்டி, அதுவுமில்லையேல் ஒரு வண்ணத்துப் பூச்சி இப்படி ஏதாவது ஒரு உருவ அமைப்பில் செதுக்கப் பட்டு வண்ணக் கோலங்களிட்ட கேக் ஒன்றின் மீது வயது எண்ணிக்கையிலான மெழுகுதிரிகளை நாட்டி (அதிலும் ஆணென்றால் நீலமும், பெண்ணென்றால் றோஸ் நிறமுமென வகுத்து) சர்வதேச பிறந்தநாள் மந்திரமான 'ஹப்பி பேர்த்டே டு யூ' என்ற வரிகளை அவரவர் தத்தமக்கேற்ற சுருதிகளில் மூன்று தடவைகள் உச்சரித்து, அதிலும் மறக்காமல் மூன்றாவது தடவை உச்சரிக்கும்போது பிறந்தநாளுக்குரிய நபரின் பெயரை இறுதி 'யூ' வுக்குப் பதிலாய்ச் சேர்த்துச் சொல்லி முடிய, கேக்கின்மேல் ஏற்றி வைத்த மெழுகுதிரிகளை குழந்தை ஊதி நூர்த்தபின் (ஊதி நூர்க்கத் தெரியா சிறிய குழந்தையென்றால் தாயும், தந்தையும் சேர்ந்து ஊதி நூர்த்து கேக்கையும் தாங்களே வெட்டுவது) எல்லோரும் கைதட்டி, முட்டைக்கேக் சாப்பிட்டா விருந்தாளிகளுக்கு ஓடர் கொடுத்துச் செய்யப்பட்ட சைவக் கேக் பரிமாறி...

ஒரு பிறந்தநாள் வைபவத்தில் சைவக் கேக் பற்றிய விவாதமும் நடந்தது. 'சைவக் கேக் அடிப்பதற்கு பட்டர் பாவிக்கிறார்கள்தானே, தொழிற்சாலைகளில் பட்டர் தயாரிப்பதற்கு பன்றிக் கொழுப்பும் சேர்க்கிறார்கள் அப்படியிருக்க இதெப்படிச் சைவக் கேக் ஆக முடியும்?' என்று ஒரு சாராரும், 'இல்லையில்லை பன்றிக் கொழுப்புச் சேர்க்காத பட்டரும் உண்டு. அதனைத்தான் சைவக்கேக் தயாரிக்க உபயோகப் படுத்துகிறார்கள்' என இன்னொரு 'சாராரும்,' பாவம் சாப்பிடுபவர்களுக்கில்லை விற்பவர்களைத்தான் சேரும்' என நடுநிலைச் சாராரும் விவாதங்களைப் பகிர்ந்து கொண்டனர். பரிமாறல்களுடன் தாங்கள் தாங்கள் தயாரித்துவந்த சர்வதேச அரசியற் கண்ணோட்டங்கள், புடவைத் தொழிற்சாலை விபரங்கள், தங்கச் சுரங்கப் பட்டியல்கள் எனப் பலதும் பரிமாறி...

இப்படியான எடுப்புச் சாய்ப்புக்களுக்கு என் மனைவியோ, நானோ பிரியப்படவில்லை. கடந்த சில மாதங்களாய் மகள் தமிழ்ப் பாடசாலையில் சேர்ந்தபின் தானாகத் தேடிவரும் பிறந்தநாள் அழைப்புக்களைத் தட்டிக்கழிக்க முடியாத சூழ்நிலையாதலால், நானோ அல்லது என் மனைவியோ அவளைப் பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு அழைத்துச் செல்வோம். அப்படிச் சில கொண்டாட்டங்களுக்குப் போய்வரத் தொடங்கியதும் அவள் பிஞ்சுமனதில் பல கேள்விகள் எழுந்திருக்கின்றன. அவற்றை எட்மிடம் பல தடவைகள் கேட்டும்விட்டாள்.

தவிர்க்கமுடியாது. நாம் சொல்லி, அவள் புரிந்து கொள்ளும் வயதுவரை தவிர்க்க முடியாது. நானும் என்னவளும் முடிவெடுத்துக்கொண்டோம். ஆனாலும் சில எல்லைகளை வகுத்துக்கொண்டோம். எப்படித்தான் எல்லைகளை வகுத்தாலும் கிழமை நாட்களில் கொண்டாட முடியாமல், சனி ஞாயிறென பிற்போடும் நிலைதான். தவறாமல் கொண்டாடும் பிள்ளையெனில், கேக் வெட்டுவது ஏன் சனிக்கிழமையாகப் பின் போடப்பட்டுள்ளதெனச் சட்டெனப் புரிந்துகொண்டிருப்பாள். இதென்னவென்றால், இப்போதுதான் முதற்தடவையாக தனது பிறந்தநாளை, அதுவும் ஐந்தாவது பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடப் போகிறாள். தாமதமாகவே அவளுக்கு சிறுவர் பூங்காவில், இடம் கிடைத்ததால் கேக் வெட்டும் முன்னனுபவமும் இல்லை. இம்முறைதான் அதற்கும் வழி பிறந்திருக்கிறது.

**தமயந்தி**

விட்டுக்குள் சென்றதும் சிறுவர் பூங்காவில் தனக்குச் சூட்டிய கிரீடத்தைத் தாயிடம் காட்டினாள். அவளை இறுகத் தழுவி முத்தமிட்டாள் தாயாள். தனது முதுகுப் பையிலிருந்து பொட்டலமொன்றை எடுத்துத் தாயிடம் காண்பித்தாள். சிறுவர் பூங்காவில் அவளுக்கெனக் கொடுத்த கேக் துண்டில் ஒருபாதி அது. அது ஆந்த்ரேக்குரிய பங்கு எனவும், தான் அதனை ஆந்த்ரேக்குக் கொடுத்து வரப்போவதாகவும் தாயிடம் அனுமதி கேட்டாள். தாயும் சம்மதித்தாள். சிறுவர் பூங்காவிலிருந்து வந்த உடைகளுடன் ஆந்திரேயைத் தேடிப் புறப்பட்டாள் சுகந்தி.


வாசலின் அழைப்பு மணியோசை கேட்டு கிழவி லின்டா கதவைத் திறந்தாள். வாசலில் சுகந்தியைக் கண்ட கிழவி அவளை முக மலர்ச்சியோடு வரவேற்று, பிறந்ததின வாழ்த்துக்களைக்

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)

## உங்கள் கைவண்ணம்



செல்வி அனித்தா
கமலநாதன்
வயது - 09
இடம்:
77420 Champs-sur-Marne
France.





## தகவல் முற்றம்

# தமிழீழம்

1. தமிழீழம் ஆசியாக்கண்டத்தில், இந்து சமுத்திரத்தில் உள்ளது.
2. தமிழீழத்தின் அயல் நாடுகளாக சிறீலங்கா, இந்தியா உள்ளன.
3. தமிழீழத்தின் பரப்பளவு 8,000 சதுர மைல்கள்
4. தமிழீழம் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. தமிழீழத்தின் சனத்தொகை 35 இலட்சம், இவர்களில் 10 இலட்சத்திற்கு மேற்பட்டோர் தமிழீழத்திற்கு வெளியே வாழ்கின்றனர்.



6. தமிழீழத்தில் சைவசமயம், கிறிஸ்தவசமயம், இஸ்லாம் சமயம் என்பன முக்கிய சமயங்களாக உள்ளன.
7. தென் தமிழீழம் 'திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை' ஆகிய மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வடதமிழீழம் 'யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்' ஆகிய மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழீழத்தின் கடைசி மன்னனின் பெயர் சங்கிலியன். வன்னிப் பகுதியின் குறுநில மன்னன் பண்டாரவன்னியன்.
8. தற்போது அயல்நாடாகிய சிறீலங்கா அரசினால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழ தேசத்தை மீளக் கைப்பற்றுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் வீரம் செறிந்த போராட்டம் நடத்தி வருகிறார்கள்.




## குட்டிக்கதை படிப்போம்

### மல்யுத்த வீரனை மடக்கிய தெனாலிராமன்

டில்லியிலிருந்து மாபெரும் புகழ் பெற்ற மல்யுத்த வீரனொருவன், ஒவ்வொரு நாடாகச் சுற்றி மல்யுத்த வீரர்களைத் தோற்கடித்துப் புகழ்பெற்று வந்து கொண்டிருந்தான். விஜய நகரத்துக்கு வந்த அவன், அங்கு மக்கள் முன் னிலையில் பல மல்யுத்த வீரர்களைத் தோல் வியுறச் செய்தான்.

அரண்மனை மல்யுத்த வீரர்களுக்குச் சவால் விட்டான் அவன். அரண்மனையைச் சார்ந்த மல்யுத்த வீரர்கள் அவனிடம் மற்போர் செய்யப் பயந்து பின்வாங்கினர்.

மல்யுத்த வீரனின் சவாலை ஏற்று எவரும் முன் வராதது கண்டு மன்னர் மிகவும் வருத்தப் பட்டார். தெனாலிராமனிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தார். தெனாலிராமனோ 'நீங்கள் வருத் தத்தை விடுங்கள். மல்யுத்த வீரனை நான் மடக் குகிறேன்' என்றான்.

மல்யுத்த வீரனை அரண்மனைக்கு வரவழைத்தார்கள்.

'எங்கள் அரண்மனை மல்யுத்த வீரர்களின் குரு இன்னும் சற்று நேரத்தில் வருவார், அவர் உன்னிடம் நாளை போட்டியிடப் போகிறார்' என அறிவித்தனர். சற்று நேரத்தில் மல்யுத்த வீரர்களின் விருதுகளைத் தரித்தபடி மல்யுத்த வீரர்கள் புடைசூழ தெனாலிராமன் சபைக்கு வந்தான். அவனது பந்தாவையும் மற்றவர்கள் அவனுக்குத் தரும் மரியாதையையும் கண்ட டில்லிவீரன் சிறிது மனத்திற்குள் அச்சம் கொண்டான்.

ஆசனத்தில் அமர்ந்த தெனாலிராமன் மல் யுத்த வீரனை நோக்கி அட்டகாசமாகச் சிரித்த படி 'சிறுவனே, நீ மல்யுத்த சாஸ்திரத்தில் எந்த விதிகளைக் கடைப்பிடித்து மற்போர் செய்கி றாய்' என்றான். மல்யுத்த சாஸ்திரமா? டில்லி வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்படி ஒரு சாஸ்திரம் இருக்கிறதா? அவனுக்குக் குழப்ப மாக இருந்தது. இருப்பினும், சாமர்த்தியமாக 'நீங்கள் எந்த விதியைக் கடைப்பிடிக்கிறீர்களோ அதையே நானும் கடைப்பிடித்து நான் போரிடத் தயார். ஏன் எனில் எனக்கு மல்யுத்த சாஸ்திரம் தெரியும்' என்றான்.

உடனே தெனாலிராமன் துள்ளி எழுந்தான். 'மல்யுத்த சாஸ்திரத்தில் இந்த விதிமுறைகள் தெரியுமா?' என்றபடி கைகளை மடக்கி கைகளை விரித்து கழுத்தைத் தடவி கைவிரல்களை அசைத் துக் காட்டினான். ஏதோ 'கதகளி' நடனத்துக்கு அபிநயம் பிடிப்பது போல் இருந்தது அது.

மல்யுத்த வீரனுக்கு எதுவுமே புரியவில்லை. அதைப்புரிந்து கொண்ட தெனாலிராமன் 'நாளை இந்த விதி முறைப்படிதான் உன்னிடம் மற்போர் புரியப் போகிறேன்' என்றான்.

அரைகுறை சம்மதத்துடன் புறப்பட்ட மல் யுத்த வீரன் அரண்மனையைவிட்டு வெளியேறி யதும் நேராக நகரை விட்டு வெளியேறினான். அவனது முகக் குறிப்பிலிருந்தே அவன் பயந்து விட்டான் என்பதைப் புரிந்துகொண்ட மன்னர், 'நீ ஏதேதோ கைக்கரணங்கள் காட்டினாயே அவற் றுக்கு என்ன பொருள்? மல்யுத்தத்திற்கு என தனி சாஸ்திர விதிகள் இல்லையே' என்றார்.

நான் காட்டிய கைக் கரணங்களின் பொருள், 'நீ மிகுந்த பலசாலி, உன்னிடம் நான் மற்போர் புரிந்தால் நான் தோல்வியுற்று இறந்து விடுவேன். என் மனைவி அனாதையாவாள். இப்போது நான் என்ன செய்யட்டும்?'என்ற கருத்துகளைத் தான் கை சாடையாகக் காட்டினேன். மல்யுத்த சாஸ்திரம் என்று தனியாக எதுவும் இல்லை. அவன் வேறு எதுவோ தவறான கருத்தைப் புரிந்துகொண்டுவிட்டான்.

ஒற்றர்கள் வந்து மல்யுத்த வீரன் நகரைக் கடந்து செல்லுவதாகக் கூறினார்கள். மன்னர் மகிழ்ச்சியுற்று தெனாலிராமனுக்குப் பொற்காசு களைப் பரிசளித்தார்.

## சிரிப்பு முற்றம்

### இருந்தால் கொடுக்கமாட்டேன்

ஒருநாள் இரண்டு நண்பர்கள் சந்தித் துக் கொண்டனர். ஒருவன், இப்போது என்னிடம் இரண்டு இலட்சம் இருந்தால், அரைவாசியை உனக்குக் கொடுப்பேன் என்றானாம். மற்ற நண்பன், 'உன்னிடம் இரண்டு கார்கள் (Cars) இருந்தால், என்ன செய்வாய்' என்றானாம். 'உனக்கு ஒரு காரைத் தருவேன்' என்றானாம். 'சரி, இரண்டு வீடுகள் இருந்தால், என்ன செய் வாய்?' என்று கேட்டானாம் பிறகு.

அதில் ஒன்றை உனக்குத் தருவேன் என்றானாம். 'சரி! உன்னிடம் இரண்டு பேனாக்கள் இருந்தால், ஒன்றை எனக் குத் தருவாயா?' என்று கேட்டானாம். 'அது மட்டும் முடியாது; கொடுக்கமாட்டேன்' என்றானாம். 'என்ன நண்பா! பணம், கார், வீடு இதெல்லாம் தருகின்றேன் என்றாய். பேனாவை மட்டும் தரமாட்டேன் என்கி றாயே' என்று கேட்க; ஏன் அப்படிச் சொன் னேன் என்றால், இப்போது என்னிடம் இரண்டு பேனாக்கள் இருக்கிறதே; அத னால்தான் அப்படிச் சொன்னேன் என்றா னாம் அந்த நண்பன் !!

## கவிதை முற்றம்

### முடியாது என்னால்

*உந்தும் காற்றின்றி உயர் மரக்கலத்தை*
*ஓட்டிட எவரால் முடியும் நீசொல்!*
*எந்தும் துடுப்பின்றி எழிலார் படகை*
*எவரால் செலுத்திட இயலும் நீ சொல்!*
*சிந்தும் கண்ணீரின்றி சிறந்த நண்பனைச்*
*சிறிதும் பிரிந்திட எவரால் முடியும்?*

*உந்தும் காற்றின்றி உயர் மரக்கலத்தை*
*ஓட்டிட என்னால் இயலுதல் கூடும்*
*எந்தும் துடுப்பின்றி எழிலார் படகை*
*என்னால் செலுத்திட இயலும் இயலும்*
*ஆனால்....*
*சிந்தும் கண்ணீரின்றி சிறந்த நண்பனைச்*
*சிறிதும் பிரிந்திட முடியா(து) என்னால்*

- ஓர் பிரெஞ்சு இசைப் பாடல்




# உலகப் புகழ்பெற்ற முதல் படைப்பு
## அருந்ததி ராயின் 'சின்னவைகளின் தெய்வம்'

சென்ற ஆண்டு இலண்டனில் சிறந்த நூலாக தெரிவு செய்யப்பட்ட 'The god of little Things' இன் ஆசிரியர் அருந்ததி ராய் அண்மையில் பிரான்சிற்கு வந்திருந்தார். இவரை பேட்டி காணச் சென்ற இன்னொரு பிரெஞ்சுப் பத்திரிகையாளரே மேற்கண்டவாறு கற்பனை இல்லாத மெய்க் கதைதான் 'Dieu des Petits Riens' என்று அருந்ததியின் நூலைப் புகழ்ந்துள்ளார். அவர் அந் நூலைப் புகழ்ந்தது மட்டுமல்ல, அருந்ததியை நேரில் கண்டதையும், அவரிடமிருந்து பெற்ற அந்நூல் சம்பந்தமான தகவல்களையும் குறிப்பிட்ட விதம் உண்மையிலேயே ஆசியப் பெண்களை எப்படி சமூகம் அசிங்கமாக பழிவாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை துல்லியமாக இங்குள்ள மேற்குலகப் பெண்களுக்கு வெளிக்காட்டியுள்ளது. சோகமான பெரிய கண்களில் ஆழமான தொலைநோக்குப் பார்வையைக்கொண்ட அருந்ததி தன்னுள்ளத்திலுள்ள



சோகங்களை சிரிப்பினூடாக மறைக்க முயல்கின்றார் என்கிறார், மேற்குறிப்பிட்ட பத்திரிகையாளர்.

ஏனெனில் இன்று உலகம் எங்கிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கும் இந்நூல், அருந்ததி வாழ்ந்த சமூகத்தில் நடந்த உண்மையான சம்பவம். குடிகாரக் கணவனால் வாளாவெட்டியாக இரு இரட்டைக் குழந்தைகளுடன் ஓரங்கட்டப்பட்ட ஒரு தாயையும்; அந்தத் தாயைக் காப்பாற்றவேண்டி அவ்விரு குழந்தைகளும் அனுபவிக்கும் உடலுளம் சார்ந்த கொடுமைகளைத் துல்லியமாக விபரித்துள்ளார் அருந்ததி. அது மட்டுமல்லாது, தன் சமூகத்தின் மூட நம்பிக்கையால் ஒடுக்கப்பட்ட பெண்களும், கரை சேரமுடியாக் காதலும், தீண்டாமையால் ஏற்படும் சாதிப் பிளவுகள் வர்க்க வேறுபாடுகள் என்ற அனைத்தையும் தன் எழுத்தினால் தகுந்த இடத்தில் தகுந்தமாதிரி இச் சிறு புத்தகத்தில் அடக்கிய விதம் பலநூறு உணர்வூற்றுக்களை ஒன்றாகச் சங்கமமாக்கி எம்முள் உறைய வைத்து விடுகிறது என்கிறார் அப் பத்திரிகை ஆசிரியர்.

இன்று இவ்வளவு தூரம் சர்வதேச அளவில் புகழடைந்தும் கூட, தன் சொந்த சமூகத்தில் ஒதுக்கப்பட்ட நிலையிலேயே இவர் இன்னும் இருக்கின்றார். காரணம் தனைச் சூழஉள்ள அநீதியை வெளியுலகிற்கு தன் எழுத்தின் மூலம் தெரியப்படுத்தியதுதான் என்று குறிப்பிடும் அருந்ததி, உண்மையிலேயே எம் பெண்கள் அனைவராலுமே போற்றுதற்குரியவர் என்பது மறுக்க முடியாது.

# பிரசவ பயத்தினைப் போக்க புதிய கல்விமுறை

தகவல் வலையினூடாக நேரடியாக ஓர் பிரசவ நிகழ்வு ஒளிபரப்பப்பட்டது. அமெரிக்காவில் Ahn எனும் அமெரிக்க சுகாதாரக் கட்டமைப்பு நிறுவனம், தனது கல்வியியல் நடவடிக்கையின் ஓர் பகுதியாக இப் பிரசவ நிகழ்வினை தகவல் வலையினூடாக ஒளிபரப்பியது.

புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த 40 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயான எலிசபெத், இந்த தகவல் வலை மூலமான பிரசவ நேரடி ஒளிபரப்பிற்கு இணங்கியுள்ளார். இதுவே உலகின் முதலாவது தகவல் வலை பிரசவ ஒளிபரப்பு எனக் கருதப்படுகிறது.

கடந்த 09.06.98 செவ்வாயன்று புளோரிடா மாநிலத்தில் ஒரு மருத்துவ மனையில் தனது கணவர் கில்பெர்ட் மற்றும் மூன்று பிள்ளைகளுடனும் இவர் அனுமதிக்கப்பட்டார். இவர்களுடன் ஒரு புகைப்பட நிபுணர் தொலைக்காட்சி இயக்குநர் போன்றோர்களும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பிரசவத்தின்போது படமாக்கப்பட்ட காட்சிகள் பின்னர் தொகுக்கப்பட்டு தகவல் வலையினூடாக அனுப்பப்பட்டது.

இவரது பிரசவத்தின்போது கடமையாற்றிய டாக்டர் கூறுகையில், இவ் ஒளிபரப்பு நிகழ்வினை நாம் கல்வித்துறைக்காகவே பயன்படுத்த உள்ளோம். குழந்தை பிறப்பு என்பதில் ஏராளமானோர் குழப்பகரமான எண்ணங்களையும் பயத்தினையும் கொண்டுள்ளனர். நாம் அது தேவையற்ற ஒரு பயம் என்பதனையும், ஒரு தாய் எவ்வளவு கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்பதனையும் இதன் மூலம் கூறவிரும்புகிறோம் என்றார்.

# பெண்ணுரிமைகளின் கண்ணோட்டம்

பெண்கள் தொடர்பூடகக் கூட்ட அமைப்பினர் கொழும்பிலிருந்து வெளியிடுகின்ற 'பெண் உரிமைகள் கண்காணிப்பு' என்ற தகவல் கொத்து, ஒவ்வொரு மாதமும் இலங்கையில் வெளிவரும் அனைத்து மொழிப் பத்திரிகைகளிலும் வெளிவந்த பெண்களின் உரிமைகள் தொடர்பான செய்தித் தகவல்களை உள்ளடக்கியதாக வெளிவருகின்றது. அதனுடைய 1997 ஒகஸ்ட் மாத வெளியீடுகளில் இருந்து சில தகவல்கள்.

**இலங்கையில் பெண்கள் மீதான வன்முறைகள் 1997 ஒகஸ்ட்**

| வன்செயல்களின் தன்மை | புரிந்தோர் குடும்பம் | புரிந்தோர் பிறர் | புரிந்தோர் பாதுகாப்புப் படையினர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. தாக்குதல் | 07 | 21 | – | 28 |
| 2. கொலை | 15 | 18 | – | 33 |
| 3. வல்லுறவு (வயதுவந்தோர்) | – | 07 | 05 | 12 |
| 4. வல்லுறவு (வயதுவராதோர்) | 09 | 40 | – | 49 |
| 5. வல்லுறவு எத்தனம் | – | 03 | – | 03 |
| 6. வல்லுறவும் கொலையும் | – | 03 | 01 | 04 |
| 7. பாலியல் இம்சை | – | – | – | 05 |
| 8. தற்கொலை | – | – | – | 21 |
| மொத்தம் | | | | 155 |

## ஏனின்னும் உறக்கம் சோதரி

துகிலுரிக்கும் தூரிகைகள் — உங்களை
தூற்றிக் கிடக்கினும் வரைந்த
ஓவியர்கள் ஏனோ
மெச்சப்படுகின்றார்கள்.
அழகைப் புசிக்கும் ஆதங்கம்
தீர்க்கப்பட்டதாய் — துச்சாதரர்கள்
போற்றப்படுகின்றார்கள்.
பச்சையான ஓவியங்கள்
மஞ்சள் சஞ்சிகைகளிலே
இயற்கையாய் இருப்பதாய்
விமர்சனங்கள் விபரிக்கும்!

வெளியிலே சமூகத்தின்
சில அங்கங்களும்
துகிலுரிந்தபடியே — இருந்தும்
தூரிகைகள் மட்டும்
தூங்கிக் கிடக்கின்றன
தீட்டுவதற்காய் — தினவெடுத்த
தோள்கள் புறப்படட்டும் — வெறும்
வார்த்தை வளைப்புகளிற்காக அன்றி!

பஞ்சாலிகளும் சீதைகளும்
காத்து விழி
பார்த்துக் கிடக்கும்
காலமல்ல இன்னு மிது!

இது உதயங்கள் மட்டும்
உச்சரிக்கப்படும் — தமிழுலகின்
உத்தம காலம்!
இருளைக் கலைத்து
ஒளிமயமான — தாயகத்தின்
பொழுதுகளிற்காகவே — எம்
இதயங்கள் சப்திக்கட்டும்!

- ஈழமைந்தன்

# மனதினுள் உறுதியை ஏற்படுத்துவது எப்படி ?

சாதாரணமாக எமை ஒத்த பெண்களுடன் உரையாடும் போது அவர்களின் பேச்சின் அடித்தளத்தில் எப்படியோ ஒரு வித சலிப்புக் கலந்த தாழ்ந்த மனப்பான்மையும், நாம் பெண்கள்தான் என்ற காரணத்தால் எல்லா விடயத்திலும் பின் நிற்க வேண்டும்; அல்லது அடுத்தவரின் வெறுப்புக்கள் தவறான அபிப்பிராயங்களிற்கு ஆளாகாத வகையில் வாழ்ந்தால் மட்டும் மற்றவர்களால் நல்லவர்களாகக் கணிக்கப்படுவோம் என்ற தவறான அபிப்பிராயமும், எதிர்பார்ப்பும் உள்ளதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இதனால், இவ்வாறான தேவையற்ற பயங்களை இவர்களிற்கு உருவாக்கி துணிவான செயற்பாடுகளிற்கு முட்டுக்கட்டையாக இருப்பது எதுவென்று நோக்கின், முதலாவதாகத் தெரிவது எம் சமூகத்தில் பெண்களிற்கென்று போட்டு வைத்துள்ள ஏராளமான கட்டுப்பாடுகளும் அதை மீறத் துணிவற்ற பெண்களின் மன நிலையும்தான். இதனால், நாம் எந்த நிலையிலும் எவர்க்கும் தாழ்வானவர்கள் இல்லையென்பதை பெண்களாகிய நாம் முதலில் உணர வேண்டும். அதுமட்டுமல்லாது எம்மால் செய்யப்படும் காரியங்கள், அடுத்தவரைத் துன்புறுத்தாததாகவும், நன்மை பயக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்ற உண்மையான உறுதியான மனப்பக்குவத்தை எம்முள் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இவையிரண்டுமே எங்கள் வசம் அதிகமாக இருந்தால் எந்தப் பொழுதிலுமே எம்மை சலிப்போ, தாழ்ந்த மனப்பாங்கோ ஆக்கிரமிக்க முடியாது. அது மட்டுமல்லாது, இன்று ஒரு காரியத்தை நாம் செய்யும்போது தவறு ஏற்பட்டால் அதையே காரணங்காட்டி எதற்கும் சமூகத்தினின்று ஒதுங்கத் தேவையில்லை. ஏனெனில் சாதாரண மனிதர்கள் எல்லோருமே பிழை விடுவது சகஜம். அதை உணர்ந்த பின், எம்மை இன்னும் செழுமைப்படுத்த வேண்டும். இத்தோடு எம்மை மற்றவர்களோடு ஒப்பீடு செய்து அடுத்தவரின் திறமையைக் கண்டு அஞ்சிவிடக் கூடாது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனுள்ளேயும் எப்படியும் ஏதாவது ஒரு திறமையாவது ஒளிந்தபடி இருக்கும். இதைச் சரியாக இனங்கண்டு அதை வெளியுலகிற்கு காட்டுவதால் தன்னை மட்டுமல்லாது தன்னைச்சார்ந்த பிறருக்கும் சந்தோஷங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும்.

அதுமட்டுமல்லாது எப்போதுமே எம் பேச்சில் ஒளிவுமறைவற்ற நேரடியான கருத்துப் பரிமாறல்களை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். இவ்வாறான தூய்மையான வெளிப்படைப் பேச்சால் எம் மனது எப்போதும் 'நான் எந்தத் தீயவற்றையும் சார்ந்து இல்லை' என்ற சந்தோஷத்தால் புத்துணர்ச்சியுடனும் துடிப்புடனும் இருக்க முடியும்.

# தடுமாறும் கரகாட்டக் கலை!

சட்டென்று வந்துவிடவில்லை இந்தக்கரகாட்டம். சிலப்பதிகாரத்தில் கூட 'குடக்கூத்து' என்று கரகத்தைப் பற்றிய குறிப்பிருக்கிறது. மாதவி ஆடினபதினொருவகை ஆடல் வகைகளில் கூடக்கூத்தும் ஒன்று. கரகம் உருவானதற்கு மாரியம்மனும் ஒரு காரணம். கிராமப் புறங்களில் காலரா, சின்னம்மை, தொற்றுநோய்கள் உண்டாகிவிட்டாலோ, கால்நடைகள் சற்றுச் சுணங்கினாலோ, மழை வராமலிருந்தாலோ உடனே மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன். கரகம் மூலமாக நேர்த்திக்கடன். இருபத்தொரு நாட்கள் விரதமிருந்து கரகம் எடுப்பார்கள். ஆற்றிலிருந்து பக்திமயமாக பூசாரி முதலில் கரகம் எடுத்துவர, பின்னால் 'நேர்த்திக்கடன்' கரகங்கள் பின்தொடரும். கரகம் எடுக்கிற பூசாரிக்கு விசேட மரியாதை.



கரகம் விழுந்தால் அபசகுனம் என்கிற நம்பிக்கை ஒருபுறமிருந்தாலும், அப்படி கரகம் எடுத்து வரும்போது சுற்றிலும் வாத்தியங்கள் அதிர பூசாரியும் சற்று உடம்பை அசைத்தபடி ஆட்டம் ஆடியபடி வருவார். இந்த ஆட்டம்தான் மூலம். இதிலிருந்துதான் கரகம் ஆட்டமாகத் தொடர ஆரம்பித்து விட்டது. அது ஆட்டக்கரகம்.

நீண்ட காலமாக இப்படிக் கரகம் ஆடியவர்கள் ஆண்களே, ஆடுகிற ஆண்களும் கரகத்தைத் தலையில் ஏந்திக்கொண்டு இரு கைகளிலும் கத்தி வைத்து பக்தியும் வீரமும் கலக்க ஆடியிருக்கிறார்கள். பெண்கள் கரகத்தைத் தொட்டால் தீட்டு என்றுகூட கருத்து இருந்தது. பின்னர் பெண்கள் புகுந்து விட, இன்றைக்கு ஆண்களை விட கரகத்தை அவர்களே கவர்ச்சிகரமாக ஆக்கிரமித்திருக்கிறார்கள். இப்படிக் கரகத்திற்கு 'மாரியம்மன் மூலம்' இருப்பதால் இன்றைக்கும் பாரம்பரியக் கரகாட்டக் கலைஞர்கள் அம்மனை வழிபட்ட பின்னரே ஆட ஆரம்பிக்கிறார்கள். தமிழ்நாட்டில் கரகம் இப்படித் துவங்கின மாதிரி கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களிலும் வெவ்வேறு அம்மன்களுக்கு 'கும்பாட்டம்' என்று விதவிதமான பெயர்களில் கரகம் எடுப்பது நடக்கிறது. இருந்தும் கரகாட்டம் முழுக்க தென்னிந்திய ஆட்டம்தான்.

சாளரம்

கரகத்திலும் வளர்ச்சி. முதலில் மண்குடம் பிறகு வெண்கலம், இப்போது எவர்சில்வரில் கூட கரகக்குடங்கள் வந்து விட்டன. மேலே நெட்டியில் செய்யப்பட்ட வர்ணங்கள் தீட்டிய கிளியைச் செருகிவிட, இது தான் தற்போதைய கரகம். முதலில் ஆட்டக் கரகம் ஆடிய போது பிரபலமானவை, நாடகத்தில் உருவான சில மெட்டுக்கள். ஆரவல்லி, கள்ளபார்ட் நடராஜன், கட்டபொம்மு இந்த மாதிரி மெட்டுகளை நையாண்டி மேளக்காரர்கள் வாசிக்க அதற்கேற்றபடி அடிகள் வைத்து ஆடுவர்கள். திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம் என்று விதவிதமான அடவுகள் ஆரம்பக் கால கரகாட்டத்தில் பரதத்திற்குரிய ஒழுங்குகள் மாதிரி இது கரகாட்ட விதி. பாரம்பரியமான இந்தக் கரகாட்ட நெறியைக் கற்றுக் கொடுக்கும் ஆண் ஆசிரியர்கள் மதுரை, தஞ்சாவூர்ப் பகுதிகளில் இன்னும் இருக்கிறார்கள். ஆரம்பத்தில் கரகம் ஆட வந்த பெண்களும் கொசுவம் வைத்த மஞ்சள் சேலையுடன் ஒழுங்கை அனுசரித்துத்தான் ஆடினார்கள் பிறகு கரகத்தில் மாற்றம் வந்தது எப்படி?

இதன் பார்வையாளர்களில் பெரும்பாலானோர் கிராமப்புறம் சார்ந்தவர்களே. அறுபதுகளுக்குப் பிறகு சினிமாவின் தாக்கம் கிராமப்புறங்களில் வந்த பிறகு, பாரம்பரியமான கரகம் போதுமானதாக இருக்கவில்லை ஜனங்களுக்கு கரகம் இதனாலேயே மாறிப் போனது.

துவக்கத்தில் பாரம்பரியமான கலையாகக் கரகத்தை அடவுகளுடன், நிதானமான இசைப் போக்குடன் ஆடியவர்கள், பிறகு சர்க்கஸ் வித்தைகளின் கூறுகளை இணைத்துக் கொண்டார்கள்.

கவர்ச்சிகரமான சிவந்த நிறத்துடன் இருப்பவர்களுக்குத் தான் இங்கு மதிப்பு, கூடுதல் சம்பளம், தொடர்ந்து நிகழ்ச்சிகள்.

பாரம்பரிய கரகம் ஆடுவதில் தஞ்சையிலுள்ள தேன்மொழிக்குத் தனிப்பெயர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும், தென்மண்டலக் கலைப் பண்பாண்டு மையமும் ஏற்பட்டு செய்யும் விழாக்களுக்குச் சேலையணிந்து கரகமாடுகிறார். "நல்ல பார்வையாளர்கள் முன்னால் ஆடுவது பிடித்திருக்கிறது. என்னதான் தொழில் வித்தைகளை நாங்கள் கற்றிருந்தாலும் பலர் அதை ரசிப்பதில்லை. குறவன் — குறத்தி ஆட்டத்தில் சற்று ஆபாசமாக ஆடுவதால் பலரும் அந்த ஆட்டத்தையே 'புக்' பண்ணுகிறார்கள். இதனால் கரகம் சிறிது சிறிதாக நசிந்து வருகின்றது' என்கிறார் தேன்மொழி, இன்னும் இதைப்போல தென்காசிப் பகுதியில் முத்துலெட்சுமி, பொன்னமராவதி, கல்யாணி, தஞ்சைரத்தினம் என்று பல பெண்கள் கரகத் தொழிலில்.

தஞ்சைக்கருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த வயதான கரகக் கலைஞரான பெரியசாமி உலக்கையைத் தலையில் வைத்து அதன் மீது கரகம் நிறுத்தி ஆடுவது கரகக் கலை ஆச்சரியம்.

*இருபத்தைந்து வருஷமாக கரகாட்டம் ஆடியவரான வெள்ளையம்மாள் சமீபத்தில் கரகாட்டக் கலை நசிவு பற்றிச் சொல்லுகிறார். 'நாங்களெல்லாம் பாவாடை, தாவணி கட்டியே முன்பு ஆடுவோம். பதினைந்து வருஷமா எல்லாம் மாறிப்போச்சு. உடம்பிலே அழகு இருக்கிறவரைதான் இப்போது மவுசு, இப்போது பார்க்கிறவர்களும் ஆபாசத்தைக் கேட்கிறாங்க. கூடுதலாகப் பணம் கொடுக்கிறாங்க, இவங்களும் ஆடுறாங்க இப்படி ஆகிப்போச்சு இந்தக் கலை...' கவர்ச்சிகரமான தோற்றத்துடனிருப்பவர்களுக்கு தஞ்சையில் நிகழ்ச்சிகளுக்கு "டிமாண்ட்" இருந்தாலும் பெண்களில் திறமையுள்ளவர்களும் இல்லாமலில்லை.*

*இருபத்தைந்து வருடமாக கரகம் ஆடும் எஸ்தர் ராணி, கரகம் வைத்தபடியே, கத்தி சுழற்றுகிறார். கம்பு, பார் விளையாட்டு விளையாடுகிறார். கண்ணை மூடி. வாழைக்காய் வெட்டுகிறார். இருந்தும் போதுமான வாய்ப்புகளில்லை. 'தொழில் தெரியாதவர்களுக்குத்தான் மரியாதை. ஒரு நாளைக்கு எட்டுமணி நேரம் வரை தொடர்ந்து ஆடக்கூடிய எங்க தொழில் கிராமத்துப் பண்டிகைகளையே முழுக்க நம்பியிருக்கு' என்கிறார்.*

கரகக் கலையில் இன்னொரு விஷயம், இந்த தொழிலுள்ள புரோக்கர்கள், கலைஞர்கள் நேரடியாகப் பேசி அட்வான்ஸ் வாங்குவதைவிட புரோக்கர்கள் தான் வாங்கிக் கலைஞர்களை அனுப்புகிறார்கள். மதுரை போன்ற குறிப்பிட்ட சில இடங்களில் பெண் ஆட்டக் கலைஞர்களுக்கு அட்வான்ஸாக மூவாயிரத்திலிருந்து ஐயாயிரம் வரை கொடுத்துவிடுவார்கள், புரோக்கர்கள். அதன் பிறகு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து பணம் பெற்றுக் கொள்வது முழுக்க புரோக்கர்கள். ஆடுகிறவர்களுக்குக் கிடைப்பது மிகச் சொற்பப் பணமே. இப்படி ஏறத்தாழ அடிமைகள் மாதிரி அவர்கள் ஆகி விடுவது பொருளாதாரத்தினால் உருவான ஒரு அவலம்.

ஒரு பக்கம் கரகாட்டக் கலை முன்பிருந்த மதிப்புக்களை இழந்து கவர்ச்சியானதாகவும், சில மோசமான அசைவுகள் காட்டக் கூடியதாகவும் உருமாறி விட்டிருக்கிறது. இன்னொரு பக்கம் சர்க்கஸுக்கான வித்தைக் கூறுகளுடன் இணைந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்ளத் திணறிக் கொண்டிருக்கிறது.

நன்றி:
தமிழர்கள் மறந்ததும் மறக்காததும்

---

## நாற்று
இளம் ஆக்கங்கள்

### மாவீரர் வணக்கம்

தமிழீழம் என்ற நாட்டிலே
சிங்கள இராணுவப் பேய்கள்
அலையும் தெருவிலே
ரோஜா மலர்கள் வாடுதே.
ஊரை விட்டு ஊர் வந்து
வீட்டைவிட்டு உறவை விட்டு
கன்னி மலர்கள் வாடுதே.
நாளும் எங்கள் விடுதலைக்கு
சின்ன சின்ன ஆசைகளை
இளைய பருவக் கனவுகளை
பூட்டி வைத்து மண்ணில் புதைத்து வைத்து
நெருப்பு மலர்கள் எரியுதே.
ஊரும் இல்லை பேரும் இல்லை – ஆனால்
எதிரி அழிவு மட்டும் என்று
கருப்பு மலர்கள் விரியுதே.
தாயை விட்டுத் தந்தையை விட்டு
நாட்டை விட்டு உணர்வை விட்டு
ஓடி வந்த சின்னஞ் சிறிய பூக்கள் நாங்கள்
உங்கள் முன் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்.

சு.சுவந்தினி
பாரிஸ்

### உருக்கமான நகைச்சுவை

இந்த நூற்றாண்டின் பிழைகள்
இருபத்தியொராம் நூற்றாண்டிலும்
இழைக்கப்படப் போவதாய்
உலகின் தலைவரொருவர் தன்
உணர்வுகளை(?) வெளிப்படுத்துகின்றார்.
கரடு முரடாய் இருந்த
உலகப் பொழுதுகளில்
ஹாஸ்யம் கரைத்து
சிரித்துக் கிடக்க – தீட்டப்பட்ட
சித்திரம் இதுவோ?

தீக்குச்சிகளை எதிர்த்து
தீப்பந்தங்கள் கொடிபிடிக்கின்றன.
வெப்பம் கூடாதாம்
உலகிற்கு! – பனித் தலைவர்கள்
உருகுகின்றார்கள்....
தண்மையான உலகம்
நலமானதே – இருந்தும்
அவை உண்மையாகவும்
இருக்க வேண்டுமன்றோ!

எது எப்படியிருந்தாலும் – இந்த
நூற்றாண்டின் இணையில்லா பகிடியாய்
மேலே சொல்லப்பட்ட கூற்றை
காத்து வைப்போம்!!

அன்புடன்
ஈழமைந்தன்

## வரலாற்றுப் பதிவான இயற்கையின் அனர்த்தங்கள்

எரிமலை, பெருவெள்ளம், காட்டுத்தீ எனப் பல சம்பவங்கள் வரலாறு பூராவும் பதிவாகி உள்ளன. இவற்றுள் சில மனித குலத்து வரலாற்றில் நினைத்துப் பார்க்கத்தக்க சம்பவங்களை கொண்டவை. அவற்றை 'ஈழமுரசு' தொகுத்துத் தருகின்றது.

### இலண்டன் மாநகரத்தில் பரவிய நச்சுப்புகை

இன்று உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் நாட்டை அசுத்தப்படுத்தாமல் இருக்கவேண்டும் என்ற கடுமையான சட்டம் (Anti Pollution Strict rule) நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் 1952-ம் ஆண்டு இலண்டனில் இந்த சட்டம் அமுலில் இருக்கவில்லை. அதனால் பல கொடுமையான அழிவுகள் ஏற்பட்டன. அந்த நேரத்தில் மக்கள் குளிர் கப சுரத்தினால் (Influenza) பாதிக்கப்பட்டனர். இத் தொற்று நோய் பெருவாரியாகப் பரவியதால் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர். வெள்ளப் பெருக்கினால் பல கடற்கரைப் பகுதிக் குடியிருப்புகள் அழிந்தன. அதே நேரத்தில் கடுமையான மூடுபனியும் (Fog) வேறு புகையும் கலந்த ஒரு புது வகையான புகை எல்லா இடமும் பரவியதால் 14 நாட்களுக்குள் 4000-க்கும் மேலான மக்கள் கொல்லப்பட்டனர். இது உலகத்தில் சூழல் மாசுபட்டதால் ஏற்பட்ட ஒரு பெரிய அழிவாகும்.

மிகவும் கூடிய மூடுபனி புகாரியினால் டசின் கணக்கான மக்கள் வீதியில் நடந்த வாகன விபத்துக்களால் இறந்த போதிலும், கூடுதலானோர் சூழல் மாசுபாட்டால் நுரையீரல் பாதிக்கப்பட்டு கொடுமையாக இறந்தனர். இந்த சம்பவத்தை அமெரிக்க பேராசிரியரான பிலிப் டிறிங்கர் (Philip Drinker) என்பவர் ஆராய்ந்த போது 'காற்றில் சல்பர்டி ஒக்சைட் (Sulphur dioxide) கூடுதலான அளவு கலக்கப்பட்டுள்ளதால், இக்காற்றினை சுவாசிக்கும் மக்கள் எல்லோரும் நுரையீரல் தாக்கப்பட்டு கொடிய முறையில் இறந்தனர்' என்று கண்டுபிடித்தார். தவிர்க்க முடியாத நிலையில் மக்கள் வெளியில் போகாமல் வீடுகளை காற்று உள்வராத அளவுக்கு இறுக்கமாக அடைத்துப் பூட்டிவிட்டு உள்ளிருந்தனர்.

வெளியில் அத்தியாவசியத்திற்காகச் சென்ற மக்கள், 2,3 அங்குல தடிப்பில் நச்சுப்புகை கலந்த மூடுபனியுள்ளபோது, தங்கள் முன்னிலையில் என்ன வருகிறது போகிறது என்றறியாமல் வாகன விபத்துக்குள்ளாக்கப்பட்டதால் அரசாங்கம் வாகன ஓட்டத்தை தடைசெய்தது. அதே நேரத்தில் கடைகளும் வீடுகளும் சமூகவிரோதிகளால் கொள்ளையடிக்கப்பட்டன. பிரித்தானிய அரசாங்கம் அதிர்ச்சியடைந்தது. சூழல் மாசுபாடு கூடிக்கொண்டே போகும்போது சிலிக்கோசிஸ் (Silicosis), அஸ்பெஸ்ரோசிஸ் (Asbestosis), நியுமோகோனியோசிஸ் (Neumoconiosis) ஆகிய வருத்தங்கள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன. பிரித்தானிய பாராளுமன்றத்தினால் உடனடியாக அவசர கமிட்டி (Emergency Atmospheric Pollution Committee) ஒன்று அமைக்கப்பட்டு இப் பிரச்சினைக்கு தீர்வுகாண வழிவகுக்கப்பட்டது. அவர்களின் ஆராய்ச்சியின்படி காற்றில் கலக்கப்பட்ட நச்சு வாயுதான் சூழல்மாசுபடுத்தலுக்கும், அழிவுக்கும் காரணம் என அறிந்து அன்று தொட்டு (Anti Pollution Control) சூழல் மாசுபாட்டுக்கு எதிரான கட்டுப்பாடு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. லண்டனில் வசித்த ஒருவர், நச்சுவாயு கலந்த மூடுபனி இனால் அவஸ்தைப்பட்ட தனது சினேகிதர்களும், அயல்வாசிகளும் தனது முன்னிலையில் துடிதுடிக்க விழுந்து இறந்தார்கள் என பத்திரிகையாளர்கட்கு கூறியுள்ளார். கூடுதலானோர் சல்பர்டி ஒக்சைட் கலந்த புகையை சுவாசித்து மிகவும் கொடூரமான முறையில் இருமத் தொடங்கினர். இலண்டனில் எல்லாப் பகுதியிலும் மக்கள் இறந்து காணப்பட்டதால் மாநகரம் துக்கத்தில் ஆழ்ந்தது. தாய்மார் தங்கள் குழந்தைகளுடன் வெளியே போகப் பயந்து இல்லங்களில் ஒழித்திருந்தனர். கூடுதலானோர் சுவாசிக்க முடியாது கஷ்டப்பட்டனர்.

இலண்டனில் வசித்த இன்னொருவர், ஈக்கள் படபடவென விழுந்து குவிவது போல் மக்கள் இறந்தனர் என பத்திரிகையாளர்கட்குக் கூறியுள்ளார். 3 கிழமைகளில் படிப்படியாக அந்தப் புகைப்பனி மறைந்தது. இலண்டன் சாதாரண நிலைக்கு வந்தது. அக்கொடிய நச்சுப் புகையினால் கிட்டத்தட்ட 4000 மக்கள் கொல்லப்பட்டதாகவும், பல்லாயிரக்கணக்கான பவுண்ஸ் திருடர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

## வரலாற்றில் பதிந்த தவறுகள்

(உலக வரலாற்றில் பதிவு பெற்ற சில தவறுகள் பெரும் அனர்த்தங்களுக்குக் காரணங்களாகிவிட்டன. இத்தகைய அனர்த்தங்கள் சிலவற்றை ஈழமுரசு, வாசகர்களுக்கு தொகுத்துத் தருகின்றது.)

### 1 மணித்தியாலத்தில் 1 மைல் வேகம் ஓடிய சுப்பர் கார் (Super car)

முதலாவது புதிய சுப்பர் காரை பார்வையிடுவதற்காக உலகத்தில் உள்ள எல்லாவிதமான பத்திரிகையாளர்களும் ஒன்று சேர்ந்தனர். ஒரு மணித்தியாலத்தில் 140 மைல் வேகம் ஓடும் இந்த லகொண்டா (Lagonda) சுப்பர் காரின் பெறுமதி 32,000 பவுண்ஸ்சாகும். இலண்டனில் தாவிஸ்ரொக் (Tavistock) என்ற இடத்தைச் சேர்ந்த டியூக் என்பவர் தனது 17-வது திருமண ஆண்டு விழாவிற்கு, தனது கணவருக்கு பரிசாக வழங்க இந்த முதலாவது புதிய சுப்பர் காரை வாங்கினார். டியூக், தான் கணவருக்கு பரிசளிக்கும்போது பத்திரிகையில் விமர்சனம் செய்வதற்காக உலகத்தில் உள்ள பல்வேறு பத்திரிகையாளர்களையும், தொலைக்காட்சி நிருபர்களையும் வரவழைத்தார். இந்தக்கார் 1976-ம் ஆண்டில் இலண்டனில் நடைபெற்ற மோட்டார் காட்சியில் மிகவும் திறமையானது இக் கார் எனக் கூறப்பட்டது. ஆனால் 3 மாதங்களுக்கு முன்பு அதனைக் கட்டுப் படுத்தும் அதிவேகக் காருக்கான, (Mini Computer) சிறிய கொம்பியூற்றரில், யாரோ தவறுதலாக, சிவப்பு வயருக்குப் பதிலாக கறுப்பு வயரை பொருத்தியதால் அது வெடித்து சிதறியது. டியூக் தம்பதியின் திருமண ஆண்டு விழாவிற்கு முன்னர் அந்தக் காரின் சிறிய கொம்பியூட்டரைத் திருத்த முடியவில்லை.

ஒரு மணித்தியாலத்தில் 140 மைல் வேகம் ஓடும் அந்தக்கார் ஒரு மணித்தியாலத்தில் ஒரு மைல் வேகமே ஓடக்கூடியதாக இருந்தது. ஒரு சிறிய தவறு செய்ததனால் விலை உயர்ந்த முதலாவது புதிய சுப்பர் கார், ஒரு மணித்தியாலத்தில் ஒரு மைல் ஓடக்கூடிய நிலைக்கு ஆகி விட்டது.

— கவிதா —


5 யூலை-19 யூலை



துயர் துடைப்பு நாட்கள் 98

தொடரும் இடப்பெயர்வுகளால்
வீடுவாசல் இழந்து மரநிழலில்
பசியுடனும் பட்டினியுடனும் நோயுடனும்
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது
உறவுகளின் துயர் துடைக்க உங்கள்
வீடு தேடி வருகின்றோம்....
எம் உறவுகளின் துயர் போக்க
உங்களால் இயன்ற அதி உச்ச
பங்களிப்பை வழங்குங்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்ஸ்
26, Rue du Departement, 75018 Paris.
Tel: 01 40 38 30 74

ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689

Pub

(15–ம் பக்கத் தொடர்ச்சி)

# ஆந்த்ரே

கூறிக் கொண்டதோடு, கட்டித் தழுவி முத்தமிட்டாள். வீட்டுக்குள்ளிருந்து ஆந்த்ரே வாலை ஆட்டிக்கொண்டு ஓடிவந்தது. இரண்டு தடவைகள் 'வவ்..வவ்..' என்று குரைத்தது. சுகந்தியின் மீது ஏறிப் பாய்ந்து ஆனந்தக் கூத்தாடியது. அவளைக் கொஞ்சியது. சுகந்தியும் அதனை முத்தமிட்டாள். ஆந்த்ரேயின் மோவாயை, முதுகை தடவினாள். அது மீண்டும், மீண்டும் அவளைக் கொஞ்சியது. ஆனந்தக் குரைப்புக் குரைத்தது. கிழவி பூரிப்போடு இருவரையும் கண்ணிமைக்காது பார்த்து ரசித்தாள். தான் ஆந்த்ரேக்காகக்



கொண்டுவந்த கேக் துண்டைக் கிழவியிடம் காட்டினாள். ஆந்த்ரேக்கும் கொடுக்கலாமா என அனுமதி கேட்டாள். கிழவியும் சம்மதித்தாள். சுகந்தி தான் கொண்டுவந்த பொட்டலத்தைப் பிரிக்கத் தொடங்கினாள். தனக்கு அவள் பிரியமாய் ஏதோ கொண்டு வந்திருக்கிறாள் என்பது ஆந்த்ரேக்குப் புரிந்து விட்டது. அவள் பொட்டலத்தைப் பிரித்தெடுக்கும் வரை பொறுமையிழந்ததாய் அங்குமிங்கும் ஓடியது. குரைத்தது. அவளைக் கொஞ்சியது. பிரித்த பொட்டலத்திலிருந்து கேக் துண்டை எடுத்து ஆந்த்ரேக்கு ஊட்டத்தொடங்கினாள். வாசற்கதவு திறக்கும் சத்தம் கேட்டது. போதையில் தள்ளாடியபடி வீட்டினுள்ளே நுழைந்தான் கிழவன் டேவிட் குலாக்சன். ஆந்த்ரேக்குக் கேக் ஊட்டிக் கொண்டிருந்த சுகந்தியைக் கண்டதும் கிழவியுடன் சீறினான். சுகந்தியின் கையிலிருந்த பொட்டலத்தைப் பறித்துச் சுவரோடு வீசி எறிந்தான். 'மனிதப் பண்போடு நட வரம்பு மீறாதே' என உச்ச ஸ்தாயியில் எச்சரித்தாள் கிழவி கணவனை. ஆந்த்தேயைக் காலால் எட்டி உதைத்தான். ஆந்த்ரே அடுக்களைப் பக்கம் வீரிட்டபடி ஓடியது. சுகந்தி பயந்து நடுங்கினாள். சுகந்தியின் நிலையைப் புரிந்துகொண்ட கிழவி, அவளைத் தன் அணைப்புக்குள் உட்படுத்திக் கொண்டாள். 'அவளை வெளியே அனுப்பு' என்று உரத்த குரலில் கத்தினான் கிழவன். 'வெளியே வேண்டியது மனிதப் பண்பில்லா நீதான்' என்று கோபாவேசமாக, வாசற் கதவைக்காட்டி உத்தரவுத் தொனியில் கூறினாள் கிழவி லின்டா. என்ன நினைத்தானோ தெரியவில்லை. மகுடியிடும் கட்டளைக்கு மண்டியிடும் சர்ப்பம்போல் எதுவுமே பேசாது கிழவன் அடங்கிப்போனான்.

சனிக்கிழமை.

வியாழக்கிழமை இரவிலிருந்து சுகந்திக்கு ஒரே காய்ச்சல். வாயுளறினாள். பயந்து பயந்து நடுங்கினாள். இரண்டு தடவைகள் வைத்தியரிடம் காட்டியாயிற்று. காய்ச்சல் நிற்கவில்லை. இன்று அவளை வைத்தியசாலையில் மறித்து விட்டார்கள். சுகந்தியின் பிறந்ததினக் கொண்டாட்டத்திற்கு அழைத்தவர்களுக்கு இன்று கொண்டாட்டம் இல்லையென தொலைபேசியில் அறிவிப்பதற்காய் வைத்தியசாலையில் இருந்து வீட்டிற்கு வந்தேன். கிழவியின் வீட்டு முன்றலில் பொலிஸ் வாகனங்கள் இரண்டும், அம்புலன்ஸ் வாகனமொன்றும் தரித்து நின்றன. பொலிஸ் வாகனத்தில் டேவிட் குலாக்சன் ஏற்றப்படுவதையும், 'கொலைஞனைக் கொண்டு செல்லுங்கள். பாவாத்மாவைத் தண்டியுங்கள்' என்று கிழவி கண்ணீர் பெருக புலம்பிக் கொண்டு தெருவோரம் நிற்பதையும் கண்டு, சற்றுக் குழம்பித் தடுமாறித்தான் போனேன்.

'இரண்டு நாட்களாக ஆந்த்ரே எதுவுமே சாப்பிடாமல் நோன்பிருந்ததாம். ஆந்த்ரேயின் வைராக்கியத்தைப் பொறுக்க முடியாத கிழவன் கோபங்கொண்டு இரும்புச் சட்டத்தால் அதன் தலையில் போட்டிருக்கிறான். ஆந்த்ரே அந்த இடத்திலேயே தன் உயிரைத் தானமிட்டது. கிழவி பொலீசுக்கு அறிவித்துவிட்டாள்' மாறித் துரொண்ணிங் செய்தி சொன்னாள் எனக்கு.

ஆந்த்ரேயின் உடல் பிரேத உறைக்குளிட்டு அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றப்பட்டது.

எனது விழிகள் என்னையுமறியாது பனித்தன. நெஞ்சுக்குள் ஏதோ கனத்து. மூச்சு முட்டுவதைப்போலிருந்தது. 'சுகந்தி குணமாகி மீண்டும் வந்து ஆந்த்ரேயை விசாரித்தால்...?' எனக்குள் எழுந்த கேள்வி என்னையே பயமுறுத்திற்று.

பேடர்சன் தெருவுக்கு விடை கொடுக்கும் எண்ணம் மட்டுமே இப்போதைக்கு எனக்குப் புலப்பட்ட தீர்வாய்த் தெரிந்தது.

*நன்றி: இன்னுமொரு காலடி*

திருமணவிழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா, பிறந்த நாள் வைபவங்களா, மேடை நிகழ்ச்சிகளா இசை மழையில் நனைந்து மகிழ

ஐரோப்பா புகழ்

பாரிஸ் ஈழநிலா

தொடர்புகட்கு:
இயக்குநர்
S.S. தில்லைச்சிவம்
Tel: 0140375669




# திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால்....!?

அந்த நாளையிலை செல்வந்தர்மார், முதலியார்மார் தங்கட பவுசுகள் ஊருலகத்துக்கு தெரியவேணும் எண்டதுக்காக, தங்கட பிள்ளையளுக்கு கலியாணம் நடந்தா, சீர்வரிசை எண்டு சொல்லி அள்ளியள்ளிக் குடுப்பினம். அதுவும் பொம்பிளைப் பிள்ளையள் எண்டா, போகப்போற வீட்டிலையும் வசதியா இருக்க வேணுமெண்டு இன்னும் எக்கச்சக்கமா அள்ளிக் குடுப்பினம். அவையளின்ரை இந்த கௌரவ அன்பளிப்புகள்தான் சீதனமா மாறி இண்டைக்கு கலியாணத்தையே ஒரு வியாபாரமா மாத்தியிருக்குது எண்டு நினைக்கிறன்? இந்த வியாபாரங்களால மாப்பிள்ளையை விலைகுடுத்து வாங்க முடியாத எத்தனை பிள்ளையள் கலியாணமே கட்டாமல் போய்ச்சேந்திருக்குதுகள். இன்னும் எத்தனை வாழ்ந்து கொண்டிருக்குதுகள். இதுகளுக்கு முடிவு இல்லாமல் 'ஐஞ்சு பெண்ணைப் பெத்தா அரசனும் ஆண்டியாவான்' எண்டு சொல்லிச் சொல்லி இன்னும் எத்தனை காலத்துக்கு காலம் தள்ளப் போறம் எண்டுதான் விளங்குதில்லைப் பாருங்கோ. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை'. இது அதையும்தாண்டி தொடரும் போலதான் கிடக்குது!

இப்ப நாங்கள் சீட்டுப்பிடிக்கிற, வட்டிக்குவிடுற உந்த நோட்டுக்கள் அச்சடிச்சு புழக்கத்திலை வராத அந்தக் காலத்திலை, தங்களிட்டை இருக்கிற பொருளைக்குடுத்து அதுக்குப் பதிலா வேறையொரு பொருளை வாங்குறவை. இதைத்தான் 'பண்டமாற்று' வியாபாரம் எண்டு சொல்லுறது. சில இடங்களிலை எங்கட கலியாணங்களும் இந்தப் 'பண்டமாற்று' முறையை ஞாபகப்படுத்துற மாதிரியெல்லோ இருக்குது. வீடுவளவு, நகைநட்டு, சொத்துப்பத்தெண்டு கொடுக்க வசதியில்லாதவை பெண்குடுத்து பெண்ணெடுப்பினம். இதை நாகரிகமா 'மாத்துச்சம்பந்தம்' எண்டு வேறை சொல்லுறவை. சேந்து வாழப்போற அதுகளிலை ஆருக்கும் விருப்பமோ இல்லையோ எண்டதைப் பற்றியெல்லாம் எவையளுக்கும் அக்கறை கிடையாது. அண்ணனுக்காக தங்கையோ, தங்கைக்காக அண்ணனோ வாழ்க்கையை தியாகம் பண்ணவேண்டியது தான்.

இப்பிடி சீதனம் எண்டொண்டு உருவாகி எங்கட சனங்களை என்ன பாடுபடுத்துது! இப்ப அண்மையிலை தான் அவருக்கு வழமையான குலம் கோத்திரம், சாதி, மதம், குட்டைநெட்டை எல்லாம் நல்லவடிவா பாத்துத் தான் விலையும் பேசினவை. ஆனா நல்லகாலம்! அங்கையிருந்து பேசி வாறதுகள் இவையளுக்கு சொட்டையோ எண்டு பாக்க வெளிக்கிடுறேலை. அப்பிடி வெளிக்கிட்டா இங்கினை அடுப்புக்கையும் நெருப்புக்கையும் கிடந்து யோசனையும்கூடி முக்கால்வாசி பெடியளும் வெறும் மண்டையோடை எல்லோ திரியுதுகள். பிறகு அதுகளுக்கு கலியாணமே நடக்காமலே எல்லோ போயிடும்! இது எல்லாம் சரியாகி பிள்ளையும் இங்கினை வந்து காலியாண நாளை எதிர்பாத்து உறவுகளின்ரை வீடொண்டிலை தங்கியும் விட்டுது. இப்பதானாம் அவருக்கு தெரியவந்தது சீதனமா தாறதெண்ட காணி இராணுவ வலையத்துக்கை மாட்டுப்பட்டுக் கிடக்கெண்டது! இப்ப என்னெண்டா அந்தக் காணியை விட்டுப்பொட்டு வேறையொண்டு தந்தாத்தான் கழுத்திலை மூண்டு முடிச்சுப் போடுவன் எண்டுபோட்டார். அது சரி! இப்ப எங்கை மூண்டு முடிச்சுப் போட்டு தாலி கட்டுறது? தாலி கொழுவுறதெல்லோ. அதுவும் கழுத்துக்கு கிட்ட, கொண்டைப் பிடிக்க பின்னுக்கு நிக்கிறவை மிச்சத்தை பாத்துக் கொளுவுவினம். அதுக்கு கூட மாட்டன் எண்டு போட்டாராம். உதுகளை என்ன செய்யிறது? தந்ததே சும்மா, அதுக்கை இஞ்சையிருந்து அங்கையிருக்கிற காணியிலை கொத்தி, சாறி ஏதோ பயிர் நடவு செய்யப்போற மாதிரியெல்லோ அவசரம். இப்பிடியெல்லாம் பிடுங்குப்பட்டு வாங்கிப்போட்டு பிறகு என்னெண்டுதான் உப்பிடியானதுகள் மனிசிமாரோட மூஞ்சையைக் குடுத்துக் கதைக்குதுகளோ எனக்கெண்டா ஆச்சரியமாதான்கிடக்கு!

இப்பிடி ஒரு பகுதி இருக்க, ஊருக்கு உபதேசம் கணக்காவும் சிலபேர் இருக்கினம். அவர் ஒரு முற்போக்கானவர். சீதனம் வாங்கக்கூடாதெண்டு உங்கினை தெரிஞ்சவைக்கு 'அட்வைஸ்' வேறை இலவசமா சொல்லிக் கொண்டு திரிஞ்சவர். அப்பிடியொருத்தர் எக்கச்சக்கமா வாங்கிப்போட்டுத்தான் செய்தவர் எண்டு கேள்விப்பட்டாப்போல ஒருநாள் கண்ட இடத்திலை கேட்டன்....... "ஒண்டும் வாங்காமல்தான் செய்யிறதெண்டு 'நினைச்சுக்கொண்டு' இருந்தவராம், 'ஆனா நாளைக்குச் சனங்கள் 'ஒண்டும் வாங்காமல் செய்ததால, பெடியனுக்கு எதோ வியாதிகியாதி இருக்கவேணும்' எண்டெல்லோ கதைக்குங்கள் எண்டுறான். இன்னும் சிலபேர், "தாங்களும் சகோதரங்களுக்கு குடுத்துத்தானே கட்டிவைச்சது. அதை திருப்பிவாங்க வேண்டாமோ?" எண்டுகினம். இன்னும் சில பேர் கொஞ்சம் முன்னேற்பாடா "தனியொருத்தற்ரை உழைப்பிலை இங்கை வாடகை, கரண்ட், ரெலிபோன், வரியெண்டு அறுபத்தெட்டுச் செலவுகளை சமாளிச்சு எப்பிடி வாழ்கையைக் கொண்டு நடத்துறது. உப்பிடி வேண்டிக் கீண்டி வைச்சிருந்தாத் தானே காலம்தள்ளலாம் எண்டுகினம்! உப்பிடியானதுகளுக்கு ஏன் வாழ்க்கையை, குடும்பத்தையெண்டு ஆரும் கேட்டுப் போடாதையுங்கோ. ஏனெண்டா அவையள் அங்கை இங்கையெண்டு வட்டிக்கெடுத்துக் கொடுக்க, இவையள் இங்கை அங்கையெண்டு வட்டிக்கு விட்டுட்டு காலையாட்டிக்கொண்டு சாப்பிடவெல்லோ கங்கணம் கட்டிக்கொண்டு நிக்கினம்.

சரி இதைப் பற்றி பொம்பிளையள் என்ன சொல்லுகினம் எண்டு கேட்டா..... "இப்பவுள்ள நிலைமையிலை இங்கினை குடுத்துச் செய்யிறதுதான் தங்களுக்கு பாதுகாப்பு எண்டுதுகள்! அந்த நேரங்களிலை சத்தியவான் மாதிரி கதைப்பினம், நாளைக்கு ஏதேன் வரேக்கை தாங்கள் எதோ தியாகம் பண்ணின மாதிரி பீத்தித்தள்ளுவினம். என்னத்துக்கு சோலியை, ஐஞ்சோ பத்தோ முஞ்சையிலை விட்டெறிஞ்சா தங்களுக்கும் ஒரு தைரியம் எண்டுகினம்.

அதெண்டா உண்மைதான்....! இப்பிடித்தான் இங்கையொரு தெரிஞ்ச குடும்பம் இருக்குது. அங்கை போனால், மதுரை ஆட்சியைத்தான் பாக்க முடியும்! மனிசிக்காறி புருசனுக்கு கனக்க 'சிக்னல்' பாசையள் சொல்லிக்குடுத்து வைச்சிருக்கிறா. ஆரும் இனம் சனமெண்டு வந்திருக்கேக்கை ஏடாகூடமா இவர் கதைக்க வெளிக்கிட்டா அவ காட்டுற 'சிக்னலுக்கு' ஏற்ற மாதிரி நடந்து கொள்ளவேணும். நான் அங்கைபோய் வந்தாப் போலதான் உதுகளை அறிஞ்சு கொண்டனான். பின்ன ஒருநாள் புருசன்காறனிட்டை நேரையே பிடிச்சுக் கேக்கத்தான், சொன்னான் 'அந்த நேரத்திலை அவசரப்பட்டு எக்கச்சக்கமா சீதனத்தை வாங்கிப்போட்டன். இப்ப இருக்கிற வீடும் அவையள் தந்த சீதனத்திலைதான் வாங்கினது, அதுதான் அங்காலை கை கொஞ்சம் நீண்டிருக்குது' எண்டுறார்.

**ஆனா நல்லகாலம்! அங்கையிருந்து பேசி வாறதுகள் இவையளுக்கு சொட்டையோ எண்டு பாக்க வெளிக்கிடுறேலை. அப்பிடி வெளிக்கிட்டா இங்கினை அடுப்புக்கையும் நெருப்புக்கையும் கிடந்து யோசனையும்கூடி முக்கால்வாசி பெடியளும் வெறும் மண்டையோடை எல்லோ திரியுதுகள். பிறகு அதுகளுக்கு கலியாணமே நடக்காமலே எல்லோபோயிடும்!**

அப்ப என்ன செய்யிறது...? அவையள் வாங்க மாட்டன் எண்டாலும் இவையள் குடுத்துத்தான் செய்வம் எண்டு நிக்கினம். இவையள் குடுக்க வசதியில்லையெண்டா அவையள் தந்தாத்தான் செய்வம் எண்டுகினம். இதிலை ஆரைக்குறை சொல்லுறதெண்டெல்லோ ஒரே குழப்பமாக் கிடக்குது. 'வழியை அடைச்சு வேலியைப்போட்டா சனங்கள் ஏறிக்குதிச்சுத்தான் போவார்கள். வழியைத் திறந்து வைச்சா இன்னொரு இடத்தாலை ஏறிக்குதிக்கத்தான் பாப்பார்கள்' எண்டொரு சீனப் பழமொழி சொல்லுது. பழகின பழக்கத்தை மாற்றுறதெண்டா வலு கஸ்டம்தான். அதுக்கா திருடராய் பாத்து திருந்திற வரைக்கும் திருட்டைப் பாத்துக் கொண்டு இருக்க முடியுமே? பூனைக்கு மணியைக் கட்டறதுக்கு எல்லாரும் எப்ப தயாராகப்போகிறம்...?

**அருமைத்தம்பி**

## மேற்கு லண்டன் மாநகரில்

# துவாரகா

## Cash & Carry

இல்லை என்பது இங்கில்லை

N°: 199, The BROADWAY, Southall, Middx.

**T.P: 0181 / 813 9126**

---

**உங்கள்**

- ★ பிறந்தநாள் வாழ்த்துக்கள்
- ★ திருமணவைபவ அறிவிப்புக்கள்
- ★ வர்த்தக விளம்பரங்கள்
- ★ பொது விழாக்கள்
- ★ மரண அறிவித்தல்கள்

உலகம் பூராவும் சென்றடைய

ஈழமுரசு பிரித்தானியா Eelamurasu Weekly

விளம்பர சேவை

உங்கள் விளம்பரங்களை தரமான வடிவமைப்புடன் பிரசுரிக்க நீங்கள் நாடவேண்டியது

ஈழமுரசு

**விளம்பர சேவை**

**பிரித்தானியத் தொடர்புகளுக்கு:**

குணம் - Tel: 09 56 27 77 18

ஜெயந்தன் - 09 56 90 81 45

---

WTSA

உலகத் தமிழர் விளையாட்டுக் கழகத்தினரால்

**செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு**

# நிலைய நிதிக்காக

ஒழுங்கு செய்யப்படும்

**மாபெரும் துடுப்பெடுத்தாட்ட, உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி-1998**

இடம்: Warren Farm Sports Centre
Windmill Lane, Southall, Middx

காலம்: 11.07.98 சனிக்கிழமை

நேரம்: காலை 8.30 மணி முதல்
மாலை 7.30 மணி வரை

துடுப்பெடுத்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளும் அத்துடன் 40 வயதிற்கு மேற்பட்டோர் துடுப்பெடுத்தாட்டப் போட்டியும், 15, 12, 10 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியும், 16 வயதுக்குட்பட்டோர் வலைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெற உள்ளன. (லண்டனில் கழகங்களுக்காக நடைபெறும் ஒரேயொரு போட்டி இதுவாகும்)

சுவையான, வகைவகையான, தரமான தமிழ் உணவு வகைகள் மைதானத்தில் விற்பனை செய்யப்படும்.

**போட்டி அனுமதிப்பத்திர முடிவுத் திகதி: 30.06.1998**

**மேலதிகத் தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| S.சிவதில்லைநாதன் | - 0181-575 6104 |
| Dr. M. தெய்வேந்திரா | - 0181-366 5137 |
| R.T.N. தயாளன் | - 0956 494 798 |

அனுமதி: 2 பவுண்கள்

வாகனத் தரிப்பிடம்: 3 பவுண்கள்

---

# வெளிவந்துவிட்டன

# ரமி யின்









RAMIY RECORDS



# துலூஸ் நகரில் இடம் பெற்ற உலக மொழிகளின் பொது மன்றம்

பல மொழிகளையும் அம்மொழி பேசும் மக்களின் கலாச்சாரத்தையும் ஓர் இடத்திலேயே மக்கள் பார்த்துக்கேட்டு அறிந்து கொள்ளும் வகையிலே 'உலக மொழிகளின் பொதுமன்றம் — 1998' என்ற மொழிகளின் ஒன்றுகூடலும், கண்காட்சியும் தென் பிரான்ஸில் உள்ள துலூஸ் நகரில் மாநகரசபை, பிராந்திய சபை ஆகியவற்றின் ஆதரவுடன் வருடாவருடம் நடாத்தப்பட்டு வருகிறது. அறிஞர்கள், பத்திரிகையாளர்கள், சாதாரண பொதுமக்கள் என்று பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொண்ட இம் மொழி, கலாச்சாரச்சந்திப்பு, நகரின் இதயமான மாநகரசபை முன்றலில் கடந்த 07.06.1998 காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெற்றது.



இந்த நிகழ்ச்சியில் துலூஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியது. தமிழ் மக்களின் கலை கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் கண்காட்சியும் நடாத்தப்பட்டது. சந்திரிகா அரசின் கொலைபாதக அட்டூழியங்கள் எந்தளவுக்குத் தமிழீழத்தைச் சின்னா பின்னப்படுத்துகின்றது என்பதைப் புகைப்படங்கள், பத்திரிகைச் செய்திகளின் பிரதிகள், பிரசுரங்கள் மூலம் அங்கு வந்திருந்த பெருந்தொகையான மக்களுக்கு விளக்கப்பட்டது.

இக் கண்காட்சிக்கு துலூஸைத் தலை நகராகக் கொண்ட 'மிடிப்பிரனே' என்ற பிராந்திய சபைக்குக் கடந்த 18 வருடங்களாகத் தலைவராக இருந்தவரும், கடந்த பிராந்திய சபைத் தேர்தலிலும் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தும் 'லூபென் கட்சி' தமக்கு ஆதரவாக வாக்களித்தமையினால் தனது பதவியை இராஜினாமாச் செய்தவருமான திரு.மார்க் சன்சி வருகைதந்து தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் பற்றிக்கேட்டறிந்து சென்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த நிகழ்ச்சியில் 'இருபத்தைந்து மொழிகளினால் இயற்றப்பட்ட ஒரே பாடல்' பாடப்பட்டு சாதனையும் நிலைநாட்டப்பட்டது.



இந்தக் கண்காட்சிக்கு வருகை தந்திருந்த திரு.மார்க் சன்சி அவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும், செல்வன். பிரசுதன் வன்னியசிங்கம் ஒரே பாடலில் பல மொழிகள் நிகழ்ச்சியில் பாடுவதையும், மக்கள் ஆர்வத்துடன் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

*தொகுப்பு: ந.கோபிரமணா.*

# குறள் மணி பட்டத்தேர்வு

தனித்தும், தமிழாலயங்களிலும் பத்தாம் வகுப்புவரை கற்றுத்தேறி உயர்கல்வி கற்பதற்கு விரும்பும் மாணவர்களுக்கும், மற்றும் தமிழில் உயர் கல்வி பெற ஆர்வமுடன் உள்ளவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

ஐரோப்பாவை மையமாகக் கொண்டு ஜேர்மனியில் குறள் மணிப்பட்டத்தேர்வை நடாத்த உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் முன்வந்துள்ளது.

1999-ம் ஆண்டு ஆவணியில் 16 வயது பூர்த்தி அடைந்தவர்களும், அதற்கு மேற்பட்டோரும் இதில் பங்குபற்றலாம். இத்தேர்வு கலைமாணி பட்டத் தேர்வுக்கு நிகராகும். மேற்படி தேர்வுக்கான எண்பேராயம் என்ற அறிஞர் குழுவுக்கு தமிழ் ஆட்சி, தமிழ்பண்பாடு, இந்து சமயம் மற்றும் அற நிலைத் துறை அமைச்சர் திரு.மு.தமிழ்க் குடிமகன் தலைமை ஏற்றுள்ளார். இத் தேர்வில் பங்கு பெற விரும்புவோர் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியம் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும். கே.ரி. கணேசலிங்கம் Rlegel Str-26, 48431 Rhine, Germany.

**தொலைபேசி தொலைநகல்:**
**05971 – 14258**

### தமிழ் மாணவர் அமைப்பு—ஜேர்மனி கிளை

# மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி-1998

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினர் ஆறாவது வருடமாக நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிகளில் மத்திய மாநிலம்—1 மெய்வல்லுனர் போட்டிகள் 28.06.98 ஞாயிறன்று வூப்பெற்றால் நகரில் நடைபெறும்.

**காலம்: 28.06.98 ஞாயிற்றுகிழமை**

**இடம்: SPORT PLATZ - Oberbegische Str-91, 42113 Wuppertal.**

விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் உற்சாகப்படுத்த ஒன்று திரளுமாறு பார்வையாளர்கள் அழைக்கப்படுகின்றனர்.

*தமிழ் மாணவர் அமைப்பு – ஜேர்மன்கிளை*

# புகலிட நிகழ்வுகள்

## சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மாநாடு - பிரான்ஸ்

## 27 - 28 ஜூன் 1998

**முதல் சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மாநாடு**
**நாள்: வெகுதான்ய ஆண்டு ஆனித் திங்கள் 14 - 15**
**27 - 28 ஜூன் மாதம் 1998**
**இடம்: UNESCO - PARIS, FRANCE**

மாநாட்டின் கருப்பொருள்:

**நமது கலாச்சாரத்திற்கும் வாழ்க்கை முறைக்கும் இந்து மெய்யியல் தத்துவம் காட்டும் நெறி**

**இந்து மதத்திற்கும் மற்றைய மதங்களுக்கும் இடையேயான ஒருமைப்பாடு**

**நிகழ்ச்சி நிரல்:**

**27.06.1998 சனிக்கிழமை**

தொடக்கம் : குத்துவிளக்கு ஏற்றுதல்
மங்கல இசை நாதஸ்வரம்
கடவுள் வணக்கம்
திருமதி லீலா சண்முகதாசன்

காலை 09.00 மணிமுதல் மதியம் 12.00 மணி வரை

வரவேற்புரை, தொடக்கவுரை
தலைமையுரை - முதன்மையுரை - சிறப்புரை
**உலக இந்து பேரறிஞர்கள்**

மாலை 13.45 மணிமுதல் 18.00 மணிவரை

**ஆய்வரங்கம் - முதலாவது சுற்று**
சர்வதேச அளவிலான பிரபல இந்து அறிஞர்கள்

**28.06.98 ஞாயிற்றுக்கிழமை**

**காலை 09.00 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை**

**ஆய்வரங்கம் - இரண்டாம் சுற்று**

**மதியம் 13.45 மணிமுதல் மாலை 16.00 மணிவரை**


சிறப்புரைகள்
சர்வதேச அளவிலான பிரபல இந்து அறிஞர்கள்

**மாலை 16.30 மணி**

தீர்மானங்கள் அறிவிப்பு
நன்றியுரை
மாநாடு நிறைவு

*சுவிசின் வலே மாநிலத்திலுள்ள சியோன் நகரில் பண்பாடு, பாரம்பரியம், இசை, நடனம், பொழுது போக்கு, ஒன்று கூடல் ஆகியவற்றுக்கான சங்கங்கள் ஒன்றிணைந்து யூன் 5ம், 6ம் திகதி நடத்திய விழாவில் இருந்து சில காட்சிகள்...*







# இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டு போட்டி முடிவுகள்



எதிர்வரும் யூன் 27ம், 28ம் திகதிகளில் பாரிசில் நடைபெற இருக்கும் அகில உலக இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டையொட்டி நடாத்தப்பட்ட தேவார, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம்:—

**பண்ணிசைப் போட்டி முதற்பிரிவு 5 - 10 வயதுவரை:**

1. செல்வி செல்வராசா நிலானி
2. செல்வி சரசகோபாலன் சந்திகா
3. செல்வி அரியரெட்ணம் நர்மதா
4. செல்வி அரியரெட்ணம் துவாரகா
5. செல்வி மதனராசா தீபனி

**பண்ணிசைப் போட்டி 2ம் பிரிவு 11 - 15 வயது வரை**

1. செல்வி ஆனந்தராஜா ஆரணி
2. செல்வி சகாயதேவன் மேரி
3. செல்வி பத்மநாதன் கல்பனா
4. செல்வி சுதர்சன் செல்வி
5. செல்வி தேவகுமார் பிரியதர்சினி

**பேச்சுப் போட்டி முதற்பிரிவு 5 - 10 வயது வரை**

1. செல்வன் கென்றிக் நொய்சன்
2. செல்வி சுதேசபாலன் மைதிலி
3. செல்வி குணலிங்கம் சிந்துஜா
4. செல்வி அரியரெட்ணம் நர்மதா
5. செல்வி ஜெயச்செல்வன் அர்ச்சனா

**பேச்சுப் போட்டி 2ம் பிரிவு 11 - 15 வயது வரை**

1. செல்வி சபாரெட்ணம் மதனா
2. செல்வி பற்குணராஜா பைரவி
3. செல்வன் கிருபானந்தன் கிஷானந்
4. செல்வன் பா. கோவர்த்தனன்
5. செல்வன் ஜெயச்செல்வன் ஜனார்த்தனன்

இப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற குழந்தைகளுக்குத் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படுகிறது.

**தங்கப்பதக்கத்தை வழங்கிய பாரிஸ் வர்த்தகஸ்தாபனங்கள் :-**

ரூபி ஆபரணமாளிகை, மோகன் ஜுவலறி, தங்கமாளிகை, அம்பிகை ஜுவலறி இப் போட்டிகளில் பங்குபற்றிய அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

எதிர்வரும் 27ம் 28ம் திகதிகளில் பாரிசில் நடைபெற இருக்கும் அகில உலக இந்து ஒருமைப்பாட்டு மாநாட்டின் ஓர் அங்கமாக 28.06.98—ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு விசேட கலை நிகழ்ச்சிகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெற இருக்கின்றன.

**சொற்பொழிவாளர்கள்:-**

1. பேரூர் ஆதீனகர்த்தர், கயிலை மாமுனிவர் வித்துவான் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்.
2. தமிழ்ப் பேராசிரியை டாக்டர் சாரதா நம்பியாரூரன் அவர்கள்.
3. வித்துவான் ந.வேலன் அவர்கள்.
4. தவத்திரு சிவநந்தி அடிகளார் அவர்கள்.

**கலைநிகழ்ச்சிகள்:-**

1. கலாலயம் மாணவ மாணவிகள் வழங்கும் கலைநிகழ்ச்சி.
2. சோதியா கலைக்கல்லூரி மாணவ மாணவிகள் வழங்கும் கலைநிகழ்ச்சி.

**நிகழ்ச்சி நடைபெறும் இடம்:**

*சித்திவிநாயகர் ஆலய மண்டபம்*

***90 Rue Emile Zola, 93120 La Courneuve.***
***Tram - Arrêt - Hôtel de ville - Bus - 249.***


## கீபோட் வகுப்புகள்

**குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்**
**(Intenrnational Method)**
**கீபோட் கற்பிக்கப்படும்**

**சனி: ஞாயிறு:** 8.00 மணி தொடக்கம் 13.00 மணிவரை

**திங்கள்: செவ்வாய்:** 14.00 மணி தொடக்கம் 18.00 மணி வரை

ஆசிரியர் S.S தில்லைச்சிவம்
**56, Rue Riquet, 75019 Paris. M°: Riquet**
**Tel: 01 40 37 56 69**

Pub.




# ராஜீவ் காந்தி கொலை வழக்கு

## ஐரோப்பாவில் வழக்கறிஞர் துரைசுவாமி

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களுக்கும் பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியதில் இழைக்கப்பட்ட அநீதி பற்றியும், மறுக்கப்பட்ட நீதி பற்றியும் சர்வதேச உலகிற்கும் எடுத்தியம்பும் நோக்குடன் தமிழ் மரண தண்டனைக் கைதிகள் விடுதலைக்கான குழுவின் அழைப்பை ஏற்று வழக்கறிஞர் துரைசுவாமி, ஐரோப்பா வந்துள்ளார்.

பெரியார் திராவிட கழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் துரைசுவாமி இவ்வழக்கில் ஆரம்பகாலம் தொட்டே உழைத்து வருகிறார். இவர் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரில், பத்துப் பேருக்காக வாதாடியவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஏனைய தமிழர்களுக்காக இவரோடு சேர்ந்து வழக்கறிஞர்கள் சந்திரசேகரம், ஜெயசீலன், குணசீலன், தென்னன், இளங்கோ, ராமதாஸ், கோபால கிருஷ்ணன், குணசேகரன் ஆகியோரும் வாதாடினார்கள்.

தற்போது ஐரோப்பா வந்திருக்கும் வழக்கறிஞர் துரைசுவாமி இலண்டன், நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளில் தனது சுற்றுப்பயணத்தினை முடித்துக்கொண்டு, தற்போது ஜேர்மனியில் உள்ளார். இந் நாடுகளின் பல்வேறு இடங்களிலும் தமிழ் மக்களைச் சந்தித்த இவர், இந்த 26 தமிழர்கள் சார்பான நியாயத்தினையும், ஏன் இந்தப் பணியில் தமிழ் மக்கள் இணைய வேண்டும் எனவும் எடுத்து விளக்கினார். இந்தச் சந்திப்புக்களின் பல இடங்களில் வழக்கு நிதிக்கென மக்கள் தங்கள் பங்களிப்புக்களை வழங்கினார்கள்.

இதைவிட, இந்த நாடுகளில் சர்வதேச மன்னிப்புச்சபை, மனிதவுரிமை அமைப்புக்கள், தமிழர் அமைப்புக்கள், சர்வதேச வழக்கறிஞர் சங்கம், மனிதவுரிமைவாதிகள், வெளிநாட்டமைச்சு ஆசியாவுக்கான பிரதிநிதிகள் என பலரைச் சந்தித்து வருகின்றார். இச்சந்திப்புக்களின் போது இந்த 26 தமிழர்களுக்கும் மறுக்கப்பட்ட நீதிபற்றியும், மரண தண்டனை அரசியல் பற்றியும் எடுத்து விளக்கி வருகின்றார்.

இந்த பயணத்தொடரில் கடந்த15ம் திகதி, நோர்வேஜிய பாராளுமன்ற கட்டடத்தில் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் இவர் உரையாற்றினார். பல நோர்வேஜிய — தமிழ் மக்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கில் சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதி Jan Borgen, நோர்வேஜிய கூட்டரசில் இடம்பெற்றுள்ள Venstre கட்சியின் பிரதிநிதி Helene Fladmark ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள். இவர்களின் உரைகளைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசியற் கட்சிப் பிரமுகர்களும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இக்கூட்டத்தில் உரையாற்றிய வழக்கறிஞர் துரைசுவாமி, 'இன்றைய மேன்முறையீட்டிற்காக தேவைப்படும் நிதித்தேவைப்பற்றியும், நியாயமான முறையில் வழக்கு நடாத்தப்பட தேவைப்படும் சர்வதேச அழுத்தம் பற்றியும்' எடுத்துக் கூறினார்.

ஜேர்மனியைத் தொடர்ந்து, இம்மாதம் 23—26ம் திகதிகளில் சுவிஸ் நாட்டிலும், 27—29ம் திகதிகளில் பிரான்ஸ் நாட்டிலும், ஜூன் 30— ஜூலை 3ம் திகதிகளில் மீண்டும் இலண்டன் நகரிலும் தமிழ்மக்களையும், மனிதவுரிமை அமைப்புக்களையும் சந்திக்கவிருக்கிறார்.

**கரம்கொடுங்கள்!**
**தூக்குக்கயிற்றின் முடிச்சினை அவிழ்த்திட**
**கரம்கொடுங்கள்!!**

**ஈழத்தமிழர்களா?**
**இனவுணர்வு கொண்டவரா?**
**ஏனென்று கேட்க யாருண்டு இவர்களுக்கு**
**இவ்வுலகில், போடுங்கள் தூக்கிலென்று**
**இருபத்தாறு தமிழர்களுக்கு ராஜீவ் காந்தி**
**கொலைவழக்கில்**
**எழுதினார்கள் தீர்ப்பொன்று!**

இந்தத் தீர்ப்பினை எதிர்த்து
இன்று மேன்முறையீடு செய்திருக்கும் 26 தமிழர்களின்
வழக்கு நிதிக்கென மதிப்பிடப்பட்டுள்ள
50இலட்சம் இந்திய ரூபாய்களைத் திரட்டிட
நீங்களும் உதவுங்கள்.

உங்கள் மனச்சாட்சியின் ஒவ்வொரு வாசலூடாகவும்
அவர்களை விடுதலை செய்ய உதவுங்கள்.
மேலதிக விபரங்களுக்கும், உங்கள் பங்களிப்பிற்கும்...

**நோர்வே:**
முகவரி: Thamilar Nidhi
Post boks 2941, 5030 Landas, Norway
தொலைபேசி: 47+90669859
வங்கிக் கணக்கு: 5202 05 44805
Tamilar Nidhi
Den Norske Bank

**லண்டன்:**
முகவரி: Postboks 518
Harrow, Ha2, 8xx, UK.
தொலைபேசி: 44+0411947433
44+0181+8646782
வங்கிக் கணக்கு: 70366757
Short Code FNo-209689

**சுவிற்சர்லாந்து:**
முகவரி: Post Boks 187
1950 Sion, Switzerland
தொலைபேசி: 41+027+3466984
41+027+3232062

**ஜேர்மனி:**
தொலைபேசி: 49+0201+7220510

**டென்மார்க்:**
தொலைபேசி: 45+97+224277

**பிரான்ஸ்:**
தொலைபேசி: 33+01+48331390

**ஹொலண்ட்:**
தொலைபேசி:31+786+126107

**ஈழத்தமிழர்களா? இனவுணர்வு கொண்டவரா?**
**ஏன் என்று கேட்க நாம் உண்டு இவர்களுக்கு!**
**ஒன்றாய் எம்தோழருக்கு உயிர்கொடுப்போம்!!**

web:http://www.26lives.org/
e.mail: save@ 26lives.org

# தமிழ் மணித் தலைவர் பட்டத்தேர்வின் முடிவுகள்

உலகத் தமிழ் பண்பாட்டியக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் 1997-ம் ஆண்டு நடாத்திய தமிழ் மணிப்புலவர் பட்டத் தேர்வில் மூவர் சித்தியடைந்துள்ளனர். ஐரோப்பாவிலிருந்த இப்பட்டத் தேர்வுக்கென மொத்தம் 42 தேர்வாளர்கள் பங்குபற்றினர்.

சித்தியடைந்தவர்களில் இருவர் சுவிஸ் நாட்டையும், ஒருவர் ஜேர்மன் நாட்டையும் சேர்ந்தவர்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு:

செல்வி இராசலட்சுமி கார்த்திகேசு (சுவிஸ்), திருமதி. நிர்மலா சிவராசசிங்கம் (சுவிஸ்), திரு. சுப்பிரமணியம் பிரசாந்தன் (ஜேர்மனி)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பா வாழ் தமிழ் மக்களின் நலன் கருதி இத்தேர்வை சென்னை மாணவர் மன்றம், மலேசியா தமிழ் இலக்கிய கழகம் ஆகியவற்றின் உதவியுடன் 1994-ம் ஆண்டிலிருந்து நடாத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. வருடாவருடம் தேர்வாளர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வருகின்றதென மேற்படி ஒன்றியப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


ஐரோப்பிய
தமிழிசைத் தென்றல்
மதுமி வழங்கும்

**மாபெரும்**
**இசை நிகழ்ச்சியுடனான**
**பல்கலை–கதம்ப நிகழ்ச்சி**

எதிர்வரும் ஜூலை மாதம் 4ம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பேர்ண் ரெஸ்ரோரன்ட் மப்பமண்டோ மண்டபத்திலும், ஜூலை 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு சூரிச் Volkhous மண்டபத்திலும் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு:
**031-8596076** (சுவிஸ்)

# முதலாண்டு அஞ்சலி



## அமரர் ஸ்ரீமான் கனகசபை சுப்பிரமணியம்

(முன்னாள் முள்ளியவளை, கொழும்பு கல் பொத்த ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)
(புங்குடுதீவு, வேலணை மேற்கு–06)

ஓடி மறைந்தது ஒரு வருடம்
ஓடாமல் நிற்பதோ உங்கள் நினைவுகள்
அன்பையும் பண்பையும்
எங்களுக்கு விதைத்தவரே,
அல்லும் பகலும்
எங்களுக்காய் உழைத்தவரே
உங்கள் வாழ்வை
எங்களுக்காய் தந்து
எங்கள் உயிர்களோடு
கலந்தவரே
நெஞ்சில் நினைவுகளை
தந்துவிட்டு
நீங்கள் சென்று விட்டீர்கள்!
ஓராண்டு என்ன
நூறாண்டுகள் போனாலும்
எங்கள் நினைவில்
நீங்கள் இருப்பீர்கள்.

தூய மகிழ்ப்பு: 17.09.1918

தூய அவிழ்ப்பு: 04.07.1997

குறிப்பு: எமது தந்தையின் ஓராண்டு நினைவையிட்டு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் மதியம் விசேட பூஜை நடைபெறும். இதில் அனைத்து உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்**
**72, Rue Philippe Girard,**
**75018 Paris.**
**M°: La Chapelle**

இங்ஙனம்
மனைவி சு. ஞானாம்பிகை
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

**K.S.J Asian's**
*Boucherie & Alimentation*
40, Boulevard Ornano, 75018 Paris.
M°: Simplon
Tel: 01 42 58 18 20

Pub

# உலகக்கிண்ண உதைபந்தாட்ட செய்திகள்

உலகக்கிண்ணத்தை கைப்பற்றப்போவது எந்த அணி என்பதை அடையாளம் காணுமுகமாக 8 பிரிவுகளுக்குள் 4 நாடுகள் வீதம் தமக்கிடையில் போட்டிகளில் ஈடுபட்டு வருகின்றன. சென்ற கிழமை நடைபெற்ற இரண்டாவது போட்டிகளில் சில நாடுகளின் தகுதிகள் அறியப்பட்டுள்ளன. இந்த தகுதிகளை அடிப்படையாகக்கொண்டு பிரிவுகளுக்கிடையிலுள்ள நாடுகளின் இறுதி போட்டிகள் தொடங்குகின்றன.

16.06.98 A பிரிவிலுள்ள அணிகள் தமக்கிடையிலான ஆட்டங்களில் களம் கண்டன. பலரது கவனத்தை ஈர்த்துள்ள தற்போதைய உலக சம்பியன் பிரேசில் மொறோக்கோவை மிக இலகுவாக 3:0 என்று வெற்றிகொண்டு A பிரிவில் முதலாவது இடத்தையெடுத்து அடுத்த சுற்றுக்கு விளையாட தகுதிபெறும் முதலாவது அணி என்ற பெருமையையும் அடைகிறது. இவ்வணியில் பல உலகதர வீரர்கள் இருந்தபோதும் ரசிகர்களின் முழுகவனமும் றொனால்டோவின் மேலேயே இருக்கிறது. ரசிகர்களின் எதிர்பார்ப்பை வீணடிக்காதவிதமாக இப்போட்டியில் சிறப்பாகவே விளையாடி முதலாவது கோலையும் போட்டார். இறுதியில் போடப்பட்ட · கோலுக்கான பந்தை மிக கச்சிதமாக முன்னெடுத்துச்சென்று தனது சக வீரன் பெபத்தோ மூலமாக கோலடித்து ஆனந்தம் கொண்டது றொனால்டோ மட்டுமல்ல ரசிகர்களும்தான். இப்பிரிவிலுள்ள ஸ்கொட்லாந்து - நோர்வே அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே தலா ஒரு கோல்போட்டு முடித்துக் கொண்டன. 17.06.98 இல் நடைபெற்ற B பிரிவுப் போட்டிகளில் முன்னாள் உலக சம்பியன் இத்தாலி கமறூனை எதிர்த்து ஆடி மூன்று கோல்களை போட்டது.

இவ் உலகக்கிண்ண போட்டிகளில் இத்தாலி படைக்கும் முதலாவது வெற்றி இதுவாகும். இருந்தபோதும் இப்பிரிவில் முதல் போட்டிகள் யாவும் சமநிலையில் முடிவுற்றதால் இதுவரை இந்தப்பிரிவிலிருந்து தெரிவாகும் நாடுகள் இனம்காணப்படவில்லை. மற்றொரு போட்டியான சிலி, ஆஸ்திரியா அணிகளுக்கிடையிலான போட்டி 1:1 என்று சமநிலையை அடைந்தது.

18.06.98 இல் இவ் உலகக்கிண்ணத்தை நடத்திவரும் பிரான்ஸ் கலந்துகொள்ளும் போட்டியாக இருந்ததால் சற்று வித்தியாசமான விறுவிறுப்பு காணப்பட்டது. சொந்த ரசிகர்களை சந்தோஷத்தில் ஆழ்த்த வேண்டும் என்பது இவ்வணிக்கு, மற்ற அணிகளைவிட கூடிய சுமையாகும். சவுதி அரேபியாவை எதிர்கொண்ட பிரான்ஸ் லாவகமாக பந்தினை குறிதவறாது 4 தடவைகள் கோலாக்கி தங்கள் நாட்டு ரசிகர்களை மகிழ்ச்சிக்கடலில் மூழ்கடித்தனர். ஆனாலும் இம் மகிழ்ச்சியை கொண்டாடும் அளவுக்கு ரசிகர்களின் மனநிலை காணப்படவில்லை ஏனெனில் பிரான்ஸ் அணியின் சுப்பர் ஸ்ரார் சடான் சிவப்பு எச்சரிக்கை மூலம் மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டது மட்டுமன்றி அடுத்த இரு போட்டிகளில் கலந்து கொள்ளவும் முடியாது. மற்றொரு போட்டியான தென்னாபிரிக்கா டென்மார்க் அணிகளுக்கிடையிலான போட்டி 1:1 என்று வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இவ்விரு போட்டிகளும் C பிரிவை சேர்ந்தன.

C பிரிவிலிருந்து அடுத்த சுற்றுக்கு தெரிவாகும் நாடுகளில் ஒன்றாக பிரான்ஸ் முடிவாகி விட்டது.

19.06.98 இல் D பிரிவுப்போட்டிகள் நடைபெற்றன. சென்ற உலகக் கிண்ணபோட்டியில் அப்போதைய சம்பியன் ஜேர்மனியை வெற்றிகொண்டு 4ம் இடத்தை பெற்றுக்கொண்ட பல்கேரியாவை எதிர்கொண்டது ஆபிரிக்க தேசமான நைஜீரியா புதிய யுத்திகளை கையாண்டு புதிய உலக சம்பியனாக அடையாளம் காட்டமுற்படும் இந்த ஆபிரிக்க தேசம் பல்கேரியாவை 1:0 என்று வெற்றிகொண்டது. நைஜீரியாவில் பிரபலமான உலகதரவீரர் என்று எவரையும் குறிப்பிட முடியாவிட்டாலும் அணியில் கூட்டு முயற்சியும் பந்தை கையாளும் நுணுக்கங்களும் மற்ற அணிகளுக்கு பெரிய சங்கடமாகவே இருக்கிறது. இப் பிரிவிலுள்ள அடுத்த போட்டியான, பரக்குவே போதியபோட்டிகோல் அடிக்காத போட்டியாக சமநிலையடைந்தது. D பிரிவில் நைஜீரியா முதலிடத்தைப் பெற்று விட்டது.

20.06.98 மூன்று போட்டிகள் நடைபெற்றன. E பிரிவிலுள்ள பெல்ஜியம் மெக்சிக்கோ அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் பெல்ஜியம் இரு கோல்களை போட்டு முன்னணியில் இருந்தபோதும் ஆட்டத்தின் இறுதியை தமக்கு சாதகமாக்கி இரு கோல்களை மெக்சிக்கோவும் போட்டு சமநிலையில் போட்டியை முடித்துக்கொண்டது. இப்பிரிவிலுள்ள இன்னொரு போட்டியில் நெதர்லாந்து தென்கொரியாவை எவ்வித சிரமமுமின்றி 5 கோல்களை போட்டு வெற்றி கொண்டது.

இதே தினம் நடைபெற்ற H பிரிவுப் போட்டியொன்றில் குரவேசியா ஜப்பானை 1:0 என்று வெற்றிகொண்டது.

21.06.98-ல் மூன்று போட்டிகள் நடைபெற்றன. F பிரிவிலுள்ள முன்னாள் உலக சம்பியன் ஜேர்மனி யூக்கோஸ்லாவியாவை எதிர்கொண்டது. ஆட்ட ஆரம்பத்தை தங்களின் வெற்றிக்கு வழிவகுத்த யூக்கோஸ்லாவிய இரு கோல்களுடன் முன்னணி வகித்தபோதும் ஜேர்மனியர்கள் சோர்ந்துவிடவில்லை. பலமுறை முயற்சித்தும் ஒரு கோலை அடித்தது மட்டுமன்றி எதிரணி மூலமாகவும் ஒரு கோலை பெற்று 2:2 என்று போட்டியை சமப்படுத்தினர். ஜேர்மனியின் நீண்டகால அனுபவவீரர் லொயிற்றர் மத்தியாஸ் இப்போட்டியில் இடையில் கலந்து கொண்டாலும் உலக சாதனை வீரராகவே களம் புகுந்து கொண்டார். இப்பிரிவிலுள்ள இன்னொரு போட்டியில் அமெரிக்காவை தோற்கடித்த வெற்றியை கொண்டாடியது ஈரான், ஈரான் இரு கோல்களையும் அமெரிக்க ஒரு கோலையும் போட்டன.

H பிரிவிலுள்ள இன்னொரு போட்டியான ஆஜென்டீனா, ஜமேக்காபோட்டியில் ஆஜென்டீனாவின்கரம் ஓங்கிக்காணப்பட்டது. ஆஜென்டீனா வீரர் பசிஸ்தூரா (Batistuta) மூன்று கோல்களை அடித்து இறுதியில் 5:0 என்று ஆஜென்டீனா வென்றது. H பிரிவிலிருந்து ஆஜென்டீனாவும், குரவேசியாவும் தெரிவாகின்றன.

**பொன். தாமோதரம்**

## உலகக்கிண்ணப் போட்டியில் ஓர் உலகசாதனை

21.06.98 இல் ஜேர்மனி - யூக்கோசிலாவியா நாடுகளுக்கிடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் ஜேர்மன் வீரர் லெத்தர் மத்தியாசால் (Lothar Matthaeus) புதிய உலகசாதனை ஒன்று படைக்கப்பட்டது. 1982 இலிருந்து 1998 வரையிலான காலப்பகுதியில் 22 போட்டிகளில் கலந்துகொண்டு கூடிய உலகக்கிண்ண போட்டிகளில் பங்கெடுத்த வீரனாக உலகசாதனை படைத்துள்ளார். இதற்கு முன்னர் ஜேர்மனியின் சீலர் (Seeler) போலந்தின் சமுடா (Smuda) ஆர்ஜென்டீனாவின் மரடோனா ஆகிய மூவரும் 21 போட்டிகளில் கலந்துகொண்ட பழைய சாதனையாளர்கள் ஆகிவிட்டனர்.


நடிகர்கள்

சரத்குமார்
ரஞ்சீத்
மன்சூர் அலிகான்
விஜயகுமார்
சிம்ரான்
சித்தாரா




நாட்டாமை வெற்றிப் படத்துக்குப்பின் ரவிக்குமார் சுப்பஸ்ரார் சரத்குமார் இணைந்து வழங்கும் வெற்றிச்சித்திரம்.

வெள்ளி, சனி
ESPACE CINEMA
AUBERVILLIERS QUATRE CHEMINS
M° : QUATRE CHEMINS
காலம் : 26.06.98 மாலை 8.15
27.06.98 மாலை 6.15 - 9.15

ஞாயிறு, திங்கள்
LE TRIANON
80 Bd ROCHECHOUART
75018 PARIS. (M°: ANVERS)
காலம் : 28.06.98 மாலை 6.15 - 9.15
29.06.98 மாலை 8.15

24 மணி நேர தொடர்புகளுக்கு — 01 48 34 11 59

Pub

# கந்தரின் கண்டுபிடிப்பு

அம்மையாரின் அருள் பெற்ற கதிர்காமக் கந்தர் அண்மையில் அவுஸ்திரேலிய திக் விஜயம் மேற்கொண்ட போது மாபெரும் புதிய கண்டுபிடிப்பு ஒன்றைக் கண்டுபிடித்து திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட சரோஜினி யோகேஸ்வரனைக் கொல்வதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிக் குண்டு வெளிநாடுகளில் உள்ள தமிழர்களும் உதவி அமைப்புகளும் கொடுத்த பணத்தில் வாங்கப்பட்டவை. இப்படி வெளிநாடுகளில் இருந்து கொடுத்த பணத்தை வைத்துத்தான் புலிகள் ஆயுதம் வாங்குகிறார்கள் என்பதே கந்தரின் கண்டுபிடிப்பு.

ஆகா! எவ்வளவு அருமையான திறமையான கண்டுபிடிப்பு. 'கின்னஸ்' கமிட்டியுள் தொடர்புடைய யாராவது இருந்தால் தயவு செய்து 'கந்தருக்கு' சிபார்சு செய்யுங்கள்.

திருமதி யோகேஸ்வரன் கொலைக்கு யாரும் உரிமை கோரவில்லை. ஆனால் கந்தர் அதை புலிகள்தான் செய்தார்கள். அதுவும் வெளிநாட்டிலிருந்து வந்த பணத்தில் வாங்கிய துப்பாக்கிக் குண்டின் மூலம்தான் அவரைக் கொலைசெய்தார்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்.

'துப்பறியும் மன்னன்' என்று அவருக்கு பட்டம் கொடுத்து ஸ்கொட்லன்ட் யார்ட்டுக்கோ அமெரிக்க FBI க்கோ அவரை துப்பறியும் நிபுணராக வேலைக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று புகலிடத் தமிழரெல்லாம் சிபார்சு செய்யலாமென்றால் - கந்தர் இன்னும் பல விசயங்களைக் கண்டுபிடித்து பதில் சொல்ல வேண்டியிருக்கு கண்டியளோ!!

நவாலி சென் பீட்டர்ஸ் தேவாலயத்திலை போட்ட குண்டு, எந்தக் காசிலை வாங்கினது; நாகர்கோயில் பள்ளிக்கூடத்தில போட்ட குண்டு எந்தக் காசிலை வாங்கினது; கோணேஸ்வரியை சிதறடிச்ச கைக்குண்டு எந்தக் காசில வாங்கினது; மாங்குளத்தில முல்லைத்தீவில - கிளிநொச்சியில போட்ட - போட்டுக் கொண்டிருக்கிற குண்டுகள் எந்தக் காசில வாங்கினது என்பதையெல்லாம் அவர் கண்டுபிடிக்க வேண்டியிருக்கு! அம்பாறை சென்றல் காம்

## நடைபாதை குறிப்புக்கள்

பில படுகொலை செய்யப்பட்டவர்கள் - திருகோணமலை, மூதூர் பகுதிகளில படுகொலை செய்யப்பட்டவர்கள் எல்லாம் எந்தக் காசில வாங்கின துப்பாக்கிக் குண்டுகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதையெல்லாம் அவர் கண்டு பிடிக்க வேண்டும்.

இதைவிட யாழ்ப்பாணத்திலையும் மட்டக்களப்பிலயும் கந்தர் அங்கம் வகிக்கிற அரசாங்கத்தின்ரை படைகளால கூட்டிச்செல்லப்பட்ட ஏராளமான தமிழர்கள் காணாமல் போயிட்டினம். அவைக்கு என்னாச்செண்டு தினம் தினம் அவையின்ரை அம்மா அப்பாமாரும் மனைவிமாரும் பிள்ளைகளும் - கண்ணீர்விட்டுக் கதறிக்கொண்டு இருக்கினம். அவையளை கடத்திக்கொண்டு போறதுக்குரிய அதிகாரத்தை - படையினருக்கு வழங்குறதுக்கு எந்தப்பணம் உதவினது எண்டதையும் கந்தர் கண்டுபிடிச்சார் எண்டால் அவருக்கு நாங்கள் சிபார்சு செய்யலாம்.

# சித்திரகுப்தனார் பதில்கள்

மு. சந்திரபாலன் பேர்ண் - சுவிஸ்

- போராட்டத்தின் ஆதரவாளர்கள் என்று வேசம் போட்டுக் கொண்டு அதை தங்கள் சொந்த இலாபத்துக்காக பயன் படுத்துபவர்களை எப்படி அழைக்கலாம் குப்தனாரே?
- துரோகசிகா மணிகள் என்று அழைக்கலாம்.

க. மகேந்திரன் பாரிஸ் - 10

- எனக்கு அவசரமாக 50 ஆயிரம் பிராங் பணம் தேவைப்படுகின்றது. அதை திரட்டுவதற்கு சுலவமான வழி ஒன்று கூறுவீரா குப்தனாரே?
- இப்போது ஊர் பாணியில் பாரிஸ் நகரத்தில் -'பணவரவு' கொண்டாட்டங்கள் வைப்பது ஆரம்பமாகியிருப்பதை நீர் அறியவில்லைப்போலும்!

ப. ரஞ்சினி சென்-ஜேர்மனி

- உண்மை நண்பனை எப்படி அறிந்து கொள்ளலாம்?
- நெருக்கடியான நேரத்தில் தோள் கொடுப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். தோள் கொடுப்பான் தோழன் என்பது பழமொழி.

சி. பிரதீபன், சூரிச்- சுவிஸ்

- வெல்ல முடியாத போரை நடாத்துவதில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு என்ன இலாபம்?
- அரசாங்கத்திலும் இராணுவத்திலுமுள்ள தனிப்பட்ட சிலரின் வங்கிக் கணக்குகள் டொலர்களால் நிறைவது இலாபந்தானே.

க. வில்வராஜா - ஹொப்பன்காபன், டென்மார்க்

- 2000—ம் ஆண்டில் உலகம் அழியப் போகின்றதாமே உண்மையா?
- உலகம் ஏற்கனவே தினசரி கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டுதானே இருக்கிறது. அது முற்றாக அழிவதற்கு இன்னும் நிறைய...ய ஆண்டுகள் இருக்கின்றன. கவலைப்பட வேண்டாம்.

ம.சிவபாலன் - 75020 பாரிஸ், பிரான்ஸ்

- 1998-ம் ஆண்டின் தலை சிறந்த நகைச்சுவை என்ன குப்தனாரே?
- எமது தேசியத் தலைவர் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரப் போகிறார் என்றும் அவரை நோர்வே ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் கூறி புத்த பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தது


ஆரம்பமாகிவிட்டது

சுவிசில்

GNANAM

Telecom Centers




| | | | |
|---|---|---|---|
| சிறீலங்கா | – 30Mn | இங்கிலாந்து | – 100Mn |
| பாகிஸ்தான் | – 28Mn | ஜேர்மனி | – 75Mn |
| இந்தியா | – 30Mn | அவுஸ்திரேலியா | – 45Mn |
| கனடா | – 100Mn | சிங்கப்பூர் | – 75Mn |
| அமெரிக்கா | – 100Mn | பிரான்ஸ் | – 45Mn |
| இத்தாலி | – 70Mn | | |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது சுவிசில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

GNANAM Telecom Centers

Militär Str-84, 8004 Zürich, Switzerland

Tel: 012420152 - Fax: 012420153

Mobil: 0794142867

(மேலதிக விபரங்களுக்கு 30-ம் பக்கம்)

Pub

# உலகக்கிண்ணம்-1998: புள்ளிவிபரங்கள்

## குழு A

**10.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| பிறேசில் | 2 |
| ஸ்கொட்லாந்து | 1 |
| மொறக்கோ | 2 |
| நோர்வே | 2 |

**16.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| பிறேசில் | 3 |
| மொறோக்கோ | 0 |

9வது நிமிடம் றொனால்டோ
4வது நிமிடம் றிவல்டோ
50வது நிமிடம் வெவற்தோ

மஞ்சள் அட்டை எச்சரிக்கை:

**பிறேசில்**
செசார் சம்பையோ
யூனியர் வையானோ

**ஸ்கொட்லாந்து**
டியூறி, ஜக்சன்

**மொறோக்கோ**
கடா, ஷிபா

**நோர்வே**
றெக்டல், வேர்க்

அடுத்த போட்டிக்கு விளையாடும் தகுதியை இழந்தவர்கள்:

**பிறேசில்**
செசார் சம்பையோ

**மொறோக்கோ**
ஷிபா

## குழு B

**11.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| இத்தாலி | 2 |
| சிலி | 2 |
| கமறூன் | 1 |
| ஒஸ்ரியா | 1 |

**17.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| இத்தாலி | 3 |
| கமறூன் | 0 |

8வது நிமிடம் டி வியாயியோ
75, 89வது நிமிடம் வியாரி

| | |
|---|---|
| சிலி | 1 |
| ஒஸ்ரியா | 1 |

70வது நிமிடம் சலாஸ்
90வது நிமிடம் வஸ்ரிக்

மஞ்சள் அட்டை எச்சரிக்கை

**சிலி**
சமருயனோ, சலாஸ், விலறோல், எஸ்ரே

**இத்தாலி**
கொஸ்ரகுந்தா, டி வியாயியோ

**கமறூன்**
வோம், சொங், நியங்கா -

**ஒஸ்ரியா**
சொலெல்

சிவப்பு அட்டை தண்டனை:

**கமறூன்**
கல்லா (Kalla)

## குழு C

**12.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| பிரான்ஸ் | 3 |
| தென்ஆபிரிக்கா | 0 |
| டென்மார்க் | 1 |
| சவுதிஅரேபியா | 0 |

**18.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| பிரான்ஸ் | 4 |
| சவுதிஅரேபியா | 0 |

கோல்: 36வது நிமிடம் கொறி
68வது நிமிடம் திறஸ்சகே
77வது நிமிடம் கொறி
84வது நிமிடம் லிசரசு

| நாடு | கோல் |
|---|---|
| டென்மார்க் | 1 |
| தென்ஆபிரிக்கா | 1 |

கோல்: 13வது நிமிடம் நெயில்சன்
52வது நிமிடம் மைக்கத்தி

மஞ்சள் அட்டை எச்சரிக்கை:

**பிரான்ஸ்**
வுலோன், லிசரசு -

**சவுதிஅரேபியா**
அல்ஜகானி, அல்ஜவர்

**தென்ஆபிரிக்கா**
நியத்தி, இசா,பிறி, றடெவ்

**டென்மார்க்**
ஷியொன்வேர்ஜ், கொக், சிமெசல்

சிவப்பு அட்டை தண்டனை

**டென்மார்க்**
மொல்னார், வெய்கோஸ்ற்

**தென்ஆபிரிக்கா**
பிறி

**பிரான்ஸ்**
சிடான்

**சவுதிஅரேபியா**
அல்கலேயு

## குழு D

**12.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| பரகுவே | 0 |
| பல்கோரி | 0 |

**13.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| நைஜீரியா | 3 |
| ஸ்பெயின் | 2 |

**19.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| நைஜீரியா | 1 |
| பல்கேரி | 0 |

கோல்: 27வது நிமிடம் இக்வேவா

| நாடு | கோல் |
|---|---|
| ஸ்பெயின் | 0 |
| பரகுவே | 0 |

மஞ்சள் அட்டை எச்சரிக்கை:

**பல்கேரி**
இலெவ், கிச்சிசெவ்

**நைஜீரியா**
ஒகோசா, இக்வேவா, அடெபவு, ஒகேசுகியு

**பரகுவே**
ஆஸ், அயலா

**ஸ்பெயின்**
சேர்ஜி, கிகோ

## குழு E

**13.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| மெக்சிக்கோ | 3 |
| தென்கொரியா | 1 |
| நெதர்லாந்து | 0 |
| பெல்ஜியம் | 0 |

**20.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| பெல்ஜியம் | 2 |
| மெக்சிக்கோ | 2 |

கோல்: 43வது நிமிடம் வில்மொற்
56வது நிமிடம் கார்சியா
48வது நிமி. வில்மொற்
62வது நிமி. விலங்கோ

| நாடு | கோல் |
|---|---|
| நெதர்லாந்து | 5 |
| தென்கொரியா | 0 |

கோல்: 37வது நிமிடம் கொகு
42வது ஓவர்மார்ஸ்
71வது வேகம்ப்
79வது வன்கூஜ்டொங்
83வது டுவோர்

மஞ்சள் அட்டை எச்சரிக்கை:

**பெல்ஜியம்**
விடோனிக்

**மெக்சிக்கோ**
விலங்கோ, றமிறெஸ்

**தென்கொரியா**
யுங் சு, கோ

சிவப்பு அட்டைத் தண்டனை

**பெல்ஜியம்**
வேர்தெயன்

**மெக்சிக்கோ**
பார்டோ

## குழு F

**14.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| யூகோசிலாவியா | 1 |
| ஈரான் | 0 |

**15.06.1998**

| | |
|---|---|
| ஜேர்மனி | 2 |
| ஐக்கிய அமெரிக்கா | 0 |

**21.06.1998**

| | |
|---|---|
| ஜேர்மனி | 2 |
| யூகோசிலாவியா | 2 |

கோல் 74வது நிமி மிகச் லோவிக்
80வது நிமி வியத்தோப்
13வது நிமி ஸ்ரன்கோவிக்
54வது நி. ஸ்ரொஜ்கோவிக்

| நாடு | கோல் |
|---|---|
| ஈரான் | 2 |
| ஐக்கிய அமெரிக்கா | 1 |

கோல் 41வது நிமிடம் ஸ்ரிலி
87வது நிமிடம் மைக்விறிட்
63வது மகிடவிக்கியா

மஞ்சள் அட்டை எச்சரிக்கை

**ஜேர்மனி**
மத்தாயுஸ்

**ஐக்கிய அமெரிக்கா**
றெயிஸ்

**ஈரான்**
மினவன்ட், ஷறிஞ்சேஸ்-

## குழு H

**14.06.1998**

| நாடு | கோல் |
|---|---|
| ஜப்பான் | 0 |
| ஆர்ஜன்ரீனா | 1 |
| குறோசியா | 3 |
| ஜமேய்க் | 1 |

**20.06.1998**

| | |
|---|---|
| குறோசியா | 1 |
| ஜப்பான் | 0 |

கோல்: 77வது நிமிடம் சுக்கர்

**21.06.1998**

| | |
|---|---|
| ஆர்ஜன்ரீனா | 5 |
| ஜமேய்க் | 0 |

கோல் 31வது நிமிடம் ஓர்ரேகா
55வது நிமிடம் ஓர்ரேகா
73வது நிமி. வற்றிஸ்ருற்றா
78வது நிமி. வற்றிஸ்ருற்றா
83வது நிமி. வற்றிஸ்ருற்றா

மஞ்சள் அட்டை எச்சரிக்கை

**ஜமேய்க்**
பவல், கார்கில்

**ஆர்ஜன்ரீனா**
சமொற்

**குறோசியா**
ஸ்ரனிக், புறொசினிஸ்கி

**ஜப்பான்**
நனமி, நகனிசி, அகிற்றா

சிவப்பு அட்டைத் தண்டனை

**ஜமேய்க்** – கார்கி

## பதிவிற்கான செய்திகள்

### 1600வது கோல்

கடந்த 12.06.1998 அன்று தென்ஆபிரிக்க அணிக்கு எதிராக பிரான்ஸ் அணி சார்பில் கொறியினால் 91வது நிமிடம் அடிக்கப்பட்ட கோல் உலகக் கிண்ணப் போட்டித்தொடரில் 1600வது கோல் என்ற பெருமைக்குரியதாகும்.

13.07.1930 அன்று உருகுவேயில் நடைபெற்ற முதலாவது உலகக் கிண்ணப்போட்டியில் மெக்சிக்கோ இற்கு எதிரான ஆட்டத்தில் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதன் மூலம் முதலாவது கோலை அடித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூசியின் லோறன்(Lucien Laurent) முதற் சாதனையாளர் ஆவார். அதனைத்தொடர்ந்து 1970ம் ஆண்டு மெக்சிக்கோ வில் நடைபெற்ற ஒன்பதாவது உலகக்கிண்ணப்போட்டியில் 800வது கோலை முல்லர் (Muller) என்பவரும், 1974ம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்ற பத்தாவது உலகக்கிண்ணப்போட்டியில் யஷல்ட்(Yazalde) என்பவர் 900வது கோலையும், 1978 மெக்சிக்கோவில் நடைபெற்ற போட்டியில் றென்சென்விறிங் (Rensenbrink) என்பவர் 1000வது கோலையும், 1986இல் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஜோன் பியர் பப்பன் (Jean pierre papin) 1200வது கோலையும், இங்கிலாந்தைச் சேர்ந்த கறி லினகார் (Garry Lineker) 1300வது கோலையும், ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த கனீயியா (Caniggia) 1500வது கோலையும் அடித்துள்ளனர்.

### இத்தாலி 100வது கோல்

கடந்த 17.06.1998 அன்று கமறூனுக்கு எதிரான ஆட்டத்தில் டி வியாயியோ அடித்த கோல் இத்தாலியின் உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட வரலாற்றில் 100வது கோல் ஆகும்.

1934ம் ஆண்டு தமது நாட்டில் நடைபெற்ற இரண்டாவது உலகக்கிண்ணப்போட்டியில் ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான போட்டியில் 7-1 என்ற கோல் நிலையில் முதல் கோலைப்பெற்ற இவர்கள் 64ஆண்டுகளின் பின்னர்தமது 100வது கோலினையும் பெற்றுள்ளனர். இது இவர்களின் 14வது உலகக்கிண்ணப்போட்டி ஆகும்.

## தலா இரண்டு ஆட்டங்களின் பின்னர் அணிகளின் நிலை

| நாடு | ஆ | வெ | ச.நி | தோ | அ.கோ | பெ.கோ | வி | புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|
| **குழு A** | | | | | | | | |
| பிறேசில் | 2 | 2 | - | - | 5 | 1 | +4 | 6 |
| நோர்வே | 2 | - | 2 | - | 3 | 3 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 2 | - | 1 | 1 | 2 | 3 | -1 | 1 |
| மொறக்கோ | 2 | - | 1 | 1 | 2 | 5 | -3 | 1 |
| **குழு B** | | | | | | | | |
| இத்தாலி | 2 | 1 | 1 | - | 5 | 2 | +3 | 4 |
| சிலி | 2 | - | 2 | - | 3 | 3 | 0 | 2 |
| ஒஸ்ரியா | 2 | - | 2 | - | 2 | 2 | 0 | 2 |
| கமறூன் | 2 | - | 1 | - | 1 | 4 | -3 | 1 |
| **குழு C** | | | | | | | | |
| பிரான்ஸ் | 2 | 2 | - | - | 7 | 0 | +7 | 6 |
| டென்மார்க் | 2 | 1 | 1 | - | 2 | 1 | 1 | 4 |
| தென்ஆபிரிக்கா | 2 | - | 1 | 1 | 1 | 4 | -3 | 1 |
| சவுதிஅரேபியா | 2 | - | - | 2 | 0 | 5 | -5 | 0 |
| **குழு D** | | | | | | | | |
| நைஜீரியா | 2 | 2 | - | - | 4 | 2 | +2 | 6 |
| பரகுவே | 2 | - | 2 | - | 0 | 0 | 0 | 2 |
| ஸ்பெயின் | 2 | - | 1 | - | 2 | 3 | -1 | 1 |
| பல்கேரி | 2 | - | 1 | 1 | - | 1 | -1 | 1 |
| **குழு E** | | | | | | | | |
| நெதர்லாந்து | 2 | 1 | 1 | - | 5 | 0 | +5 | 4 |
| மெக்சிக்கோ | 2 | 1 | 1 | - | 5 | 3 | +2 | 4 |
| பெல்ஜியம் | 2 | - | 2 | - | 2 | 2 | 0 | 2 |
| தென்கொரியா | 2 | - | - | 2 | 1 | 8 | -7 | 0 |
| **குழு F** | | | | | | | | |
| ஜேர்மனி | 2 | 1 | 1 | - | 4 | 2 | +2 | 4 |
| யூகோசிலாவி | 2 | 1 | 1 | - | 3 | 2 | +1 | 4 |
| ஈரான் | 2 | 1 | - | 1 | 2 | 2 | 0 | 3 |
| ஐக்கிய அமெரிக்கா | 2 | - | - | 2 | 1 | 4 | -3 | 0 |
| **குழு H** | | | | | | | | |
| ஆர்ஜன்ரீனா | 2 | 2 | - | - | 6 | 0 | +6 | 6 |
| குறோசியா | 2 | 2 | - | - | 4 | 1 | +3 | 6 |
| ஜப்பான் | 2 | - | - | 2 | - | 2 | -2 | 0 |
| ஜமேய்க் | 2 | - | - | 2 | 1 | 8 | -7 | 0 |

**ஆ**-ஆட்டங்கள், **வெ** - வெற்றிபெற்றவை, **ச.நி** - சமநிலை, **தோ**- தோல்வி, **அ.கோ**- அடித்தகோல்கள், **பெ.கோ**- பெற்றகோல்கள் (எதிரணியிடமிருந்து), **வி**- வித்தியாசம்

**குறிப்பு:** ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெறும் அணிக்கு மூன்று புள்ளிகளும், சமநிலை பெறும் அணிக்கு ஒரு புள்ளியும் வழங்கப்படும்.(குழு நிலையாட்டத்தின் போது மட்டும்)

தொகுப்பு: ஜே.ஜே

# நினைவஞ்சலி



## மேஜர் தாகூர் – அழகன்

**உத்தமசீலன்**

*(வல்வெட்டித்துறை)*

மலர்வு:
27.06.1972

உதிர்வு:
29.06.1993

பூவுக்குள் மலர்ந்த புது மனிதா
புன்னகை பூத்தாய் புது உலகில்
சிங்கத்தின் ஆதிக்கம் சிறகடிக்க
சீறிட்டுப் பாய்ந்தாய் – வெம் புலியாய்
மணலாறு மண்ணில் மரணிக்க நேர்ந்தும்
தப்பித்துக் கொண்டாய் தாயகம் காக்க
கட்டைக்காட்டிலே கொட்டும் மழையென
வீழ்ந்த செல்லிலும் தேரென நின்றாய்
தேசத்தைக் காத்திட
பூநகரியிலே புது யுத்தம் பிறந்தது
ஆதிக்க வெறியரின் அட்டகாசம்
தொடர்ந்தது விடுவானா தமிழன்
வேங்கையென பாய்ந்தாய்
தொடுவானம் உன்னை தொட்டணைத்துக்கொண்டதே.

---

*வண்ண சோலையிலே*
*சின்ன சிட்டு வாழ்ந்ததுங்க*
*அது சொர்க்கம் தேடி. நம்மை*
*விட்டு போனதுங்க.*
*கூட்டி சென்றதாரு குண்டு மணி தேரை.*
*ஆடி போச்சு. அம்மா அன்பு கொண்ட நெஞ்சம்*
*வண்ண சோலையிலே*
*மாலையிட்டு மஞ்சள் நிலா வாழ முன்னாலே*
*காரிருள்தான் கவ்விக்கொண்டு போனதுங்க.*
*கேட்டதெல்லாம் வாங்கி தந்தோம். என்ன–இல்லை என்று*
*சென்றாய்*
*கானக் குயில் பேச்சழகி கண்ணுக்குள்ளே இருந்தாயே.*
*பால் வடியும் முக அழகை பார்க்க கூடமுடியவில்லை*
*காலமெல்லாம் கலங்க விட்டு கருக்கலுக்குள் மறைந்தாயே.*
*வண்ண கிளி திரும்பி வராதோ!*
*காரிருள் கலைந்து செல்லாதோ.*
*வண்ணச் சோலையிலே*
*சின்னக் காலெடுத்து நீ நடந்த காலம்...*
*அம்மாடி கண்ணுக்குள்ளே நிக்குதடி கலக்கமுண்டாக்கி!*
*தூண்டிலிலே மீன் போல எங்களைத்தான் துடிக்கவிட்டு*
*சோலைக்குயில் பறந்தாயே...*
*நீண்ட தூரம் நீ தானே! வண்ணக் கிளி திரும்பி வராதோ.*
*காரிருள் கலைந்து செல்லாதோ.*
*வண்ண சோலையிலே சின்ன சிட்டு வாழ்ந்ததுங்க*
*அது சொர்க்கம் தேடி. நம்மைவிட்டு போனதுங்க.*



## நாகலோசினி மார்க்கண்டு

**மதனி**

*(வல்வெட்டித்துறை)*

மலர்வு:
21.07.1985

உதிர்வு:
22.09.1995

தகவல்: உத்தமன்
*சூரிச், சுவிஸ்.*

# கலைந்த சொற்கள் எண்: 9

கீழே உள்ளவற்றில் சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர்கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப் பக்கம் இருக்கும். இச் சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல் | டி | கு | றி | ப் | பு | உ | ம் | ச | ன் | ப | ல் | ம |
| ம் | த | கை | ம | த் | ம் | க | ர | க | தே | த | ம் | சா |
| ம | ச | ரே | தி | ல் | ங் | ச | ம | ல் | த் | ம | ர | டு |
| ம | க | ர | மா | த | ம் | ம | மா | த | லை | ம் | பீ | ண் |
| பு | ன் | க | த | ந் | சு | ட் | ம | த் | ம | ள | ம் | கு |
| நீ | ப் | ம | ண் | பா | ண் | ட | ம் | ர் | ல் | த | க | க் |
| ம | ள | டி | வ | ம் | ச | ம் | ம | த | த் | த் | ப் | கை |
| ம | ட் | ம் | வ | ம | ம | வை | து | ம | ரு | ம | த | பு |
| வ | ர | ட | ம | ணி | ப | த் | தி | ர | ன் | க | ப் | ப் |
| ம | ண் | க | ப் | தீ | டு | த | ல் | த | த் | ண | ம | தா |
| தா | ய | பு | த | ப | ம் | ல் | ம | ன் | ம | ச | ந் | த் |
| ள் | றா | க் | ப் | ம் | ல | கோ | க் | ண | ம | த | தா | ம |
| ச | க | டு | க | ப | கோ | கை | வ | த் | வ | ங் | கு | வு |
| ஞ் | ட் | க் | ன் | ம் | க் | றை | த | ம் | கு | கை | கை | ர |
| ம | தூ | மி | ம | க | மா | ன் | ப | ம் | க | க் | ர் | வ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மணத்தல் | மணப்பு | மகருதம் | மரகதம் | மகரரேகை | மகரமாதம் | மங்கை |
| மதத்தல்* | மர்மம் | மதிதம்* | மதமதப்பு | மத்தாப்பு | மத்தளம் | மலைத்தேன் |
| மத்தம்* | மயக்கம் | மதர்த்தல்* | மணிப்புறா | மணிதீபம் | மணிபத்திரன் | உரல் |
| குறிப்பு | வரவு | கம்பம் | வடிப்பு | நீளம் | கம்பீரம் | கம்பன் |
| மட்டம்வைத்தல் | மாக்கோலம் | மாமரம் | வர்க்கம் | பதமம்* | பாதரசம் | தூக்கம் |
| மண்பாண்டம் | பாந்தல்* | புத்திரன் | சமத்தன்* | சதங்கை | சுபாவம் | தங்கம் |
| மணக்கோலம் | தாண்டவம் | தாந்தவம் | மரதன் | வம்சம் | சரசம் | கரகம் |
| மணவறை | தாங்கும் | குடில் | மஞ்சள் | மக்கள் | வட்டி | மதகு |
| மட்டுப்படுத்துதல் | சாரம் | மரம் | புகைக்குண்டு | மட்டப்பலகை | | |

*சொல்விளக்கம்.

மதத்தல் - கொழுத்தல் / மத்தம் - எருமைக்கடா / பாந்தல் - பதுங்கல் / மதிதம் - மோர் / மதர்த்தல் -களித்தல் / சமத்தன் - வல்லவன் / பதமம் - சந்திரன்

பெயர்: ..........................

முகவரி: ..........................

..........................

..........................

பிறந்த திகதி: ..........................

சந்தாதாரராயின் சந்தா இல: ..........................

கலைந்த சொற்கள் எண்–9 இற்கான
விடைகள் வந்து சேரவேண்டிய
கடைசி நாள்: 03.07.98
*(போட்டோ பிரதிகள்
ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

கலைந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

இந்த கலைந்த சொற்கள் எண்-9 இற்கான சரியான விடையும்,
கலைந்த சொற்கள் எண்–10 உம், 09 - 15 ஜூலை 98
ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**


## கலைந்த சொற்கள் எண் - 8 விடைகள்

ஏராளமான வாசகர்கள் போட்டியில் தரப்பட்ட சொற்களின் எதிர் பொருட் சொற்களைக் கண்டு பிடித்து எழுதியிருக்கின்றார்கள். ஆனால் அவர்களால் சரியான பழமொழியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பிரான்ஸ், கிளிச்சியைச் சேர்ந்த ஜமுனா ரமேஷ் பழமொழியை கண்டு பிடித்திருக்கின்றார். ஆனால் எதிர்பொருள் கண்டு பிடிப்பதில் சிறுதவறு விட்டுவிட்டார். ஆகையால் இம்முறை எவரையும் பரிசுக்குரியவர்களாக தேர்ந்தெடுக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். அன்பான வாசகர்களே! இந்தப் போட்டி உங்களின் மொழி அறிவை வளர்ப்பதற்குரியது. பரிசு கிடைக்காவிட்டாலும் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். *- ஆர்*

| | | | |
|---|---|---|---|
| ஆக்கல் | அழித்தல் | தீமை | நன்மை |
| இணக்கம் | பிணக்கம் | உருவம் | அருவம் |
| இறப்பு | பிறப்பு | நெடுக்கு | குறுக்கு |
| நியமம் | அநியமம் | ஈரம் | வரட்சி |
| இரவு | பகல் | மாலை | காலை |
| தீயார் | நல்லார் | நள்ளிரவு | நண்பகல் |
| தாமதம் | துரிதம் | முதுமை | இளமை |
| இளமை | முதுமை | குவிவு | குழிவு |
| மடமை | புலமை | உதயம் | அத்தமனம் |
| அந்தம் | ஆதி | ஆரோகணம் | அவரோகணம் |
| பகைவன் | நண்பன் | அருவம் | உருவம் |
| நேயம் | பகை | மெல்லினம் | வல்லினம் |
| பரம் | இகம் | வையகம் | வானகம் |
| உபகாரம் | அபகாரம் | நிசத்தம் | சத்தம் |
| நீதி | அநீதி | இசை | வசை |
| புலமை | மடமை | சொர்க்கம் | நரகம் |
| சேய்மை | அண்மை | தட்பம் | வெப்பம் |
| அறம் | மறம் | ஆரம்பம் | முடிவு |
| ஆத்திகன் | நாத்திகன் | மறதி | நினைவு |
| வாசனை | நாற்றம் | ஒளிர்தல் | மங்குதல் |
| அமைதி | குழப்பம் | அன்பு | வன்பு |
| இல்லறம் | துறவறம் | ஒருமை | பன்மை |
| கொடுக்கல் | வாங்கல் | குற்றம் | குணம் |
| நகல் | அசல் | அபக்குவம் | பக்குவம் |
| கனவு | நனவு | பரகசியம் | இரகசியம் |
| மறுமை | இம்மை | கோழை | வீரன் |
| வைதல் | வாழ்த்து | | |

*பழமொழி*:

**சருகைக் கண்டு தணல் அஞ்சுமா**



அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை முன்பாக)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

உங்கள் வியாபார நிலையங்களுக்கு கலர் Visiting Cards மிக குறைந்த விலையில்

**திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணிவரை**
60, Rue Louis Blanc, 75010 Paris - **Tel & Fax: 01 42 09 60 64**

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**20 Rue Labat, 75018 Paris**
**M°: Marcadet Poissonniers**

குறைந்த விலையில் உங்கள் அனைத்து கணினித் தேவைகளுக்கும்....

**VPI Multimedia**
**Conseil et Service**
Tel: 0160790607 / 0660404351

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

(இதில் குறிப்பிட்டிருக்கும் நிமிடங்கள் உண்மையானவை)

| | |
|---|---|
| இந்தியா | 42 நிமிடம் |
| கனடா | 120 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 62 நிமிடம் |
| பிரான்ஸ் | 200 நிமிடம் |
| இலங்கை | 45 நிமிடம் |
| சுவிஸ் | 100 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |
| துனிசியா | 65 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 120 நிமிடம் |
| அமெரிக்கா | 120 நிமிடம் |
| ஜேர்மனி | 100 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 40 நிமிடம் |
| அல்ஜீரியா | 65 நிமிடம் |
| மொரோக் | 65 நிமிடம் |
| பெல்ஜியம் | 100 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) 80 நிமிடம் | |




45




இந்தியா
42 நிமிடம்

பிரான்ஸ் 200 நிமிடங்கள்
(மாலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்

## GNANAM Telecom Center

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.**

**Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14**

**M°: La Chapelle / Gare du Nord**

**UK**

**Gnanam Telecom Centers**

180 High Street North
East Ham
London E6
U.K.

**Switzerland**

**Gnanam Telecom Centers**

Militär Str-84, 8004 Zürich,
Switzerland
Tel: 012420152 - Fax: 012420153
Mobil: 0794142867

**Germany**

**Gnanam Telecom Centers**

Taunusstrasse 52-60,
60329 Frankfurt, Germany.
Mobil: 0171 - 6506679
0172 - 2078068

வெகுவிரைவில் பெல்ஜியம், நெதர்லாந்தில் எமது சேவை ஆரம்பமாகின்றது

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.56 | 1.67 | 0.17 | 0.67 |
| பிராங்பேட் | 1.79 | – | 2.99 | 0.30 | 1.19 |
| லண்டன் | 0.60 | 0.33 | – | 0.09 | 0.40 |
| பாரிஸ் | 5.98 | 3.35 | 10.02 | – | 3.99 |
| சூரிச் | 1.50 | 0.88 | 2.50 | 0.25 | – |
| பம்பாய் | 42.20 | 23.56 | 70.34 | 7.05 | 28.16 |
| கொழும்பு | 64.79 | 36.17 | 108.00 | 10.83 | 43.23 |

# மாண்டவர் மீண்டார்

கடந்த 05.06.98 அன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலை அடுத்து, றம்புக்கண பகுதியிலுள்ள உடகம கிராமத்திலுள்ள ஒரு வீட்டுக்கு சென்ற றம்புக்கண பொலிசார் வசந்த திஸநாயக்கா என்ற உங்கள் மகன் சண்டையில் இறந்துவிட்டார். அவரது சடலத்தை இராணுவ அதிகாரிகள் உங்களிடம் கொண்டு வந்து ஒப்படைப்பார்கள் என்று கூறி விட்டுச் சென்றனர்.


இறந்ததாகச் சொல்லப்பட்ட 'வசந்த'வின் பெற்றோரும், சகோதரிகளும் கதறி அழுதனர். ஊரெங்கும் வெள்ளைக் கொடிகளும் தோரணங்களும் கட்டப்பட்டன. அன்று மாலை இராணுவ ஜீப் ஒன்று திறக்க முடியாதபடி இறுக மூடிய சவப் பெட்டியை அந்த வீட்டாரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றது. கடைசி நேரத்தில் கூட தங்கள் மகனின்-சகோதரனின் முகத்தை பார்க்க முடியவில்லையே என பெற்றோரும் சகோதரிகளும் கதறி அழுதனர்.

அன்றிரவு அழுகையுடனே அந்தக் குடும்பத்துக்குக் கழிந்தது.

மறுநாள் இறந்தவருக்குரிய இறுதிக் கிரிகைகளை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தபோது, அங்கே மறுபடி வந்த றம்புக்கணை பொலிசார் உங்கள் மகன் 'வசந்த' இறக்கவில்லை அவர் காயமடைந்து 'ராகம' ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். இது வேறு ஒருவரின் சடலம். தவறு நடந்துவிட்டது. இராணுவ அதிகாரிகள் வந்து அதை பொறுப்பெடுத்துச் செல்வார்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

'வசந்த' வின் பெற்றோருக்கு மிகப் பெரிய இன்ப அதிர்ச்சியும் அதே நேரம் இராணுவத்தின் மீது அடக்க முடியாத கோபமும் ஏற்பட்டது.

அன்று மதியம் அந்தச் சடலத்தை இராணுவ அதிகாரிகள் மறுபடி பொறுப்பெடுக்க வந்தபோது உயிரோடு இருக்கிறது யார், செத்துப்போனது யார் என்பதனை சரியாக கணக்கெடுக்கத் தெரியாத உங்களுக்கெல்லாம் எதற்கு இராணுவச் சீருடை. உங்களுக்கு துப்பாக்கி பிடித்து சுடத்தெரியுமா என்றெல்லாம் ஆத்திரம் தீரும்வரை வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார்கள்.




(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பௌத்த பிக்குகளின்....

கோரியுள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.கட்சியின் தலைவர்கள் இன்று கொழும்பில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

1994 செம்டம்பரில் ஆறு வருடகாலத்திற்கு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா சிறீலங்கா சட்திட்டங்களின்படி நான்கு வருடங்களின் பின்னர் தேர்தலை நடாத்தலாம்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறீலங்கா....

யான முறையில் ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டதாக குறிப்பிட்ட அவர். மலிவான விளம்பரங்களும், வெறும் பேச்சுக்களும் அவர்களுக்குரியவையல்ல எனச் சுட்டிக்காட்டினார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரிட்டனில்....

டனில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பதை நிறுத்து', பிரிட்டனே விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடு' என கோஷமிட்டுச் சென்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஊர்வலத்தின் முடிவில் பிரிட்டன் தூதரகத்திடம் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரிட்டனில் புலிகள்....

வழங்கியமையும் குறித்து செய்தியாளர் கேள்வியெழுப்பிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறீலங்காவில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் லண்டனில் இயங்கினாலும், அவை இங்குள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கே நிதி சேகரிக்கிறார்கள் என்பதை எவ்வாறு நிரூபிக்க முடியும்? அதேவேளை ஒரு போராட்ட இயக்கம் பிரிட்டனில் இருந்துகொண்டு பிரிட்டன் சட்ட விதிகளை மீறும் போதே அதன் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்பு....

சிக்கல்களினால் பெருமளவு பாதிக்கப்படுகின்ற சிறீலங்காவின் பொருளாதாரமானது அதனது பங்குச் சந்தையில் ஏற்பட்ட தோல்வியினால் அச்சுறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் சிறீலங்காவில் உற்பத்தியில் ஈடுபட்டுவந்த சில நிறுவனங்கள் மலேசியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட நாணயமதிப்புச் சரிவினால் பல கொள்வனவு உத்தரவுகளை இழந்து மூடப்பட்டுள்ளன. இதனால் சுமார் ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

இந்நிலமை வேறுபல தொழிற்கூடங்களுக்கும் ஏற்படலாம் என அஞ்சப்படும் அதேவேளை ஜப்பானிய நாணயத்திற்கு ஏற்பட்ட சரிவானது சிறீலங்காவிற்கான ஜப்பானிய உதவிகளை மேலும் குறைத்துள்ளது.


## நித்தி வாகன சேவை




வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்

உங்கள் தொடர்புகட்கு- நித்தி Tel: 01 48 05 02 14 / 01 43 03 07 08, (Répondeur) 01 49 23 97 32
அவசரத்தொடர்புகளுக்கு: 06 07 34 80 51

Pub


## 31ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

மலர்வு: 04.09.1973



உதிர்வு: 29.05.1998

### செல்லையா ரஞ்சித் (சுதாகர்)

*தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து*
*தாளாத துயரில் எம்மை*
*தவிக்க விட்டுச் சென்றுவிட்டாய்.*
*மாறாத நினைவுகள் எம்*
*மனதினையே வாட்டிடுதே....*
*உன் அன்பில் நிலைத்திருக்க*
*உவகையுடன் நினைத்திருந்தோம்,*
*காலன் உனைத் தேடிவந்து*
*கட்டியணைத்துக் கொண்டானோ...?*
*திங்கள் ஒன்று தீர்ந்த போதும்*
*தீரவில்லை உன் நினைவு....*

தமிழ்நாடு திருச்சியில் அகால மரணமான வல்வெட்டித்துறை மீனாட்சி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த எம் அன்புச் செல்வம் ரஞ்சித்தின் மரணச் சடங்கில் நேரில் கலந்து கொண்டோர்க்கும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதலளித்து எம் துயரில் பங்குகொண்ட அனைவர்க்கும் எம் நன்றிகள்.

துயருறும்
அன்பு மனைவி
அம்மா, அப்பா, சகோதரர்கள்

*தகவல்: செல்லையா (திருச்சி)*
*தொலைபேசி: 00 91 431459564*

Pub

## மரண அறிவித்தல்

உதிர்வு: 05.05.1908



மறைவு: 13.06.1998

### திருமதி தங்கம்மா பொன்னையா

சாவகச்சேரி - கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட தலைமை ஆசிரியர் பொன்னையாவின் துணைவியார் தங்கம்மா 13.06.98ல் காலமானார்.

இவர் தில்லைநாயகி, சுப்பிரமணியம், யோகம்மா, பிறைசூடி ஆகியோரின் அன்புத் தாயாரும் - கனகலிங்கம், மனோன்மணி, சிதம்பரப்பிள்ளை, கோகிலா ஆகியோரின் அன்பு மாமியாரும் - சுசீலா, கோடீஸ்வரன், உசீலா, புஸ்பலீலா, சசிகலா, சகிலா, ரேணுகா, மேனகா, ராதிகா, சந்திரிக்கா, மேகலா, யாழினி, தமிழ்நேசன், யசோதரன், ரோகினி, பிறைசினி, ராஜினி, சுபித்தா ஆகியோரின் அன்புப் பேத்தியும் - நதீபன், பிரவிணன், சாரா, ஜெகிதா, ஜெகிதன் மெலினா, யஸ்மின், ஜெசான், யோனாஸ், யோயல் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*தகவல்: திரு.திருமதி. சிதம்பரப்பிள்ளை (சுவிஸ்)*
*Tel: 031-922 03 24*

Pub


AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

ஈழமுரசு

Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:

"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris

Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64





லண்டனில் புதுப் பொலிவுடன்

கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் +
மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்வதற்கு

**Ganapathy Food & Wine**

34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185


# போரை முன்னெடுத்து செல்ல அகதிகளுக்கான உதவி குறைப்பு

சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்டு வரும் பாரிய நிதி நெருக்கடியை அடுத்து வட பகுதிக்கான உதவி நிவாரணங்களை குறைக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த இடம்பெயர்ந்த அகதிகளுக்கான உதவி எதிர்வரும் யூலை மாதத்தில் இருந்து குறைக்கப்பட உள்ளதாக சிறீலங்கா அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் என்.ஏ. ஒபடகே சிறீலங்கா ஜனாதிபதியை சந்தித்த பின் இம் முடிவை எடுத்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக படையினரின் போர் நடவடிக்கையால் பல கோடி பெறுமதியான ஆயுத தளவாடங்கள் இழக்கப்பட்டுள்ளன. போரை தொடர்ந்து நடாத்த அரசிடம் போதிய நிதியின்மையே உதவித் தொகையை குறைப்பதற்கான காரணம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்காக வடபகுதியின் யாழ். மாவட்டத்திலிருந்து 40 சதவிகிதமும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து 15 சதவிகிதமும், மன்னார் மாவட்டத்தில் இருந்து 15 சதவிகிதம் உதவியும் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசின் இத் திடீர் முடிவினால் வட மாகாணத்தில் 70,000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிவாரண உதவியின்றி பாதிக்கப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் பாரிசில் நடைபெற்ற சர்வதேச நிதி உதவி வழங்கும் மாநாட்டில் போரை நிறுத்தி அகதிகளுக்கான உதவி குறைக்கப்பட்டு நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என கேட்கப்பட்டிருந்தது. ஆனால், அரசோ போரை முன்னெடுத்துச் செல்வதற்காக, அகதிகளின் நிவாரணத்தை குறைப்பது எவ்வகையில் நியாயம் என பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

## பாரிசில் சர்வதேச இந்து ஒருமைப்பாட்டு மகாநாடு

இந்து ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதற்கும், சர்வதேச ரீதியாக புலம்பெயர்ந்துவாழும் இந்துக்களை ஒருங்கிணைப்பதற்குமான சர்வதேச மகாநாடு எதிர்வரும் 27ம், 28ம் திகதிகளில் ஐ.நா. கல்வி சமூக மேம்பாட்டு நிறுவனத்தில் (யுனெஸ்கோ) ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்தியா, தென்னாபிரிக்கா, மொரிஸியஸ், மலேசியா, அமெரிக்க, பிரித்தானியா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து சமய, சமூகப் பிரமுகர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர்.

## பிரிட்டனில் புலிகள் நிதி திரட்டுவதை ஆதாரம் இல்லாமல் தடைசெய்ய முடியாது - பிரிட்டன் தூதுவர்

விடுதலைப் புலிகள் இயக்கம் தமது நடவடிக்கைகளுக்காக பிரிட்டனில் நிதி திரட்டுகிறார்கள் என்பதை நிரூபிக்க ஆதாரங்கள் இல்லை. அதனால் அவ் இயக்கத்தை அங்கு தடை செய்ய முடியாது என பிரிட்டன் தூதுவர், பௌத்த பிக்குகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலமும், கடிதம்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பிரிட்டனில் விடுதலைப் புலிகளை தடைசெய்யக் கோரி பிக்குகள் ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச ரீதியில் தடைசெய்ய வேண்டும் எனக் கோரியும், வெளிநாடுகளில் நிதி சேகரிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும் கொழும்பில் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய் அன்று சிறீலங்காவின் சமாதானம் விரும்பும் பிரஜைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொழும்பு நகர மத்தியில் இருந்து புறப்பட்டு பிரிட்டன் தூதராலயத்தின் முன் முடிவுற்றது. இவ் ஊர்வலத்தில் விடுதலைப் புலிகளை தடைசெய்யக் கோரி பல்வேறு பதாகைகளை தாங்கிய வண்ணம் 'பிரிட்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சிறீலங்கா ராஜதந்திரம் புலிகளிடம் தோற்கிறது

### முன்னாள் தூதுவர் குற்றச்சாட்டு

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சரின் ஆடம்பரமான வெற்றிபற்றிய அறிக்கைகள் தோல்வியுற ஆரம்பித்துள்ளதாக முன்னாள் தூதுவரும் சிறீலங்கா வெளிவிவகார அமைச்சின் அதிகாரியுமான கொடகே குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தமிழர் தொடர்பான அண்மைய பிரகடனங்கள் புலிகளுக்கு கிடைத்த பெரிய ராஜதந்திர வெற்றியென வர்ணித்துள்ள கோடகே கதிர்காமரின் நடவடிக்கைகள் வெறுமனே அர்த்தமற்ற அறிக்கைகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அர்த்தமுள்ள அதேவேளை அமைதி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பௌத்த பிக்குக்களின் வேண்டுதலுக்கு ஆதரவு

### நிபந்தனையுடன் தேர்தலை ஒத்திவைக்க தயார்

சிறீலங்காவின் பிரதான எதிர் கட்சியான ஐ.தே.கட்சி பிரதேச சபை தேர்தல்களை ஒத்திவைக்கும் அரசின் முயற்சிகளுக்கு நிபந்தனையுடன் ஆதரவுதர முன்வந்துள்ளது.

தமிழர்களுக்கு எதிரான யுத்தம் வெற்றிபெறும்வரை தேர்தல்கள் அனைத்தையும் ஒத்திவைக்க வேண்டும் என பௌத்த பீடாதிபதிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இடம்பெற இருக்கும் பிரதேசசபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு சம்மதித்துள்ள ஐ.தே.கட்சி செப்டெம்பர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்த சந்திரிகா சம்மதிக்க வேண்டுமென

**ஐ.தே.க அறிவிப்பு**

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொழும்பு பங்குச்சந்தை வீழ்ச்சி பொருளாதார நெருக்கடியில் சிறீலங்கா

கொழும்பு பங்குச்சந்தை ஏழுவருடங்களின் பின்னர் மீண்டும் பாரிய பின்னடைவை கடந்தவாரம் சந்தித்தது. '606' என்னும் பங்குச் சந்தை சுட்டெண்ணை கடந்தவாரம் எட்டிய கொழும்பு எதிர்வரும் காலங்களில் மேலும் வீழ்ச்சியடையலாம் என அஞ்சப்படுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள ஆசியாவின் பாரிய நாணய மாற்று

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


லண்டனில்

ஆச்சீஸ்

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள



**Archie'S** Tel: 0181-2053652

*205, Edgware Road, Colindale-Nw 9.*